www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு
16 ஜூன்-15 ஜூலை '91 6/15-16 விலை ரூ.2



ராஜீவ் கொலை விசாரணை: அரசியல் பழிவாங்கும் முயற்சி




படிப்பகம்

www.padippakam.com

# விடுதலைப் புலிகளின் இழிசெயல்: ராஜீவ் கொலைக்கு புதிய ஜனநாயகம் – புதிய கலாச்சாரம் மீது வீண்பழி!

ராஜீவ் காந்தி கொலைக்கான ''பழி''யை புதிய ஜனநாயகம், புதிய கலாச்சாரம் ஆகிய பத்திரிக்கைகள் மீதும் அவற்றைச் சார்ந்த புரட்சியாளர்கள் - அமைப்புக்கள் மீதும் சுமத்தும் வெட்கக்கேடான இழிசெயலில் விடுதலைப் புலிகள் இறங்கியுள்ளனர். விடுதலைப் போராளிகளுக்குரிய தகுதியையும் மரியாதையையும் அவர்கள் இழந்து போவதைத்தான் இது குறிக்கிறது.

குண்டு வெடிப்பில் ராஜீவ் கொல்லப்பட்ட நாளில் இருந்து பலரது கவனமும் சந்தேகமும் ஈழ விடுதலைப் புலிகள் மீதுதான் குவிந்தது. தாங்கள் அதைச் செய்யவில்லை என மறுத்ததோடு புலிகள் நிற்கவில்லை. இலங்கை அரசோ, ஈழ துரோகக் குழுக்களோ, இந்திய இராணுவத்தால் பாதிப்புக்குள்ளான பெண்ணோ ராஜீவைக் கொன்றிருக்கலாம் என்று லண்டனில் உள்ள புலிகளின் அதிகாரப் பூர்வ அறிவிப்பாளர் கிட்டு கூறினார். இந்தியாவில் அரசமைப்புக்குப் பகைமையாக உள்ள பல சக்திகளில் ஏதாவது செய்திருக்கலாம் என்று யாழ்பாணத்தில் பேட்டியளித்தனர் புலிகளின் அரசியல் பிரமுகர்களான ஆண்டன் பாலசிங்கமும், யோகியும். கொலையாளிகளைக் கண்டு பிடிப்பதில் தாங்களும் உதவுவதாக முன்வந்தார் கிட்டு.

ஜூன் 11ந் தேதி இந்தியன் எக்ஸ்பிரஸ் - தினமணி நிருபருடன் லண்டனில் இருந்து தொலைபேசியில் பேட்டி கொடுத்த கிட்டு பின்வருமாறு கூறியுள்ளார். ''தமிழ்நாட்டில் சில தீவிரவாதக் குழுக்கள் செயல்படுகின்றன. அவை அதிகாரப் பூர்வ பத்திரிக்கைகள் கூட நடத்துகின்றன. புதிய ஜனநாயகம், புதிய கலாச்சாரம் ஆகிய அத்தீவிரவாதப் பத்திரிக்கைகள் லண்டனில் கூட விநியோகிக்கப் படுகின்றன. ராஜீவின் கொலைகாரன் என்று சந்தேகிக்கப்படும் ''குர்தா'' அணிந்த ஆசாமி அந்தப் பத்திரிக்கைகளின் நிருபர்களில் ஒருவராக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். அந்த ஆள் இலங்கைக்காரன் போலத் தெரியவில்லை; பரிச்சயமானதாகவும் அவன் முகம் இல்லை. கொலைகாரியான கருத்தப் பெண் யாழ்ப்பான பாணியில் தலையலங்காரம் செய்திருந்தாலும் வேண்டுமென்றே அப்படிச் செய்திருக்க வேண்டும். மற்றபடி அவள் தமிழ் நாட்டுப் பெண் போலத்தான் தெரிகிறாள்'' என்று கிட்டு தனது பேட்டியில்.கூறியுள்ளார்.

கிட்டுவின் பேட்டி பகுத்தறிவு நாடகமாடும் - புலிகளின் துதிபாடும் தி.க. ''விடுதலை'' உட்பட வேறு சில தமிழ் நாளேடுகளிலும் வெளிவந்துள்ளது. ஆனால், அது வெளியான அன்றிலிருந்து ராஜீவ் கொலையில் ஈழத் தமிழர் சிலரோடு சம்பந்தப்பட்டிருப்பதாக சென்னைவாசிகள் சிலரைக் கைது செய்வது தொடருகிறது. அது வேறு விசயம்.

இதுபோன்று வீண்பழி - அவதூறு சுமத்தப்படுவதும், தாக்கப்படுவதும் நமது அமைப்புக்கும் தோழர்களுக்கும் புதிதல்ல. அரியலூர் - மருதையாற்று பாலம் குண்டு வெடிப்பு - ரயில் கவிழ்ப்பு, திருவையாறு பாலம் குண்டுவெடிப்பு, திருச்சி - நேரு சிலையும் தஞ்சை நினைவுச் சின்னமும் தகர்ப்பு, பட்டுக்கோட்டை வட்டாரத்தில் வாகனங்களுக்குத் தீவைப்பு ஆகியனவற்றிலும் இவ்வாறு நடந்துள்ளது. நமது தோழர்கள் இந்தச் சம்பவங்களில் சம்பந்தப்படவில்லை என்று தெரிந்து, அவர்கள் சந்தேகிக்கும் நபர்களைக் காட்டிக் கொடுக்கும்படி நிர்பந்தித்து, துன்புறுத்தியபோது நமது தோழர்கள் மறுத்தே வந்திருக்கிறார்கள்.

ஆனால், விடுதலைக்குப் போராடுவதாகக் கூறும் புலிகள் ஏன் இத்தகைய இழிசெயலில் ஈடுபட வேண்டும்? அவர்களது பாசிச அரசியலும், அதை நாம் விமர்சித்து வருவதும் தான் காரணம். புலிகளின் இச்செயல் குறித்து நாம் வருந்தவோ அஞ்சவோ போவதில்லை. உண்மையில் நமக்கு அதிர்ச்சியூட்டுவது என்னவென்றால், தீங்களை மார்க்சிய - லெனினியப் புரட்சியாளர்கள் எனக் கூறிக்கொண்டு புலிகளை ஆதரித்து வரும் இங்குள்ள சிலர் அவதூறை ஏதாவது ஒரு வகையில் நியாயப் படுத்துவதுதான்! இறுதியில் நேர்மையான, புரட்சிகர அரசியலே வெல்லும்; இத்தகைய அவதூறுகளும் சதிகளும் வெல்ல முடியாது என்ற நம்பிக்கையோடு நமது பணியைத் தொடருவோம்!

— ஆசிரியர் குழு

## தமிழக நாளேடுகளுக்குத் தரப்பட்ட மறுப்பு அறிக்கை

இன்றைய இந்தியன் எக்ஸ்பிரஸ் (12.6.91) நாளேட்டில், விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த கிட்டு அவர்கள் கூறியதாக ஒரு செய்தி வெளியாகியுள்ளது. ராஜீவ் கொலை தொடர்பாகத் தேடப்படும் குர்தா அணிந்த நபர் ''புதிய கலாச்சாரம்'' அல்லது ''புதிய ஜனநாயகம்'' பத்திரிகைகளைச் சேர்ந்த செய்தியாளராக இருக்கக்கூடும் என்று கிட்டு அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

கிட்டுவின் கூற்றை நாங்கள் வன்மையாக மறுக்கிறோம். ராஜீவின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளையும், இலங்கைக்கு இந்திய ராணுவத்தை அனுப்பியதையும் நாங்கள் எதிர்த்தோம்; எதிர்க்கின்றோம். ஆனால், தனிநபர் கொலைகளின் மூலம் சமூக மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்ற கொள்கையில் எங்களுக்கு நம்பிக்கையில்லை. கிட்டு குறிப்பிட்டுள்ளதைப் போல எங்களது நபர்கள் யாரும் செய்தி சேகரிக்கும் நோக்கத்துக்காகக் கூட ஸ்ரீபெரும்புதூர் செல்லவில்லை. அத்தகைய தோற்றம் கொண்ட நபர்களும் எம்மிடம் யாருமில்லை. இருப்பினும் எமது பத்திரிகைகளுக்கு எதிராக கிட்டு உள்நோக்கத்துடன் அவதூறு செய்துள்ளார்.

ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை முற்றிலும் சரியானதென்று ஆதரிக்கும் அதே சமயம், ஈ.பி.ஆர்.எல்.எஃப், டெலோ, பிளாட் போன்ற இந்திய அரசு ஆதரவு அமைப்புகளின் துரோகத்தையும், விடுதலைப் புலிகளின் பாசிச நடவடிக்கைகளையும் தொடர்ந்து எமது பத்திரிகைகளில் எதிர்த்து எழுதி வருகிறோம்.

குறிப்பாக, புலிகள் ஈழ விடுதலைக்காகப் போராடும் சிறிய ஜனநாயக அமைப்புகளைத் தடை செய்து ஒடுக்குகின்றனர். சிங்கள சிவிலியன்களையும், ஈழ முஸ்லீம்களையும் கொலை செய்கின்றனர்; ஈழ முஸ்லீம் மக்களை ஈழத்திலிருந்து விரட்டியடிக்கின்றனர். ராஜனி திரணகம போன்ற ஜனநாயக சக்திகளைக் கொலை செய்கின்றனர். புலிகளின் இத்தகைய பாசிச நடவடிக்கைகளை துவக்கமுதலே நாங்கள் எதிர்த்து வருகிறோம். உலகம் முழுவதும் வாழும் ஈழத்தமிழர்கள் மத்தியில் எமது பத்திரிகைகள் பெரும் ஆதரவு பெற்றுள்ளன. இதனால் ஆத்திரமுற்று எமது வாசகர்களையும், புலிகளுடன் உடன்படாத ஈழ அகதிகளையும் வெளிநாடுகளில் கூட புலிகள் தாக்குகின்றனர்; மிரட்டுகின்றனர்.

ஏற்கனவே ''புதிய கலாச்சாரம்'', ''புதிய ஜனநாயகம்'' ஏடுகள் மீது ஆத்திரம் கொண்டுள்ள கிட்டு, இப்போது ராஜீவ் கொலையுடன் எம்மைச் சம்பந்தப் படுத்திப் பொய்ப் பிரச்சாரம் செய்கிறார். முழுவதும் உள்நோக்கம் கொண்ட கிட்டுவின் கூற்றை வன்மையாகக் கண்டிக்கிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

ஆறாம் ஆண்டு

15 - 16

16 — 30 ஜூன் - 1 - 15 ஜூலை '91

உள்நாடு :
தனி இதழ் : ரூ.2
ஆண்டு சந்தா : ரூ.48

வெளிநாடுகள் :
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா : US $ 11

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்:

இரா.சண்முகராசு
ஆசிரியர், புதிய ஜனநாயகம்
21, பாலாஜிசிங் தெரு
சைதாப்பேட்டை
சென்னை - 600 015.

# காங்கிரசு கனவு நொறுங்கியது

மீண்டும் ஒரு தொங்குநிலை நாடாளுமன்றம். மீண்டும் 'நித்திய கண்டம், பூரண ஆயுசு' கொண்ட ஒரு நிலையற்ற, சிறுபான்மை அரசாங்கம். எனவே மீண்டும் நாடாளுமன்ற அராஜகம் தொடரும் என்பதில் சந்தேகமில்லை. அதாவது பதவிக்காக கோஷ்டிச் சண்டை, குடுபிடிச் சண்டை, ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சிகள்; கட்சி தாவல்கள், பிளவுகள், நாடாளுமன்ற ரௌடித்தனங்கள்; எம்.பிக்கள் விலைபோவது, அணி சேர்வது, மறு அணி சேர்வது; கட்சி தாவிகள், பதவி வெறியர்களின் அரசாங்கம் அமைவது - இவையெல்லாம் மீண்டும் அரங்கேறும்.

அரசியல் நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்காகத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. ஆனால் அத்தேர்தல்கள் தீர்வாக அமையவில்லை. மாறாக அரசியல் நெருக்கடிகளைக் கூர்மைப்படுத்தி விட்டன, அதிகமாக்கி விட்டன. சாதி, மத, இன, பிராந்திய ரீதியிலான வேறுபாடுகள் - ஏற்றதாழ்வுகளை இத்தேர்தல்கள் வெளிப்படுத்தியுள்ளன. இனி 'அகில இந்திய'க் கட்சி என்றும் அறுதிப்பெரும்பான்மை பெற்ற கட்சி எனவும் வெற்றி பெற்று நிலையான ஆட்சி அமைவது சாத்தியமா என்கிற கேள்வி எழுந்துவிட்டது. இந்த அரசியல் நிலையற்ற தன்மை காரணமாக ஏகாதிபத்திய நாடுகள் இந்தியாவுக்குக் கடனளிக்கவும் இங்கு முதலீடு போடவும் முன்வராதென ஆளும் வர்க்கங்கள் அஞ்சுகின்றன. எனவே பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீள்வதும் சாத்தியமில்லை எனவும் அஞ்சுகின்றன. மக்கள் தெளிவற்ற, குழப்பமான முடிவு அளித்து விட்டார்கள் எனப் பழி போடுகின்றன. காலனியவாதிகளும், பின்னர் காங்கிரசுக்காரர்களும் திணித்த பார்ப்பன - பனியா நலனுக்கான 'அகில இந்தியம்' செயற்கையானது; அரசியல் கட்சிகள் அனைத்தின் மீதும் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டார்கள்; எந்த ஒரு அரசியல் கட்சியின் மீதும் மக்கள் முழுமையான நம்பிக்கை வைக்கத் தயாரில்லை என்பதைத் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன.

பரம்பரை ஆட்சியின் நாயகன் ராஜீவையே விலையாகக் கொடுத்தும் காங்கிரசு கனவு கண்டவாறு மீண்டும் பெரும்பான்மையாக வெற்றி பெற்று ஆட்சியைப் பிடிக்க முடியவில்லை. 'நிலையான ஆட்சி, தேசிய ஒருமைப்பாடு' ஆகிய காங்கிரசு மாய்மாலங்களைப் பெரும்பான்மையான மக்கள் நம்பவில்லை. கொல்லப்பட்ட ராஜீவின் அம்மணமான பிணம், சவப்பெட்டி, உண்மையான - போலியான 'அஸ்தி கலசங்கள்; வானொலி - வானொளி - பத்திரிகைகள் மூலம் ஒப்பாரி ஆகிய அருவெறுப்பான, கீழ்த்தரமான பிரச்சாரங்கள் கூட பெரும்பான்மையான வெற்றியைத் தேடிக் கொடுத்து விடவில்லை. என்றாலும் இப்போது கிடைத்திருக்கும் எண்ணிக்கை கூட ராஜீவின் சாவுக்குப் பிறகு வீசிய அனுதாப அலையின் விளைவு தான். அதுவும் கூட அயோத்தி, மண்டல் விவகாரங்களில் காங்கிரசின் இரட்டை வேடத்தைக் கண்ட பீகார், உத்திரப் பிரதேசத்தில் பலனளிக்கவில்லை; அங்கே படுதோல்வி கண்டது.

ஆளும் வர்க்கங்களின் ஒரு பெரும் பிரிவின் ஆதரவு - ஏராளமான நிதிவசதி, நாடு தழுவிய ஆர்.எஸ்.எஸ் அமைப்பு வலை பின்னல், சினிமா - வானொளி நடிகர் நடிகை முதல் கிரிமினல் குற்றவாளிகள் வரை பல பிரபலங்கள், ஆவேச - ஆடம்பரத் தேர்தல் பிரச்சாரம் ஆகியவற்றை வைத்து இந்துமத வெறி பாசிச அலையை எழுப்பி ஆட்சியைப் பிடித்து விட எத்தனித்தது பாரதீய ஜனதா கட்சி. இரண்டாவது பெரியதும் அதிக எண்ணிக்கை எம்.பிக்கள் பெற்றும் அதைக் காட்டி சமாதானம் அடைந்தாலும் அதனுடைய எதிர்பார்ப்புகளும் நிறைவேறவில்லை. அது ஆட்சியிலுள்ள ம.பி, ராஜஸ்தான், இமாசலப் பிரதேசத்தில் முக்கியமாக பின்னடைவுக்குள்ளானது. மராட்டியம், அரியானா கைவிட்டன.

ஆனாலும் பார்ப்பன - பனியா ஆதிக்கம் புரியும் உ.பி. குஜராத்தில் பெரும் வெற்றிகள் பெற்றதோடு கர்நாடகா, ஆந்திரா, அசாமில் பாரதீய ஜனதா காலூன்றியுள்ளது. முக்கியமாக உ.பி.யில் ஆட்சியைப் பிடித்துள்ளது. உ.பி.யில் பாரதீய ஜனதா - ஆர்.எஸ்.எஸ் கும்பலை விட விசுவ இந்து பரிசத் - பஜ்ராங்தள் ஆகிய இந்து மதவெறி சந்நியாசிகள் - மகாந்துகள் மற்றும் பாசிச குண்டர்கள்தாம் பதவிகளைப் பிடித்துள்ளனர். எவ்வாறாயினும் பாரதீய ஜனதாக் கட்சியின் வளர்ச்சி, குறிப்பாக உ.பி.யில் அது ஆட்சியைக் கைப்பற்றியிருப்பது ஆகியன இந்து மதவெறி பாசிசம் நாட்டின் பிரதான அபாயமாகிவிட்டதையே குறிக்கின்றன. பாசிச ராஜீவ் கும்பல் மட்டுமல்ல, தேசிய முன்னணி - 'இடது'சாரிக் கூட்டணியும் கூட அதனுடன் பல்வேறு அளவுகள், பல்வேறு கட்டங்களில், சமரசம் செய்து கொண்டதே அதன் வளர்ச்சிக்கு முக்கியக் காரணமாக அமைந்தது.

ராஜீவ் கொலையின் அனுதாப அலை தேசிய முன்னணியின் சமூக நீதி, மதச்சார்பின்மை ஆகியவற்றுக்கான ஆதரவை அடித்துக் கொண்டு போய்விட்டது. ஆந்திரா, ஒரிசா, உ.பி.யில் கணிசமாக இடங்களைப் பெற்றது; பீகாரில், அதன் வெற்றி மண்டல்

படிப்பகம்

www.padippakam.com

**அரசியல் நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்காக தேர்தல்கள் நடத்தப்பட்டன. ஆனால் அத்தேர்தல்கள் தீர்வாக அமையவில்லை. மாறாக, அரசியல் நெருக்கடிகளைக் கூர்மைப்படுத்தியுள்ளன.**



அம்மணமான பிணத்தைக் காட்டி அருவெறுப்பான அவதூறுப் பிரச்சாரம்.

ஆதரவோடு பீகாரின் எம்.ஜி.ஆர் எனப் பெயர் பெற்ற முதல்வர் லல்லுப் பிரசாத் யாதவின் தனிப்பட்ட ஆதரவும் முக்கியமாக இருந்தது. இருப்பதை விட்டுப் பறப்பதைப் பிடிக்கும் ஆசையிலே போலிக் கம்யூனிஸ்டுகள் கேரளத்தை இழந்தார்கள். காங்கிரசு மற்றும் இந்து மதவெறி பாசிசத்தை எதிர்த்த எதிர்மறையான வாக்குகள் காரணமாக - தகுந்த மாற்று இல்லாத நிலையில் 'இடது' சாரி கூட்டணி மேற்கு வங்கத்தில் மீண்டும் ஆட்சியைப் பிடித்துள்ளது.

நாட்டிலேயே மிக அதிக அளவு கள்ளப் பணத்தை வாரி இறைத்த அ.தி.மு.க -காங்கிரசு கூட்டணி ஆபாசம், அருவெறுப்பு, வக்கிரம், அவதூறு, அராஜகத்தில் மாற்றுத்தரப்பை விஞ்சிய நிலையில், அதன் தேர்தல் வெற்றி யாரும் எதிர்பாராததல்ல. ஆனால் ராஜீவ் கொலைக்குப் பிறகு அராஜக வன்முறை வெறியோடு தமிழ்நாட்டையே இழவு வீடாக்கி நடத்திய ஒப்பாரி - பாசிச கோயாபல்சு பிரச்சாரம் அக்கும்பலே எதிர்பாராத வெற்றியைத் தந்தது. தமிழக மக்களிடையே குற்ற உணர்வை ஏற்படுத்தி அரசியல் ஆதாயம் அடைந்தது. கருணாநிதியும் இதற்கு ஒத்தூதும் வகையிலேதான் ஓலமிட்டார். அரசியல் ஆண்மையுடன் இதை எதிர்க்கத் துணியவில்லை. ''செத்தவனெல்லாம் உத்தமன'' என்ற தத்துவப்படி பாசிச வக்கிர கோமாளி எம்.ஜி.ஆர் பெயரையும், ராஜீவ் கொலை அனுதாபத்தையும் கூட பயன்படுத்திக் கொள்ள முயன்றார். இந்த அரசியல் கோழைத்தனம் காரணமாகவே அவரது கட்சி முற்றாகத் தோல்வி கண்டது.

''கூட்டணி ஆட்சி என்பது கூட்டாஞ்சோறு தான்'' ''சிறுபான்மை ஆட்சி என்பது நிலையற்ற ஆட்சிதான்' என்று மாற்றுத் தரப்பை ஏளனமும் எதிர்ப்பிரச்சாரமும் செய்து வந்த காங்கிரசு, தானே அத்தகைய ஆட்சி அமைத்துள்ளது. நேரு - காந்தி குடும்பத்தின் சர்வாதிகார பரம்பரை ஆட்சி ஒழிந்தது என ''ஜனநாயகவாதி'கள் பெருமூச்சு விடுகின்றனர். ஆனால் இப்போது ஆட்சிக்கு வந்திருக்கும் நரசிம்மராவோ சர்வதேச ஆயுத - போதை மருந்துக் கடத்தல் கிரிமினல் மஃபியா கும்பலின் நம்பகமான பிரதிநிதி.

இவருடைய தகுதிகள் என்ன? அம்பாணி, அதனான் கஷோகியின் எடுபிடி. சந்திராசாமி, மாமாஜியின் சீடர்; இவர்களுடன் கள்ள ஆவணத் தயாரிப்பு (ஃபோர்ஜரி) குற்றங்கள் புரிந்தவர். நாட்டின் எந்தத் தொகுதியிலும் தானே தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற முடியாதவர். அதாவது இவருக்கென வேரும் விழுதும் கிடையாது. அதிகார வர்க்கம் நீட்டிய இடத்தில் கையெழுத்துப் போடுபவர்; எல்லாவற்றையும் விட முக்கியமாக கட்சிக்குள் ஆதரவுமில்லை. வயோதிகர் -நோயாளி - நீண்ட காலம் வாழமாட்டார் என்பவைதான்!

எப்படியோ ஒரு மாற்று அரசாங்கம் அமைந்து விட்டது என ஆளும் வர்க்கத்தினர் சற்று நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றனர். இப்போதைக்கு மற்றொரு தேர்தலை நாடும் மக்களும் தாங்கமாட்டார்கள், எனவே சர்வ கட்சியும் ஏற்கும் வகையில் - பொதுக்கருத்து அடிப்படையில் காங்கிரசு ஆட்சி நடத்த வேண்டும். தேசிய முன்னணி - 'இடது' சாரி கூட்டணியானது 'தேசிய' நலன் கருதி இந்த ஆட்சியை ஆதரிக்க வேண்டும் என்று முதலாளித்துவப் பத்திரிகைகள் உபதேசிக்கின்றன. ஆனால் காங்கிரசுக்குள்ளும் வெளியிலும் நடக்கும் பதவி, கோஷ்டிச் சண்டைகள் - நாடாளுமன்ற அராஜகம் தவிர்க்க முடியாதென என்று இந்தச் சில நாட்களின் நிகழ்ச்சிகளே காட்டி விட்டன. காங்கிரசுக்குள் நுஸ்லிவாடியா - கோயங்கா பிரதிநிதியான சரத்பவாரும், அம்பாணி - பிர்லா பிரதிநிதியான நரசிம்மராவும் கோடிக்கணக்கில் வாரி இறைத்து எம்.பிக்களை வளைக்க முயன்றனர். சி.பி.எம்.க்குள் நம்பூதிரிபாட் - ஜோதி பாசுவுக்கு இடையேயும் அதற்கும் சி.பி.ஐ.க்கும் இடையேயும், ஜனதா தளத்துக்குள் அஜித்சிங், பிஜு பட்நாயக் - வி.பி.சிங், லல்லுவுக்கும் இடையேயும் காங்கிரசு அரசுடனான உறவு குறித்து மோதல்கள் வெடித்தன.

இவையெல்லாம் ஒருபுறம் இருந்தாலும், அந்நிய செலவாணி வரவு செலவு பற்றாக்குறையினால் நாடே திவாலாகியுள்ளதாலும் சர்வதேச நிதி நிறுவன உலக வங்கிக் கடனுக்கான நிபந்தனையாலும் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி; காஷ்மீர், பஞ்சாப், அசாம் பிரச்சனைகளாலும் சாதி, மத, இனப்பிரிவுகளால் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி என்பன போன்ற எதையும் தீர்ப்பதற்கான வழிவகை எதுவும் இவர்களிடம் கிடையாது. ஏகாதிபத்தியங்களிடம் நாட்டின் பொருளாதாரத்தை அடகு வைப்பது, அரசு பயங்கரவாதத்தை ஏவிவிடுவது, இந்துமத வெறி பாசிச சக்திகளிடம் சமரசம் செய்து கொள்வது ஆகிய இவைதான் ஆளும் வர்க்கத்தினரின் தீர்வுகளாக வைக்கப்படுகின்றன. போலியான சமூக நீதி போலியான ஜனநாயகம், போலியான மதச்சார்பின்மை பேசும் தேசிய முன்னணி 'இடது' சாரி கூட்டணியும் கூட இதற்கு விதிவிலக்கல்ல.

ஆகவே ஏகாதிபத்திய - நிலப்பிரபுத்துவ இந்துமதவெறி பாசிசத்துக்கு எதிராக புரட்சிகர சக்திகளின் தலைமையில் அணிதிரள்வது என்கிற முற்றிலும் மாறுபட்ட தீர்வுதான் இந்த நாடு எதிர்கொண்டுள்ள பிரச்சனைகளுக்குச் சரியான தீர்வாக உள்ளது. ●



படிப்பகம்

www.padippakam.com

# காங்கிரசு வெற்றிக்காக ஆர்.வி., சு.சுவாமி, சேஷன் நடத்திய தேர்தல் மோசடிகள்



ஆர்.வெங்கடராமன் - இந்திய அரசுத் தலைவர். டி.என்.சேஷன் - இந்தியத் தலைமைத் தேர்தல் கமிசனர். சுப்பிரமணிய சுவாமி - இந்தியச் சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர். இந்த மூவர் கும்பல் இப்போது நடந்து முடிந்த தேர்தல்களையும் அதன் முடிவுகளையும் சிதைத்து சீரழிப்பில் ஆற்றிய பங்கு மிகவும் முக்கியமானது.

இரண்டு நோக்கங்களை முன்வைத்து இந்தக் கும்பல் செயல்பட்டது. முதலாவதாக, காங்கிரசு பெரும்பான்மை பெரும் வகையில் தேர்தல் முறைகேடுகளில் ஈடுபடுபவதற்கு அனுமதிப்பது; அதற்கேற்ப தேர்தல் விதிமுறைகளை வளைத்து உத்திரவுகள் பிறப்பிப்பது; அதன் முறைகேடுகளுக்கு எதிராக வரும் எந்தவொரு புகாரையும் கண்டு கொள்வதில்லை. எதிர்க்கட்சிகள், குறிப்பாக தேசிய முன்னணி - இடதுசாரி கூட்டணிக்கு வெற்றி வாய்ப்புடைய தொகுதிகள் - மாநிலங்களில் தேர்தல்களை முடக்குவது. மத்தியில் காங்கிரசு அரசு அமையுமானால், அதன் பிறகு அத்தொகுதிகளில் தேர்தல்கள் நடத்தும் வகையில் எப்படியாவது தள்ளிவைப்பது.

இரண்டாவதாக, காங்கிரசு அரசமைக்கும் வாய்ப்பில்லாவிட்டால் தேர்தல்களை முடக்குவது அல்லது தள்ளி வைப்பதன் மூலமோ, ''தொங்கு நிலை'' நாடாளுமன்றத்தின் ஆபத்தைக் காரணங்காட்டி தாமும் தமது கூட்டாளிகளுமாகச் சேர்ந்து அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்வது. இதற்காக தேசிய அரசாங்கம் அமைப்பது, அவசர நிலைப்பிரகடனம் செய்வது, ஜனாதிபதி ஆட்சி முறைக்கான அரசியல் நிர்ணய சபை அமைபபது போன்ற யோசனைகளை முன்வைத்துப் பிரச்சாரம் செய்தது. நாடு எதிர்கொண்டுள்ள அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணும் நல்ல நோக்கத்தோடு இவற்றைச் செய்வதாக நாடகமாடியது.

பிரபல அரசியல் தரகனும் ''ஃபோர்ஜரி''ப் பேர்வழியும் சர்வதேச மஃபியா கும்பலின் பிரதிநிதியுமான சுப்பிரமணிய சுவாமியின் முன் முயற்சியில் சந்திரசேகர் ஆட்சி அமைந்ததும், எப்போது வேண்டுமானாலும் தேர்தல்கள் வரும் நிலை ஏற்பட்டுவிட்டது. அப்போது தலைமைத் தேர்தல் கமிசனராக இருந்த பெரிசாஸ்திரி இறந்துபோனார். தற்காலிக கமிசனராக ரமாதேவி இருந்தார். இந்திய சட்டச் சேவை (ஐ.எல்.எஸ்.) துறை அதிகாரிகளையே தலைமைக் கமிசனராக நியமிக்கும் வழக்கப்படியும், அனுபவம் உள்ள முதிய அதிகாரி என்பதாலும் ரமாதேவியின் பெயரையே பிரதமர் சிபாரிசு செய்திருந்தார்.

இறுதி நேரத்தில் திடீரென்று டி.என்.சேஷனை நியமிக்கும்படி சு.சுவாமியும், ஆர்.வி.யும் செய்து விட்டனர். சட்ட அனுபவம், பயிற்சி - படிப்பில்லாத சேஷன் விரைவிலேயே ஓய்வுபெற இருந்த ஐ.ஏ.எஸ். அதிகாரி. இருந்தும் அவருக்கே ஐந்தாண்டு பதவி நீடிப்பும் முக்கிய பொறுப்பு தரும்படி நிர்பந்தித்தனர். காரணம், அவர் பாசிச ராஜீவ் கும்பலின் விசுவாச ஊழியர்; அப்போது அமைச்சரவை செயலாளராக இருந்தவர்.

சந்திரசேகர் ஆட்சி கவிழ்ந்த்தும், நாடாளுமன்றத் தேர்தல்களை நடத்தும்படி அது சிபாரிசு செய்தது. அவ்வாறு செய்யாது பல நாட்கள் காலங்கடத்தினார், அரசுத் தலைவர் வெங்கடராமன். எதிர்க் கட்சிகளை உடைத்து விலை பேசி கட்சி மாறிகளை வைத்து பாசிச ராஜீவ் ஆட்சியைக் கொண்டு வர முயன்றார். சு.சவாமி இதற்கான ''அரசியல் மாமா'' வேலையில் தீவிரமாக ஈடுபட்டார். அந்த முயற்சி தோல்வியுற்றது. பிறகு தேசிய அரசாங்கம் அமைக்க முயன்றார். அதிக எண்ணிக்கை உடைய காங்கிரசே முக்கிய அதிகாரம் பெறும் என்கிற நம்பிக்கைதான் இதற்குக் காரணம். அந்த முயற்சியும் தோல்வியுற்றது. வேறு வழியின்றி தேர்தல்களுக்கு உத்திரவிட்டார்.

அதன்பிறகு சேஷனை மையமாக வைத்து அதிகார பூர்வ, சட்டப்பூர்வமான முறையில் தேர்தல் மோசடிகள் செய்வதில் இக்கும்பல் இறங்கியது. எம்.ஜி.ஆரின் எடுபிடி பி.எச் பாண்டியன் செய்ததைப்போல ''வானளாவிய அதிகாரம்'' இருப்பதாகச் சொல்லிக்கொண்டு கொட்டமடிக்கத் துவங்கி விட்டார், சேஷன்.

**கல்கத்தா, வாக்குச்சாவடி முன் செருப்பு மாலையுடன் சேஷன்**

☆ அத்வானி நடத்திய ரத யாத்திரையில் பாரதீய ஜனதா கட்சியின் தாமரை சின்னம் வரையப்பட்டிருந்ததைக் காரணம் காட்டி அக்கட்சியின் அங்கீகாரத்தை ரத்து செய்து, அதன் சின்னத்தையும் தடை செய்யும்படி தேர்தல் கமிசனிடம் காங்கிரசு வழக்குத் தொடுத்தது. முன்பு மிஜோரத்தில் கிறிஸ்துவ ஆட்சி அமைப்பதாகத் தேர்தல் பிரச்சாரம் செய்த காங்கிரசையும் தடை செய்ய வேண்டுமென பா.ஜ.க. பிரச்சினையைக் கிளப்பவே, வழக்கு விசாரிக்க இருந்த சேஷன் பீதி அடைந்தார். அதேபோல ஜனதா தளத்துக்கு எதிராக உரிமை பாராட்டி வழக்குப் போட்டிருந்தது சந்திரசேகர் கும்பல். அதை ஏற்றால் சு.சுவாமியின் பெயர்ப் பலகை கட்சியான ஜனதா கட்சியின் அங்கீகாரத்தை ரத்து செய்ய வேண்டும். இதனால், எல்லா வழக்குகளும் தேர்தல்களுக்குப் பிறகு விசாரிப்பதாகத் தள்ளிப்போட்டார் சேஷன்.

☆ பஞ்சாப் - அசாமில் தேர்தல்கள் வைப்பதைக் காங்கிரசு எதிர்த்தது. இருந்தாலும், சந்திரசேகர் அரசு அங்கு தேர்தல்கள் வைக்கும்படி சிபாரிசு செய்தது. வேறு வழியின்றி வெங்கடராமனும் அதை ஏற்று உத்திரவு போட்டார். காங்கிரசு ஆட்சிக்கு வந்தால் பஞ்சாப் - அசாம் தேர்தல்களை ரத்து செய்வோம் என்றார், ராஜீவ். அப்படி செய்யலாம் என்று ஆதரவு தெரிவித்ததோடு, அதற்கு வசதியாக தனக்குள்ள அதிகாரத்தை வைத்து பஞ்சாப் - அசாம் தேர்தல்களைத் தள்ளி வைத்தார் சேஷன்.

☆ பீகாரில் ஜனதா தளம் - தேசிய முன்னணிதான் வெற்றி பெறும் என்ற நிலை அறிந்த சு.சுவாமி அங்கு சட்டம் ஒழுங்கு நிலை குலைந்துவிட்டதெனக் கூறி ஆர்.வி.யுடன் சேர்ந்து ஜனதாதள ஆட்சியைக் கவிழ்க்கவும் ஆளுநர் ஆட்சியைக் கொண்டு வரவும் பகீரத முயற்சி செய்தார். தற்காலிக அரசு அப்படிச் செய்ய முடியாது என்பதால் சட்டம் - ஒழுங்கைக் காரணங்காட்டி தேர்தல்களைத் தள்ளி வைப்பது அல்லது ரத்து செய்வதற்கு சேஷனைத் தூண்டினார். தினம் ஒரு வேட்பாளர் கொல்லப்படும் பஞ்சாபில் தேர்தல் நடத்தலாம், பீகாரில் முடியாதா? எனக் கேட்டு எதிர்க்கட்சிகள் எதிர்ப்புத் தெரிவிக்கவே சில நாட்கள் இழுத்தடித்துவிட்டு பீகாரில் தேர்தல்கள் நடத்த ஒப்புக் கொண்டார்.

☆ தேர்தல்களுக்கென முறைப்படியான அறிவிப்பு வருவதற்கு முதல் நாளன்று அரியானா, பீகார், உ.பி. ம.பி, ஆந்திரா, கர்நாடகா போன்ற பல மாநிலங்களிலும் விதிகளுக்கு மாறாக அதிகாரிகளை இட மாற்றம் செய்தனர். அதற்குத் தடை விதித்து விசாரணை நடத்திய சேஷன் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் மட்டும் இட மாற்றங்களை ரத்து செய்யும்படி கோரினார். காங்கிரசு ஆளும் மாநில அரசுகளுக்கு ஆட்சேபனைக் குறிப்பு மட்டுமே அனுப்பினார்.

☆ பீகார், மேற்கு வங்க அரசுகள் ஊர்க்காவல் படைகளை தேர்தல்களுக்குப் பயன்படுத்தக் கூடாதெனத் தடைவிதித்தார், சேஷன். குறிப்பாக பீகார் ஊர்க்காவல் படை யாதவர்களை (பிற்பட்ட முதல்வரின் சாதியினர்) பெரும்பான்மையாகக் கொண்டது; புதிதாக யாதவர்களை அதற்கு நியமித்தார்;



படிப்பகம்

www.padippakam.com

அவர்களை அரசு ஊழியராக நியமித்து, சம்பள உயர்வு தருவதாக வாக்குறுதி அளித்தார் என பீகார் முதல்வர் லல்லுப் பிரசாத் யாதவ் மீது சேஷன் புகார் கூறினார். ஆனால், இந்தப் புகார்கள் எல்லாம் பொய்யானவை எனவும், இப்படிப்பட்ட உத்திரவுகள் போடவும் சேஷனுக்கு அதிகாரம் கிடையாது எனவும் அரசு சட்ட வல்லுநர்களே அறிக்கை கொடுத்தும் அவர் அதை மதிக்கவில்லை.

☆ மந்திரி சபையில் சு.சுவாமிக்கு எதிரான பெட்ரோலிய மந்திரி மாளவியா புதிய எரிவாயு லைசென்சுகள் கொடுத்ததையும், சஞ்சய் சிங் புதிய தொலைபேசி தொடர்புகள் கொடுத்ததையும் தேர்தல் விதிகளுக்கு எதிரானது என விசாரிக்கும்படி சு.சுவாமி நிர்பந்தித்தார். சு.சுவாமி - சேஷன் ஒரு பக்கமும், எதிர்க்கும்பல் மறுபக்கமும் நின்று ''நாய்ச் சண்டை'' நடத்தினர். சேஷன் மந்திரி சபை செயலாளராக இருந்து 1989 தேர்தல்களின் போது செய்த முறைகேடுகளை எதிர்க்கும்பல் அலசி அம்பலப்படுத்தியதும் எல்லாப் புகார்களையும் கிடப்பில் போட்டுவிட்டார் சேஷன். நாடாளுமன்ற சபாநாயகரும், ஜனதாதள வேட்பாளருமான ரேபி ரேவுக்கு எதிரான மொட்டைப் புகாரை சோதித்தறியாமல் பத்திரிக்கைகளுக்கு கொடுத்த சேஷன், அவை பொய்யென நிரூபிக்கப்பட்டு அம்பலப்பட்டுப் போனார்.

☆ ராஜீவ் கொல்லப்பட்ட இரவே கூடிய சேஷன், சு.சுவாமி, ஆர்.வி. கும்பல் தேர்தல்களைத் தள்ளிவைத்து அவசரநிலைப் பிரகடனம் செய்வதற்குத் திட்டமிட்டது. பிறகு தேசிய அரசாங்கம் அமைக்கும் முயற்சியில் இறங்கியது. இக்கும்பலின் சதியை அறிந்த எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்க்கவே தேர்தல் தேதிகளைத் தான்தோன்றித் தனமாகத் தீர்மானித்துவிட்டு மத்திய அரசு உத்தரவின் பேரில் செய்ததாகப் புளுகியது. அதிலும் அம்பலப்பட்டுப் போகவே சு.சுவாமி பூசி மெழுகினார்.

☆ மே 20 - முதல் கட்டத் தேர்தல்களிலேயே பரவலாக தேர்தல் தில்லுமுல்லு - அராஜகம் நடந்தது. ஆனால், காங்கிரசு வெற்றிபெற வாய்ப்பில்லாத 5 நாடாளுமன்ற மற்றும் 15 உ.பி. சட்டமன்றத் தேர்தல்களை மட்டும் சேஷன் ரத்து செய்தார். தொகுதி - மாநிலத் தேர்தல் அதிகாரிகளின் அறிக்கை பெறாமலேயே தான்தோன்றித் தனமாக இதைச் செய்தார். பிறகு ஆளும் ஆட்சியின் நிர்பந்தத்துக்குப் பணிந்து ரத்து செய்யும் முடிவையே சில தொகுதிகளை மட்டும் மறு பரிசீலனை செய்தார். அதற்கும் ஆளும் கட்சி வேட்பாளர்களை மட்டுமே விசாரிக்க முனைந்தபோது திடீரென எதிர்க்கட்சி வேட்பாளர்கள் அலுவலகத்துக்குள் புகுந்தனர். பீதியுற்ற சேஷன் அவர்களுக்கும் தகவல் அனுப்பியதாகப் புளுகினார். இந்த விசாரணையில் முறைகேடாக சு.சுவாமி அனுமதிக்கப்பட்டார். இப்படி ரத்து செய்யவும், மீண்டும் அதைப் பரிசீலித்து முடிவை மாற்றவும் சேஷனுக்கு அதிகாரம் கிடையாது என்பதை அவர் மதிக்கவில்லை.

☆ முதல் கட்டத் தேர்தல்கள் முடிந்த பிறகு ராஜீவ் கொல்லப்பட்டார். அனுதாப அலையைப் பயன்படுத்தி அந்தத் தொகுதிகளிலும் தேர்தல் முடிவை மாற்றும் நோக்கத்தோடு 15 நாட்களுக்குப் பிறகு பல வாக்குச் சாவடிகளிலும் பீகார், உ.பி.யில் மறு தேர்தல்களுக்கு உத்தரவிட்டார். மூன்று கட்டத் தேர்தல்களும் முடிந்து, முடிவுகள் அறிவிக்கப்பட்ட பிறகு அதையும் ரத்து செய்தார். பிறகு சில மணி நேரங்களில் அதே முடிவை ஏற்றுக் கொண்டார். அதன் பிறகு மேலும் சில தொகுதிகளின் முடிவுகள் அறிவிப்பு, ஓட்டு எண்ணிக்கையை நிறுத்தி வைத்தார். இவை ஜனதாதளம் வெற்றி பெற்ற தொகுதிகள் என்பது குறிப்பிட வேண்டியது.

☆ வாக்குப் பதிவும் ஓட்டு எண்ணிக்கையும் நடந்து கொண்டிருக்கும்போதே தேர்தல் அதிகாரிகளை மாற்றினார். இதனால், ஆத்திரமுற்ற பீகார் அதிகாரிகள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். துணைத் தேர்தல் கமிசனர் ஒருவர் ராஜினாமா செய்துவிட்டுப் போன பிறகு தேர்தல் கமிசன் ஊழியர்கள் - அதிகாரிகள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இன்னொரு துணைக் கமிசனர் அவரது வீட்டிற்குப் போய் கெஞ்சி ராஜினாமாவை விலக்கிக் கொள்ளும்படி செய்த பிறகு, வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்தது. அடிக்கடி வானொலி, தொலைக்காட்சி, பத்திரிக்கையாளர் முன்பு தோன்றி சவடால் அடித்த சேஷன் - சு.சுவாமி கும்பல் அவர்களுக்கு எதிராகவே புகார்கள் வந்தபோது ஓடி ஒளிந்து கொண்டது.

☆ தேர்தல் நெறிமுறைகள் பற்றி பெரும் சவடால் அடித்த சேஷன் பாரதீய ஜனதா கட்சி மேற்கொண்ட மதவெறிப் பிரச்சாரத்தை தடுக்கவே முயலவில்லை. காங்கிரசு - அ.தி.மு.க. கூட்டணி மேற்கொண்ட பல அவதூறுப் பிரச்சாரங்களை, குறிப்பாக அது தி.மு.க. மற்றும் தேசிய முன்னணிக்கு எதிராக ''கொலைப்பழி'' சுமத்தும் பிரச்சாரத்தை அனுமதித்தது. வானொலி - வானொளிகள் கூட இதற்குப் பயன்படுத்தப்பட்டதைத் தடுக்கவில்லை.

— இப்படி சேஷன் போட்ட தான்தோன்றித்தனமான ஆட்டங்கள் அனைத்துக்கும் சு.சுவாமி கூட்டாளியாக இருந்தார். சேஷனுக்கு எதிரான பல புகார்களுக்கும் சு.சுவாமிதான் பதில் சொன்னார். இவற்றுக்கெதிராகப் பலமுறை அரசுத் தலைவர் வெங்கடராமனிடம் எதிர்க்கட்சியினர் முறையிட்டனர். ஆனால், சேஷன், சு.சுவாமி கும்பலில் ஒருவரான வெங்கடராமன் அதையும் கண்டு கொள்ளவில்லை. தமிழ்நாட்டிலுள்ள எல்லாப் பார்ப்பன ஏடுகளும் இந்தக் கும்பலின் செயல்களை நியாயப்படுத்தின. சேஷன், ஆர்.வி. வகிக்கும் பதவிக்குரிய மரியாதை காரணமாக அவர்கள் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவர்கள் எனக் கூறி தாங்கிப் பிடித்தன.

ஆகவே, சட்டவிரோத - சமூக விரோத - கிரிமினல் கும்பல்களின் நடவடிக்கைகள் தான் இந்த நாடாளுமன்ற ஜனநாயகத்தைப் போலியானவை - கேலிக்கூத்தாக்குவன என்றில்லை. கொல்லைப்புற வழியே அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் இத்தகைய சட்டப்பூர்வ கும்பலும் அவ்வாறு செய்ய முடியும்; அவ்வாறுதான் செய்கின்றன.

● அஜித்

**ரா**ஜீவ் காந்தி கொலை வழக்கை விசாரிக்கும் சிறப்பு புலனாய்வுக்குழு; நீதிபதி வர்மா தலைமையிலான நீதி விசாரணைக் கமிசனின் அலுவல் குறிப்புகள்; ராஜீவ் கொலைபற்றி காங்கிரசு - அ.தி.மு.க. கூட்டணித் தலைவர்கள் தெரிவித்து வரும் கருத்துக்கள் - ஆகிய இவை பல கேள்விகளை எழுப்புகின்றன.

சிறப்புப் புலனாய்வுக் குழுவின் விசாரணை எந்தத் திசையில் போகிறது? அது நீதியான, நேர்மையான முறையில் நடைபெறுமா? ராஜீவ் கொலைக்குக் காரணமானவர்களைக் கண்டு பிடித்துத் தண்டிப்பதோடு அதன் நடவடிக்கை கட்டுப்படுத்தப்படுமா?

ராஜீவுக்குத் தரப்பட்ட பாதுகாப்பில் இருந்த குறைபாடுகள், இனி இம்மாதிரி மீண்டும் நடக்காமல் தடுப்பதற்கான நடவடிக்கைகள் ஆகியவற்றை விசாரிப்பதோடு வர்மா கமிசன் விசாரணை முடிந்துவிடுமா? இல்லை அரசியல் உள்நோக்கம் கற்பிக்கும் அளவுக்கு போகுமா?

ராஜீவ் கொலையின் அரசியல் முக்கியத்துவம் - விளைவு என்னவாயிருக்கும்? இந்தத் தேர்தல்களுக்கான அனுதாப அலையை எழுப்புவதோடு நிறுத்தப்படுமா?

குறிப்பாக திராவிட இயக்கத் தலைவர்களும், தமிழ் இனவாதக் குழுக்களும் அக்கறை செலுத்த வேண்டிய, அவர்களது எதிர்காலத்தைப் பாதிக்கக் கூடிய மிக முக்கியமான கேள்விகள் இவை.

ராஜீவ் கொல்லப்பட்ட அடுத்த நாளே சிறப்புப் புலனாய்வுக் குழு அமைக்கப்பட்டது. சி.பி.ஐ. தலைமையில் ''ரா'', ''ஐ.பி'', இராணுவ உளவுப் பிரிவு மற்றும் தடய அறிவியல் பிரிவு உட்பட ஏராளமான அதிகாரிகளும் போலீசாரும் சகல அதிகாரங்களுடன் குவிக்கப் பட்டுள்ளனர். ஒரு வாரத்துக்குள் நீதிபதி வர்மா தலைமையில் ஒரு நபர் நீதி விசாரணைக் கமிசன் நிறுவப்பட்டது.

ஆனால், இவை தமது விசாரணையைத் துவங்குவதற்கு முன்பே, ராஜீவ் கொல்லப்பட்ட தகவலோடு காங்கிரசு - அ.தி.மு.க. தலைவர்கள், அவர்களது அரசியல் தரகர்களான சு.சுவாமி, சு.சுகாய் ஆகிய மத்திய மந்திரிகளின் முடிவுகளும் வந்துவிட்டன.

ராஜீவ் கொலைக்குக் காரணம் ஈழ விடுதலைப் புலிகளும் தி.மு.க.வும்தான் என்று நேரடியாகவே வாழப்பாடி ராமமூர்த்தி குற்றஞ்சாட்டினார். ஜெயலலிதா, ப.சிதம்பரம், சு.சுவாமி போன்றவர்கள் இதையே பிரதிபலித்தனர். தங்கள் தலைவர் சர்வதேச முக்கியத்துவமுடையவர் என்று காட்டிக் கொள்வதற்கு இது மட்டும் போதாது என்று எண்ணினார்கள் போலும். அடுத்த கட்டமாக புலிகள் - தி.மு.க. - சி.ஐ.ஏ. கூட்டுச் சதிகள் தான் காரணம் என்று சற்று விரிவு படுத்தினார்கள்.

ராஜீவ் கொலை நடந்த அன்று மாலை கருணாநிதியின் மகன் மு.க.ஸ்டாலின் தி.மு.க. ஊழியரிடையே பேசியபோது ''இன்று முக்கியச் சம்பவம் ஒன்று நடக்கப் போகிறது. எல்லோரும் முன்னெச்சரிக்கையாக வீடு போய்ச் சேருங்கள்'' என்று பேசியதாக வாழப்பாடி சரடுவிட்டார். தி.மு.க.



படிப்பகம்

www.padippakam.com

# ராஜீவ் கொலை விசாரணை
# அரசியல் பழிவாங்கும் முயற்சி

தலைவர்களில் ஒருவரான வை.கோபால்சாமி, ''ராஜீவ் தமிழ்நாட்டுக்கு வந்து மண்டல் அறிக்கையை எதிர்த்துப் பேசிவிட்டு உயிரோடு திரும்பிப்போய்விடமுடியுமா?'' என்று மே 20 ந் தேதி அருப்புக் கோட்டையில் பேசினார் என்றும் தி.மு.க. தலைவர்களைக் கைதுசெய்து சி.பி.ஐ. விசாரிக்க வேண்டும் என்றும் வாழப்பாடி கோரினார்.

''கடந்த ஆண்டு ஜூன் - ஜூலையில், துறைமுக விருந்தினர் மாளிகையில் கருணாநிதிக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையே நடந்த இரகசிய சந்திப்பின்போது ராஜீவ் கொலைக்கான சதித்திட்டம் தீட்டினார்கள்'' என்று நேரடியாகவும் பகிரங்கமாகவும் குற்றஞ்சாட்டுகிறார், ப.சிதம்பரம். இது குறித்து கருணாநிதிக்கும் அவருக்கும் தொடர்ந்து வாதப் பிரதிவாதம் நடக்கிறது.

தி.மு.க. மீது கொலைக்குற்றம் சுமத்துவோருக்கு எதிராக ஆதாரங்களைத் திரட்டும்படி கருணாநிதி அறிக்கை விட்டார். வாழப்பாடிக்கு எதிராக மு.க.ஸ்டாலின் அவதூறு வழக்கும் தொடுத்துள்ளார். ஆனாலும், சுவரொட்டி மூலமும், பத்திரிக்கைகள் மூலமும் தி.மு.க. மீது குற்றஞ்சாட்டி, தேர்தலில் அதற்கு எதிராக தண்டனை வழங்கும்படி காங்கிரசு - அ.தி.மு.க. கூட்டணி ஓட்டுக் கேட்டது.

இதற்கிடையே ''வர்மா கமிசனின் விசாரணை அலுவல் பணியை விரிவுபடுத்த வேண்டும்; ராஜீவ் பாதுகாப்பு ஏற்பாடுகளில் குறைபாடு இருந்ததா, அதற்கு யார் யார் காரணம், இனி இப்படி நடவாமல் தடுப்பது என்று விசாரித்தால் மட்டும் போதாது; ராஜீவ் கொலைக்குப் பின்னணியில் உள்ள தேசிய, சர்வதேசிய சதியையும் விசாரிக்க வேண்டும்'' என்று காங்கிரசு, பாரதீய ஜனதா மற்றும் சி.பி.ஐ. ஆகிய கட்சிகள் கோரின. ''காங்கிரசுக்குத் திருப்தி ஏற்படும் வகையில் விசாரணைக் கமிசனின் அலுவல் குறிப்பு விரிவுபடுத்தப்படும்'' என்று பிரதமர் வாக்களித்துள்ளார்.

விசாரணைக் கமிசன் அமைப்பதாக அறிவிப்பு வந்ததுமே பிரபலப் பத்திரிக்கைகள் அனைத்துமே எச்சரிக்கைவிடத் தவறவில்லை. இந்திரா கொலை வழக்கை விசாரித்த தாக்கர் கமிசனைப் போல உள்நோக்கம் கற்பிப்பதாகவும், அரசியல் பழிவாங்குவதாகவும், இரகசியமாக வைத்து மிரட்டுவதாகவும் இருக்கக் கூடாது; பாதுகாப்புக் குறைபாடுகளை விசாரிப்பதாகவும், தடுப்பு நடவடிக்கைகளை சிபாரிசு செய்வதாகவும் மட்டுமே இருக்க வேண்டும் என்று பத்திரிக்கைகளின் தலையங்கங்களே கோரின. குற்றவாளிகளைக் கண்டுபிடித்து வழக்கு மன்றத்தில் நிறுத்தித் தண்டிக்கும் கிரிமினல் விசயத்தோடு சிறப்புப் புலனாய்வுக் குழு கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவை கோரின.

ராஜீவ் கொலையில் சம்பந்தப்பட்டவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிப்பதற்கான முயற்சிகள் ஒருபுறம் நடக்கும். அதே சமயம் அந்த வழக்கோடு நேரடியாக சம்பந்தப்படுத்தாமல் கொலை - சதிக் குற்றச்சாட்டுக்கள் திராவிட இயக்கத்தினர் மீதும் தமிழ் தேசிய இனவாதக் குழுக்கள் மீதும் சுமத்தப்பட்டு அரசியல் பழிவாங்குதல் தனியே நடக்கும் என்றே நாம் கருதுகிறோம்.

இதற்காக குறிப்பான ஆதாரங்கள், குற்றச்சாட்டுக்கள் என்றில்லாவிட்டாலும் சந்தேகம் இருக்கிறது, சம்பந்தம் இருக்கலாம்; மேலும் விசாரிக்க வேண்டும், அதற்கான அடிப்படைகள் இருக்கின்றன என தொக்கி நிற்கும் முடிவை எட்டும்படி விசாரணைக் கமிசனும், புலனாய்வுக் குழுவும் நிர்பந்திக்கப்படும்.

எந்தவொரு பிரச்சினை எடுத்தாலும் ''கொலைகாரர்கள் - சதிகாரர்கள் - ராஜீவ் காந்தியையே கொன்றவர்கள்'' என்று பழி போட்டுப் பிரச்சாரம் செய்து ஆண்டாண்டு காலத்துக்கு அரசியல் ஆதாயம் தேடுவதற்கான ஆயுதமாக ''அகில இந்தியம்'' பேசும் காங்கிரசு - அ.தி.மு.க. கூட்டணியும், பாரதீய ஜனதா - ஆர்.எஸ்.எஸ். கும்பலும் இதைப் பயன்படுத்திக் கொள்ளும்.

''அடுத்த தேர்தலில் இல்லாவிட்டாலும் காலப்போக்கில் ராஜீவ் கொலை விவகாரத்தை அவர்கள் மறந்து விடுவார்கள்; இனிமேல் மக்களும் நம்ப மாட்டார்கள்; மத்தியில் காங்கிரசின் ஏகபோக ஆட்சி இல்லாவிட்டால் அப்படிப்பட்ட விசாரணை முடிவு இருக்காது'' என்று நம்புகிறார் பொது வாழ்வில் பொன்விழா கண்ட ''ராஜ தந்திரம்'' அறிந்த கருணாநிதி. அல்லது ''கழக உடன்பிறப்புகள்'' பீதியடைந்து விடக்கூடாது என்பதற்காக அப்படி நம்பச் சொல்கிறார். ''உண்மையான கொலையாளிகளைக் கண்டு பிடிக்க வேண்டும்; புலிகள் செய்திருக்க மாட்டார்கள்; சிங்கள அரசின்மீது சந்தேகம்; காங்கிரசுக் காரர்களே சம்பந்தப்பட்டிருக்கலாம்'' என்றெல்லாம் பேசிப் பார்க்கிறார் கருணாநிதி.


இதே கருத்தை - அணுகுமுறையைத் தான் தமிழ் தேசிய இனவாதக் குழுக்களும் பிரதிபலிக்கின்றன. ஏற்கனவே, 50க்கும் மேற்பட்டவர்கள் சட்ட விரோதமாக கைது செய்து சித்திரவதை செய்யப் படுவதை இவர்கள் கண்டு கொள்ளவும் இல்லை; கண்டிக்கவும் இல்லை.

காங்கிரசுக் கட்சியின் விசுவாசி என்பதற்காகத்தான் மத்திய ரிசர்வ் படை அதிகாரியான கார்த்திகேயன் சிறப்பு புலனாய்வுக் குழு தலைவராக்கப் பட்டிருக்கிறார்; ''புலிகள் மட்டுமல்லாது தமிழ்நாட்டுப் பிரிவினைவாத சக்திகளும் ராஜீவ் கொலையில் சம்பந்தப்பட்டிருக்கலாம்'' என்று சி.பி.ஐ. இயக்குனர் விஜய்கரண் கூறியிருக்கிறார். இவற்றையும் கவனத்தில் கொள்ள வேண்டும்

மத்தியில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், திராவிட இயக்கங்களுக்கும் தேசிய இனவாதக் குழுக்களுக்கும் எதிராக அரசியல் பழிவாங்குதலுக்கு ராஜீவ் கொலையைப் பயன்படுத்தும் நோக்கமுடைய பார்ப்பன - பனியா அதிகாரிகள் பலர் தயாராக உள்ளனர். அதிகார வர்க்கத்திலும் உளவுப் படைகளிலும் பலர் இத்தகையவர்கள்; ஏற்கனவே வானொலி - வானொளியில் இத்தகையவர்களின் சதிச் செயல்களை நாம் பார்க்கிறோம். இவர்களை ஊக்குவிக்கும் - ஆதரிக்கும் - நிர்பந்திக்கும் தன்மையுடைய ஜெயலலிதா ஆட்சிதான் இங்குள்ளது.

ஈழப் போராளிகளுக்கு எதிராக மத்திய ''ரா'' மற்றும் மாநில ''கியூ'' பிரிவுப் போலீசு - உளவுப் படைகளும், தி.மு.க. ஆட்சிக் கவிழ்ப்பில் ''ஐ.பி.'', ''ரா'' ஆகிய உளவுப் படைகளும் இப்படிச் செயல்பட்டதையும் பார்த்தோம். இத்தகைய ஆதரவின்றி ''கொலைப்பழி'' சுமத்துவது தேர்தல் விதிகளுக்கு விரோதமானது, கிரிமினல் குற்றம் என்று அறிந்தும் காங்கிரசு - அ.தி.மு.க. கூட்டணியும், பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ். கும்பலும் அவ்வாறு செய்திருக்குமா? அதிகார வர்க்கமும் - போலீசும் இதையும், ராஜீவ் கொலைக்குப் பிந்திய அராஜகம், வன்முறை கலவரங்களையும் அனுமதித்திருக்குமா?

அரசியல் ஆதாயம் கருதி பழிவாங்கும் இத்தகைய செயல்கள் பாசிசத்தன்மையுடையன; நியாயமான தேசிய இன இயக்கங்களையும் ஒடுக்கும் நோக்கமுடையன என்பதால் புரட்சியாளர்கள் இவற்றை எதிர்த்து முறியடிக்க வேண்டும். ● ஆர்.கே






படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

ராஜீவ் கொலைக்குப் பின் நடந்த வன்முறைச் சம்பவங்களில் ஆந்திராவில் என்.டி.ராமராவ் மற்றும் அவரது உறவினர்களின் சொத்துக்களும் உடமைகளும் தீக்கிரையாக்கப்பட்டன; சூறையாடப்பட்டன. என்.டி.ஆரின் உறவினர் ஹனுமந்தராவ், தனது வீட்டிலும் அலுவலகத்திலும் 20 லட்ச ரூபாய் சூறையாடப்பட்டதாக போலீசில் புகார் கொடுத்தார். கொள்ளையடித்தவர்களை உடன் பிடித்து சோதித்ததில் 14 லட்சம் ரூபாய் அதிகம் இருந்தது. இதுவன்றி கணிசமான பணத்தையும், நகைகளையும் சுருட்டிய ஒருவன் இன்னும் பிடிபடவில்லை. இப்போது அனைத்து பணத்திற்கும் - சொத்திற்கும் கணக்கு கேட்டு வருவாய்துறை அதிகாரிகள் கேள்வி எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். கருப்பு பணத்திற்கு கணக்கில்லாமல் மழுப்பிக் கொண்டிருக்கிறார் ஹனுமந்தராவ்.

1924ல் லெனின் மறைவுக்குப் பின் அவர் நினைவாக சோவியத் யூனியனிலேயே 2வது பெரிய நகரத்திற்கு லெனின் கிராடு எனப் பெயர் சூட்டப்பட்டது. புகழ் பெற்ற ரஷ்ய மன்னர் பீட்டர் நினைவாக பீட்டர்ஸ் பர்க் என்று அழைக்கப்பட்டு வந்த பழைய பெயரை மீண்டும் இந்த நகரத்திற்குச் சூட்டுவதற்கென தற்போது ஓட்டெடுப்பு நடத்தினார்கள். 50 சதவிகிதத்திற்கும் மேலான ரஷ்ய குடியரசு மக்கள் பீட்டர்ஸ்பர்க் பெயருக்கு ஓட்டளித்ததைத் தொடர்ந்து லெனின் கிராடு பெயர் பீட்டர்ஸ் பர்க் என மாற்றப்பட்டுள்ளது. இதேபோல் ரஷ்ய சோசலிச சோவியத் குடியரசுகள் என்ற பெயரையும் ரஷ்ய தன்னாட்சி சோவியத் குடியரசுகள் (United Soviet Sovereign Republics) என மாற்றினார்கள். கம்யூனிஸ்டு தலைவர்கள் பெயர்களையும் சோசலிசம் என்ற வார்த்தையையுமே மாற்றுமளவிற்கு ரஷ்யா மாறியுள்ளது. இனியும் ரஷ்யாவை சோசலிச நாடுதான் என்று சொன்னால் இதைவிட பைத்தியக்காரத்தனம் வேறு எதுவும் இல்லை.

தற்காலிக காங்கிரசுத் தலைவர் பி.வி.நரசிம்மராவிற்கு எழுதிய ஒரு கடிதத்தில் "ஒவ்வொரு காங்கிரசுக்காரரும் கொடுத்த ஆதரவின் பலத்தைக் கொண்டு எனது கணவர் (ராஜீவ்) அவரது நாட்டிற்கு பல தியாகங்களை செய்தார்" எனக் குறிப்பிட்டிருந்தார் சோனியா. இத்தாலிய பிரஜையான சோனியா, 'அவரது' எனக் குறிப்பிட்டதன் மூலம் இந்தியாவிலிருந்தும் இந்திய கலாச்சாரத்திலிருந்தும் தன்னை அந்நியப்பட்டவராகவே இன்னும் நினைத்துக் கொண்டிருப்பதைக் காட்டுவதோடு இந்திய மக்களையும் ஏன் காங். கட்சிக்காரர்களையுமே (இந்தியாவையே ராஜீவின் சொத்தாக்கி) அவமானப்படுத்துகிறார் என்ற குற்றச்சாட்டு எழும்பியது. இதையறிந்த காங். தலைமை உடனே தனது விசுவாச ஆங்கில நாளேடான 'டைம்ஸ் ஆப் இந்தியா' விற்குக் கொடுத்த கடிதப் பிரதியில் மட்டும் 'அவரது நாடு' என்பதை 'நமது நாடு' என திருத்திக் கொடுத்தது. பிற பத்திரிக்கைகளில் எல்லாம் 'அவரது நாடு' என வெளிவந்ததைத் தொடர்ந்து பிரச்சினை சர்ச்சைக்குள்ளாகி உண்மை வெளிவந்தது. அம்பலப்பட்டுப் போனதால் வேறு வழியின்றி காங். தலைமை இந்தப் பித்தலாட்டத்திற்கு தானே பொறுப்பேற்றுக் கொண்டது.

ராஜீவ் 'அஸ்திக் கலசம்' நாடு முழுவதும் காட்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டதை அறிவோம். இதில் மகாராஷ்டிரா - ஜால்கான் மாவட்டத்தைச் சேர்ந்த கட்சிக்காரர் விஜய் நவர் பட்டீல் என்பவருக்கு காங்கிரசு தலைமை விநியோகித்த கலசம், போலியான சாம்பலைக் கொண்டது என கண்டு பிடிக்கப்பட்டது. இதில் வேடிக்கை என்னவென்றால் கடந்த அக்டோபர் 30ந் தேதி அயோத்தியில் ராமர் கோயில் கட்ட முனைந்தபொழுது நடந்த துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்கள் என உயிரோடிருந்த தனது கட்சிக் காரர்களுக்கெல்லாம் இறுதிச் சடங்கை நடத்தி அம்பலப்பட்டுப் போன பாரதீய ஜனதா கும்பல்தான் ராஜீவின் போலி அஸ்தி கலசத்தை மிகுந்த சர்ச்சைக்குள்ளாக்கியது; விசாரணை கமிஷன் அமைக்க வேண்டும் எனக் கோரி குதித்தது. சாம்பலிலும் பிணத்திலும் அரசியல் நடத்தும் இவர்களை எப்போது விரட்டியடிக்கப் போகிறோம்?



விடுதலைப் புலிகள் கொக்கடிச் சோலையில் கண்ணிவெடி வைத்து இரண்டு ராணுவவீரர்களைக் கொன்றதால் இலங்கை ராணுவம் அப்பாவி மக்கள் மீது தன்னிச்சையாக தாக்குதல் நடத்தி 166 பேரைக் கொன்றதாக அதிர்ச்சி தரும் செய்தி வந்தது.

ஜூன் 13ந் தேதி மட்டக்களப்பில் இலங்கை ராணுவம் புகுந்து கண்ணில் பட்டவர்களையெல்லாம் தாக்கியது பெண்கள் குழந்தைகள் என்று பாராமல் ஈவிரக்கமற்ற முறையில் கோரமாக தாக்கி சுட்டும் வெட்டியும் கொன்று போட்டது. கொக்கடிச் சோலை, மஹிலாதிதீவு, முனக்காடு ஆகிய கிராம மக்கள் இத்தாக்குதலால் பீதிக்குள்ளாகி வீட்டைவிட்டு வெளிவரவே அஞ்சிக் கிடந்தனர். ஈழத் துரோக அமைப்பைச் சேர்ந்த (TULF) எம்.பி., பாராசிங்கம் ஜோசப் என்பவரே இத்தாக்குதல் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று ஒப்பாரி வைக்கும் அளவிற்கு கொடுமை நடந்தது.

பிலிப்பைன்சில் வெடிக்கும் எரிமலைக்கு அருகில் உள்ள 'கிளார்க்' எனப்படும் பகுதியில் அமெரிக்காவின் ராணுவ விமானத்தளம் உள்ளது. இங்கு ஏராளமான ரசாயன மற்றும் அணு ஆயுதங்கள் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. எரிமலை வெடிக்கத் தொடங்கியதைத் தொடர்ந்து இதை பாதுகாத்து வந்த 200 அமெரிக்கத் துருப்புகள் அப்படியே அனைத்தையும் போட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். எரிமலை வெடிப்பால் நூற்றுக்கும் மேற்பட்டோர் இறந்துள்ளனர். பாதுகாப்பற்ற இந்த ஆயுதக் கிடங்கு எரிமலை குழம்பால் தாக்கப்பட்டு வெடித்தால் மேலும் லட்சக்கணக்கானோர் இறப்பதோடு பல ஆயிரக்கணக்கான மைல்கள் சுற்றுவட்டாரத்தில் புல் பூண்டுகளே இருக்காது. இதன் பாதுகாப்பு பற்றி கேள்வி எழும்பியும் மௌனம் சாதிக்கிறது அமெரிக்கா.

அண்மையில் கோர்பியை அழைத்து நோபல் பரிசு வழங்கப்பட்டதை வாழ்த்தி ஒரு கூட்டம் நடத்தியது ஆப்கானிஸ்தான் அரசு. இக்கூட்டத்தில் கோர்பி பேசிய பொழுது பார்வையாளர்களிடம் இருந்து பலத்த எதிர்ப்பு வந்தது. ஒரு பெண்மணி எழுந்து கோர்பியை தாக்கிப் பேசியதால் அப்புறப் படுத்தப்பட்டார். அதன் பின்னரும் ஒரு இளைஞர் எழுந்து "எங்கள் நாட்டில் 10 மில்லியன் கண்ணி வெடிகளை விட்டு வைத்திருக்கிறீர்களே அதற்கு என்ன அர்த்தம்?" எனக் கேட்டார். தொடர்ந்து பலத்த எதிர்ப்பு குரல் வரவே பேச முடியாமல் பாதியிலேயே முடித்துக் கொண்டு திரும்பி ஓடினார் கோர்பி.

சாவு வியாபாரிகள்தான் மருந்து கம்பெனி முதலாளிகள் என்பதை அண்மை



படிப்பகம்

www.padippakam.com

யில் ஒரு சம்பவம் நிரூபித்தது. பம்பாய் தனியார் மருத்துவமனைகளில் இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்ட நோயாளிகள் எல்லாம் கடந்த ஒரு வாரமாக இறந்து போனார்கள்; 6 பேர் மாண்டார்கள். அறுவை சிகிச்சை நோயாளிகளுக்கு போடும் ஊசி மருந்தில் சோடியம் பை கார்பனேட் என்ற கலவை அளவுக்கதிகமாக அதாவது 60 சதவிகிதம் அதிகமாகக் கலக்கப்பட்டிருந்ததாலேயே இந்த சாவு என பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இம்மருந்தை தயாரித்து விநியோகித்த பாட்னாவில் உள்ள 'கிண்ட்ரா லேபரட்டரி' என்ற கம்பெனி, அரசு உரிமம் இல்லாமல் சட்ட விரோதமாக மருந்து தயாரித்து வருவதும் தெரிய வந்தது. இக்கம்பெனியின் நிர்வாக இயக்குநர் எஸ்.என்.சீன்கா பின்னர் கைது செய்யப்பட்டார். இந்தியா 60,000க்கும் மேற்பட்ட மருந்து வகைகள் போலியானவை -கட்டுப்பாடு மீறிய கலவையால் தயாரிக்கப்பட்டவை - தடை செய்யப்பட வேண்டியவை என்கிறார் ஒரு மருத்துவர்.

**வி**.பி.சிங். ஆட்சியின்போது சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சராக இருந்த நீலமணி ரௌத்ராய், கடற்கரை எல்லையை 500 மீட்டரிலிருந்து 200 மீட்டராக குறைத்து இதற்கு அப்பால் ஹோட்டல்களும் கட்டிடங்களும் கட்டிக் கொள்ளலாம் என சட்டத்தைத் திருத்த முயன்றார். அப்பொழுது இதே துறையில் கீழ் பொறுப்பில் அமைச்சராக இருந்த மேனகா காந்தி, இதைக் கடுமையாக எதிர்த்ததோடு ஹோட்டல் முதலாளிகளிடம் காசு வாங்கியதாக ரௌத்ராயைக் குற்றம் சாட்டி அதிகாரப் போட்டியே நடத்தி தனது பதவியை ராஜினாமா செய்தார். பின்னர் சந்திரசேகர் ஆட்சியில் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற மேனகா காந்தி தற்போது கடற்கரை சுற்றுலாதளங்களை நான்கு வகையாகப் பிரித்து சில வகையைச் சேர்ந்த கடற்கரை எல்லையை 200 மீட்டராக குறைத்திருக்கிறார். சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்திடம் (அதாவது மேனகா காந்தியிடம்) அனுமதிபெற்ற பின்தான் 200 மீட்டருக்கு அப்பால் ஹோட்டல்கள், கட்டிடங்கள் கட்டமுடியும் என்கிறது திருத்தப்பட்ட விதி. ஹோட்டல் முதலாளிகளிடம் காசு வாங்கிக் கொண்டு செய்தாரா அல்லது காசு வாங்குவதற்காக இப்படி செய்தாரா என பத்திரிக்கைகள் எழுப்பும் கேள்விக்கு மேனகா வாய்திறக்கவே இல்லை.

**ம**த்திய பிரதேசம் சிங்ரௌலி நிலக்கரி சுரங்கத்தில் வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்கள் திடீரென சுரங்கத்தில் தண்ணீர் புகுந்ததால், 6 பேர் இறந்து போனார்கள். நீர்க்குழாய்கள் மோதி உடைந்ததால் இந்த விபத்து நடந்ததாகக் கூறுகிறார்கள். ஆனால், தொழிலாளர்களுக்கு எவ்வித பாதுகாப்பும் அற்ற நிலையிலும் விபத்து நடந்தால் மீட்பு பணிக்கான எவ்வித தயாரிப்பு அற்ற நிலையிலுமே பல சுரங்கங்கள் இயங்கி வருகின்றன. தொழிலாளர்களின் உயிரை துச்சமென மதிக்கும் அரசு இருக்கும் வரை இக்கொடுமைகள் ஒழியாது.

## ஆசிரியர் மாற்றம் - தோழர் மதியழகனுக்கு நன்றி!

அன்பார்ந்த தோழர்களே,

புதிய ஜனநாயகம் இதழ் தொடங்கிய காலத்திலிருந்து அதன் ஆசிரியராகவும். வெளியீட்டாளராகவும் செயல்பட்டு வந்த தோழர் எஸ். மதியழகன் தனது சொந்தக் காரணங்களை முன்னிட்டு அப்பொறுப்பிலிருந்து விலகிக் கொள்கிறார். தற்போது தோழர் இரா.சண்முகராசு புதிய ஆசிரியராகவும் வெளியீட்டாளராகவும் பொறுப்பேற்கிறார்.

கடந்த ஐந்தாண்டுகளாக புதிய ஜனநாயகம் இதழின் அரசியல் மேலாண்மையை நிறுவுவதிலும் அதன் வளர்ச்சியிலும் உற்சாகத்துடன் தோழர் மதியழகன் பங்காற்றியுள்ளார். புதிய ஜனநாயகம் இதழின் வளர்ச்சிக்காக பல்வேறு இடர்ப்பாடுகளுக்கு மத்தியிலும் கடினமான சூழ்நிலையிலும் தளராமல் அவர் ஆற்றிய பங்கினை புதிய ஜனநாயகம் நன்றியுடன் நினைவுகூர்கிறது.

இனி புதிய ஜனநாயகம் சம்பந்தமான அனைத்திற்கும் புதிய ஆசிரியரின் முகவரியில் தொடர்பு கொள்ளக் கோருகிறோம்.

— ஆசிரியர் குழு

**தெ**ன் கொரியாவில் சில மாதங்களுக்கு முன்பு ஒரு மாணவர் சியோலில் போலீசின் தாக்குதலுக்கு உள்ளாகி இறந்து போனதைத் தொடர்ந்து மாணவர்கள் போராட்டம் நாடெங்கும் படர்ந்து வருகிறது. மாணவர்கள் மட்டுமல்லாமல் தொழிலாளர்கள் வரை போராட்டம் பரவியதோடு இன்றைய ஆட்சிக்கு எதிராக 'ஜனநாயகம்' கோரிய போராட்டமாக மாறியது. அரசு துருப்புகள் கண்ணீர் புகை குடுகளாலும் ரப்பர் குண்டுகளாலும் சுட்டு போராட்டத்தை தீவிரமாக ஒடுக்கி வருகிறது. இதில் மே 25 தேதி மேலும் ஒரு கல்லூரி மாணவி இறந்து போனாள். அவளுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக கூடிய மாணவர்கள் கூட்டத்தின்மீது போலீசை ஏவி தாக்கியது அரசு.

சென்ற ஜூன் 8ந் தேதி தென்கொரிய பிரதமர் சுங் - வோன் - சிக், ஹான்கூக் பல்கலைக்கழகத்தில் வெளிநாட்டு மாணவர்கள் கூட்டத்தில் உரை நிகழ்த்திவிட்டு வெளி வந்தார். தென்கொரியா மாணவர்கள் திடீரென கும்பலாக அவரைச் சூழ்ந்து கொண்டு அழுகிய முட்டைகளால் தாக்கினர். கொதிப்படைந்திருந்த மாணவர்கள் சிலர் அடித்தும் எட்டி உதைத்தும் கல்லூரி வாயில் வரை இழுத்துக் கொண்டும் வந்தும் சர்வாதிகார அரசின் பிரதமருக்கு மாணவர்கள் சரியான தண்டனைதான் கொடுத்துள்ளார்கள்.





படிப்பகம்

www.padippakam.com

## ராஜீவ் கொலை: எதிர்க்கட்சிகளின் இரங்கல் அறிக்கைகள்:

# கோழைத்தனம்!

செத்தவனை தெய்வமாக்குவது என்பது இந்து மதத்தின் புரையோடிப் போன பண்பாடு. ராஜீவின் சாவுக்குப் பிறகு திராவிட இயக்கத் தலைவர்களின் பண்பாடாக அது இப்போது மாறிவிட்டது. அதையே 'தமிழின மாண்பு' என்று அவர்கள் வெட்கமின்றி நியாயப்படுத்தவும் துணிந்து விட்டார்கள். மாண்டவரை எந்த விமர்சனமுமின்றி துதிபாடுவதுதான் அஞ்சலி செலுத்துவதாகும் என்று அவர்கள் புதிய மரபையும் உருவாக்கியுள்ளார்கள்.

ராஜீவ் கொல்லப்பட்டதை அறிந்து துடித்தேன், துவண்டேன் என்று காங்கிரசு - அ.தி.மு.க.வினரும், தா.பாண்டியன், மா.பொ.சி. முதலானோரும் ஒப்பாரி வைத்தால் அதில் நியாயமிருக்கிறது. ஆனால் நேற்றுவரை ராஜீவை பீரங்கித் திருடன், ஊழல் பெருச்சாளி, அமைதிப் படையை ஏவி ஆயிரக்கணக்கான ஈழத் தமிழர்களைக் கொன்றொழித்த சர்வாதிகாரி என்றெல்லாம் சாடிவிட்டு, இப்போது தி.க., தி.மு.க., பா.ம.க.வினர் அவர்களுடன் கூட்டு சேர்ந்து ஒப்பாரி வைக்கின்றனர். இத்தகைய பச்சோந்தித்தனத்தையும் அரசியல் கோழைத்தனத்தையும்தான் அவர்கள் 'தமிழின மாண்பு' என்கிறார்கள் போலும்.

காங்கிரசு - அ.தி.மு.க. கூட்டணியை சூத்திரர்களுக்கு எதிரான பார்ப்பன கூட்டணியாகச் சாடும் தி.க.வின் வீரமணி ''முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்டார் என்ற செய்தி உலகம் முழுவதும் உள்ள மக்களுக்கெல்லாம் அதிர்ச்சியூட்டக் கூடியது'' (முரசொலி மே.25) என்று ஒப்பாரி வைத்தார்.

''இந்திய நாட்டின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்கள் படுகொலைக்கு ஆளானது குறித்து தி.மு.கழகம் தனது இதயபூர்வமான அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறது.'' (தி.மு.க. இரங்கல் தீர்மானம்)

''ஒரு நீண்ட எதிர்கால வரலாற்றுக்கு சொந்தக்காரராக விளங்க வேண்டியவரின் வாழ்வு இப்படியொரு கொடிய நிகழ்ச்சியால் முடிந்துவிட்டது என எண்ணும்போது இதயம் விம்முகிறது'' (கருணாநிதி தொலைக்காட்சியில் ஆற்றிய இரங்கல் உரை, மே.23)

''ராஜீவ்காந்திக்கு இத்தகைய பாதுகாப்பற்ற நிலைமை ஏற்பட்டது என்றால் பொதுமக்களுக்கு சமுதாயத்தில் என்ன பாதுகாப்பு இருக்கிறது. இத்தகைய கொடூர சம்பவத்துக்கு காரணமானவர்களை கண்டறிந்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.' (பா.ம.க. தலைவர் கண்டனம்)

இப்படி பாசிச ராஜீவின் சாவுக்கு இரங்கல் தெரிவித்து அரைக்கம்பத்தில் கொடியேற்றி, அமைதி ஊர்வலம் நடத்தி, காங்கிரசுக்குப் போட்டியாக ஒப்பாரி வைத்து முதுகெலும்பற்ற பிழைப்புவாதிகளாக இவர்கள் தங்களை இனங்காட்டிக் கொண்டனர்.

மேலும், பாசிச ராஜீவ் படுகொலையில் மத்தியப் புலனாய்வுத்துறை மற்றும் சிறப்பு விசாரணைக் குழுவின் சந்தேகமும் கவனமும் ஈழ விடுதலைப் புலிகள் மீது விழத் தொடங்கியதும் தி.க.; தி.மு.க; மற்றும் புலிகள் ஆதரவு இயக்கத்தினர் பீதியடைந்து போயுள்ளனர்.

ராஜீவ் படுகொலையில் புலிகளின் மீது சந்தேகம் விழத் தொடங்கியதும், தமக்கும் புலிகளுக்கும் தொடர்பேயில்லை என்று தி.மு.க. ஒப்பாரி வைக்கிறது: தி.க. மற்றும் பா.ம.க.வினர் இக்கொலையைப் புலிகள் செய்திருக்க மாட்டார்கள்; வேறு கோணங்களிலிருந்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என சப்பைகட்டு கட்டுகின்றனர். புலிகளை ஆதரிக்கும் தமிழ் தேசிய இனவாத குழுக்களும் கட்சிகளும் விசாரணையில் தங்களையும் சேர்த்து முடிச்சுப் போடுவார்களோ என்ற பீதியின் காரணமாக, புலிகள் மீது பழி விழாமல் இருப்பதில் குறியாய் இருக்கின்றனர். ஒருவேளை புலிகள் இக்கொலையைச் செய்ததாக நிரூபணமானால், தாங்கள் அவர்களின் ஆதரவாளர்கள் அல்ல என்று காட்டிக் கொள்வதற்காக, புலிகளை வளர்த்ததும் ஆதரித்ததும் காங்கிரசும் - அ.தி.மு.க.வும் தான் என்று புதிய ஆராய்ச்சிகளையும் வியாக்கியானங்களையும் அவிழ்த்து விட்டுள்ளார்கள்.

ஒருபுறம் ராஜீவ் கொலைக்கு புலிகள் - தி.மு.க. மற்றும் தமிழ் இனவாத குழுக்கள் தான் காரணம் என்று குற்றம் சாட்டிய காங்கிரசு, தமது தலைவர் ராஜீவ் சர்வதேச ரீதியில் பிரபலமான முக்கிய தலைவர் என்று காட்டுவதற்காக அன்னிய சக்திகளின் தொடர்பு - சதியும் இருக்கலாம் என்ற ஊகங்களையும் அவிழ்த்து விட்டது. உடனே இந்த ஊகங்களின் அடிப்படையில் பல கட்டுக்கதைகளை சில ஆங்கில ஏடுகள் பரபரப்பாக வெளியிட்டன. தி.க.வின் ''விடுதலை''யும், தி.மு.க.வின் ''முரசொலி'' மற்றும் ''தினகரன்'' நாளேடுகளும் பா.ம.க.வின் ''தினப்புரட்சி''யும் இதை பெரிதுபடுத்தி வெளியிட்டு புலிகள் மீது பழி விழாதிருப்பதில் குறியாக இருந்தன.

''புலிகள் மீது பழி போடுவது அபாண்டம்! ஸ்டேட்ஸ் மென் ஆங்கில ஏடு கருத்து. கடந்த மார்ச் 5ந்தேதி ராஜீவுடன் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த கவிஞர் காசி ஆனந்தன் சந்தித்துப் பேசினார். நடந்ததை மறப்போம் என்று இரு தரப்பினரும் நல்லுறவை விரும்பினர். இச்சந்திப்பு காரணமாக பயந்து போன இலங்கை அதிபர் பிரேமதாசா, ராஜீவைக் கொல்ல சதி செய்திருக்கலாம். ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு உறுதியளித்த ராஜீவைக் கொல்ல புலிகள் கனவிலும் கருத மாட்டார்கள். முட்டாள்தனமான காரியங்களில் பிரபாகரன் ஈடுபட மாட்டார். எனவே புலிகள் மீது அபாண்டமாக பழி சுமத்தக்கூடாது.'' (தினகரன் 5.6.91)

போலிக் கம்யூனிஸ்டுகளின் நாளேடான ''தீக்கதிர்'' மே.27-ந் தேதியன்று பெரிய தலையங்கமே தீட்டி இது சி.ஐ.ஏ.வின் சதி என்றது. ராஜீவ் கொல்லப்படுவதற்கு சற்றுநேரத்திற்கு முன்பு நியூயார்க் டைம்ஸ் பத்திரிக்கை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்ட விஷயங்கள், ராஜீவ் கொல்லப்பட்ட அடுத்த ஒரு மணி நேரத்தில் அமெரிக்க தொலைக்காட்சியில் செய்தி அறிவிக்கப்பட்டது, கொலை செய்யப் பயன்படுத்தப்பட்ட குண்டு அமெரிக்க ராணுவத்தில் பயன்படுத்தப்படும் வகையைச் சேர்ந்தது என்ற தகவல் முதலானவற்றைக் காட்டி, ''இந்தியா ஒரு வலுமிக்க சுதந்திர நாடாக இருக்கக்கூடாது என்று இந்தியாவைச் சுற்றி இதுநாள் வரை பகைமை வளர்த்து வந்த ஏகாதிபத்திய உளவு அமைப்புகள் இப்போது நம் நாட்டிற்குள் குழப்பத்தை உருவாக்க ராஜீவ்காந்தியை தனது சி.ஐ.ஏ. மூலம் தீர்த்துக் கட்டியுள்ளது என்ற சந்தேகம் பலமாக எழுந்துள்ளது'' என்று எழுதியது.

புலிகளையும் தமிழீழ சுயநிர்ணய உரிமையையும் எதிர்ப்பது என்ற நிலைப்பாட்டைக் கொண்ட போலிக் கம்யூனிஸ்டுகள், கருணாநிதி - தேசிய முன்னணியின் கூட்டாளிகளாக இருப்பதால் தங்கள் கூட்டணி மீது பழிவிழாதிருக்க இப்படியொரு ஊகத்தைக் கிளப்பினர்.

புலிகள் இக்கொலையைச் செய்திருக்க மாட்டார்கள் என்று காட்டுவதற்காக, தி.க; தி.மு.க. மற்றும் பிற புலிகள் ஆதரவு இயக்கத்தினர் உடனே இந்த ஊகத்தைப் பெரிதுபடுத்தத் தொடங்கினர். தன்னுரிமைப் போருக்கு முன்னுரிமை கொடுப்போம் என்ற முழக்கத்துடன் புலிகளை ஆதரிக்கும் ''தமிழ்தேசப் பொதுவுடமை''க் கட்சி தனது ''கண்ணோட்டம்'' ஜூன் '91 இதழில், சி.ஐ.ஏ. சதியாக இருக்கலாம், இலங்கை அரசின் மீதும் சந்தேகப் பார்வை விழுந்துள்ளது, காசி ஆனந்தன் ராஜீவை சந்தித்துப் பேசினார் ஆகியவற்றை விரிவாக தலையங்கக் கட்டுரையாக எழுதியது.

ஆனால் ராஜீவ் கொலை பற்றி இவர்களின் நிலைப்பாடு என்ன? ராஜீவ் கொல்லப்பட்டதைக் கண்டிக்கிறார்களா? இரங்கல் தெரிவிக்கிறார்களா? என்று எந்த நிலைப்பாடுமின்றி ''ராஜீவுக்குப் பிறகு....'' என்று தலைப்பிட்டு எழுதி இப்பிரச்சினையிலிருந்து ''கண்ணோட்டம்'' சந்தர்ப்பவாதமாக நழுவிக் கொண்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

விடுதலைப் புலிகளை ஆதரித்து வந்த பாட்டாளி மக்கள் கட்சியின் ''தினப்புரட்சி'' நாளேடு, ''இந்தக் கொலையில் விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்டு இருக்கலாம் என்பதற்கு எந்தவிதமான ஆதாரமும் கிடைக்கவில்லை. தி.மு.க தூண்டுதலால் விடுதலைப் புலிகள் இப்படுகொலையைச் செய்தார்கள் என்ற புகாருக்கும் எவ்வித ஆதாரமும் கிடையாது. வளரும் நாடுகளில் முக்கிய தலைவர்களை தீர்த்துக் கட்டுவதில் அனுபவம் வாய்ந்த ஒரு மிகப் பெரிய நாட்டின் உளவு நிறுவனம் இதில் சம்பந்தப்பட்டு இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.'' (தினப்புரட்சி 26.5.91)

ஆனால் ராஜீவைக் கொல்ல அமெரிக்காவுக்கு அவசியம் ஏதுமில்லை. ஏனெனில் ராஜீவ் அமெரிக்காவின் நம்பகமான விசுவாசி. அமெரிக்க சார்புக் கொள்கையைத் தான் அவர் கொண்டிருந்தார். ஈராக் யுத்தத்தின் போது, முஸ்லீம்களிடம் ஓட்டுப் பொறுக்கும் நோக்கத்தோடு அவர் அமெரிக்காவுடன் முரண்படுவதாக நாடகமாடினார். அதுவும்கூட ஈராக் விவகாரத்தைப் பேசித் தீர்க்கலாம் என்றாரே த்விர, அமெரிக்காவை எதிர்க்க அவர் முன்வரவில்லை. மேலும் ராஜீவ் ஆட்சிக்கு வந்தால் தங்களுக்கு ஆபத்து என்று அமெரிக்கா கருதுவதற்கு அடிப்படையே இல்லை. இப்படிச் சொல்வதால் நம்மை அமெரிக்க கைக்கூலி என்று இவர்கள் முத்திரை குத்தினாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

பின்னர், ராஜீவை காங்கிரசாரே கொன்றுவிட்டு அனுதாப அலையை அறுவடை செய்வதாக இன்னுமொரு ஊகத்தை பாமரத்தனமாக தி.க., தி.மு.க.வினர் கிளப்பி விட்டனர்.

''காங்கிரசுக்கு அனுதாபத்தை ஏற்படுத்த காங்கிரசாரே இக்கொலையை செய்திருக்கக் கூடாதா?'' தி.க. சட்டத்துறை செயலர் எஸ்.துரைசாமி எழுப்பிய கேள்வி (விடுதலை, மே.24) ''இப்போது நான் கேட்பதெல்லாம் - தமிழக காங்கிரசார் ராஜீவை கூட்டத்திற்கு அழைக்கவில்லை என்றால் அவர் எப்படி வந்தார்? அவரை அனுப்பி வைத்த சக்தி எது? புலன் விசாரணை செய்கிறவர்கள் அதையும் சேர்த்து விசாரிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை'' மதுரை கூட்டத்தில் கருணாநிதி (முரசொலி 9.6.91)

இப்படி சில ஊகங்களையும் வாதங்களையும் எழுப்பி காங்கிரசார் மீது தி.க; தி.மு.க.வினர் பழிசுமத்த முயன்றபோது, காட்டில் திரிய வேண்டிய புலிகளை நாட்டில் உலாவவிட்ட தி.மு.க.வுக்கா உங்கள் ஓட்டு?'' என்று காங்கிரசும், அ.தி.மு.க.வும் தேர்தல் பிரச்சார சுவரொட்டிகளை வெளியிட்டதும், கருணாநிதி அரண்டு போனார். ராஜீவ் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில்தான் புலிகளுடன் நான் பேச்சுவார்த்தை நடத்தினேன். இலங்கை பிரச்சினையில் மத்திய அரசுக்கு உதவியதற்காக தி.மு.க.விற்கு ராஜீவ்காந்தி பகிரங்கமாக நன்றி தெரிவித்தார். பிரதமராக இருந்தபோதும், எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோதும் ராஜீவ்காந்தியை பத்திரமாக வரவேற்று பாதுகாப்பாக அனுப்பியது தி.மு.க. ஆட்சி. (கருணாநிதி பேட்டி - முரசொலி 6.6.91)



**ராஜீவுக்கு இரங்கல் தெரிவித்து எதிர்கட்சியினரின் அமைதி ஊர்வலம்; அரசியல் கோமழத்தனம்.**

என்று ஒப்பாரி வைத்தார்.

உலகத் தமிழினத்தின் ஒப்பற்ற தலைவராகப் பீற்றிக் கொள்ளும் கருணாநிதி, ''தி.மு.க. ஆட்சியில் விடுதலைப் புலிகள் உள்ளிட்ட எல்லா போராளிகளும் சிறப்பு முகாம்களில் வைக்கப்பட்டு கட்டுப்பாடு விதித்ததை மக்கள் மறந்து விடுவார்கள் என்ற எண்ணமா? 30க்கும் மேற்பட்ட விடுதலைப் புலிகளை தேசிய பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்து சிறை வைத்தது தி.மு.க. ஆட்சி என்பதை மறுக்க முடியுமா? '' (முரசொலி, மே.24) என்று அறிக்கை வெளியிட்டு அப்பட்டமாக தன்னை ஈழத் துரோகியாக இனங்காட்டிக் கொண்டார். ஒரு நெருக்கடி வந்தவுடன் எல்லாவற்றையும் கைவிட்டு சரணடையும் பிழைப்புவாதி என்பதை மீண்டும் நிரூபித்தார்.

புலிகளை ஆதரிக்கும் அதே சமயம் கருணாநிதியை விமர்சிக்கும் இதர திராவிட இயக்க கட்சிகளின் தன்மையும் செயல்பாடும் இதேவகையில்தான் உள்ளது. நேற்று வரை ஈழ விடுதலை ஆதரவாளர்களாக, புலிகளின் ஆதரவாளர்களாக மார் தட்டிக் கொண்ட இவர்கள், இப்போது தாங்கள் புலிகளின் ஆதரவாளர்கள் என்று கூறிக் கொள்ளவே அஞ்சுகின்றனர். நீண்டகாலமாக புலிகளின் பாசிசப் போக்குகளையும் அதன் பல்வேறு அராஜக நடவடிக்கைகளையும் ஆதரித்ததோடு அவற்றை நியாயப்படுத்தவும் செய்தனர். இவற்றை நேர்மறையில் சுட்டிக் காட்டி, புலிகளின் பாசிசப் போக்கை அம்பலப்படுத்திய போது நம்மை ஈழ விடுதலைக்கே எதிரானவர்கள் என்று முத்திரை குத்தி தனிமைப்படுத்தவும் முயன்றார்கள்.

ஆனால் ஈழத் துரோகிகளான அமிர்தலிங்கம், பத்மநாபா முதலானோர் கொல்லப்பட்ட போது, யார் செய்திருந்தாலும் அது நியாயமானதுதான் என்று நாம் எழுதினோம். புலிகளின் ஆதரவாளர்களோ கோழைத்தனமாக கருத்து தெரிவிக்காமல் நழுவிக் கொண்டனர் ஓட்டுக் கட்சிகளோ அநாகரீகமான செயல், மனிதாபிமானமற்ற செயல் என்று இரங்கல் தெரிவித்தன. அதே போல இப்போது ராஜீவ் கொல்லப்பட்ட போதும், யார் செய்திருந்தாலும் அதற்காக வருத்தப்படவோ அனுதாபப் படவோ தேவையில்லை என்று நாம் கூறுகிறோம். ஆனால் புலிகளின் ஆதரவாளர்களோ பேடித்தனமாக ஓடி ஒளிந்து கொள்கின்றனர். புலிகள் செய்திருக்க மாட்டார்கள் என்பதோடு, ராஜீவுக்கு இரங்கலும் தெரிவித்து இக்கொலையை காட்டுமிராண்டித்தனமான செயல் என்று கண்டிக்கிறார்கள்.

புலிகள் இக்கொலையை செய்தார்களா, இல்லையா என்பதல்ல பிரச்சினை. யார் செய்திருந்தாலும் அதற்கான அடிப்படையாக பாசிச ராஜீவ் தண்டனைக்குரிய குற்றம் புரிந்தவரா, இல்லையா? ராஜீவ் சாவுக்கு இரங்கல் தெரிவிப்பதும் அனுதாபப்படுவதும் அவசியமா, இல்லையா என்பதுதான். ஆனால் மையமான இந்த விவகாரத்தை திசை திருப்பவும், தமது நிலைப்பாட்டிலிருந்து நழுவிக் கொள்ளவுமே புலிகள் செய்தார்களா, சி.ஐ.ஏ. சதியா, இலங்கை அரசு செய்ததா என்று பலவாறாக ஊகங்களே எழுப்பி துப்பறியக் கிளம்பியுள்ளார்கள். தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் நோக்கத்துடன், சி.பி.ஐ. நடுநிலையானது போலக் காட்டி, மற்ற கோணங்களிலிருந்தும் விசாரிக்க கோருகின்றனர்.

ராஜீவ் கொலையை ஒட்டி, ஈழவிடுதலையை ஆதரிக்கும் பல இந்தியத் தமிழர்களும், ஈழ அகதிகளும் கைது செய்யப்பட்டுள்ளதை அறிந்தும்கூட அவர்கள் மௌனம் சாதிக்கிறார்கள். அதைவிட, மனிதாபிமான உணர்வின்றி ஈழ அகதிகள் அனைவரையும் இலங்கைக்கு விரட்ட வேண்டும் என்று காங்கிரசார் கூப்பாடு போட்டு வரும் வேளையில்; அதைக் கண்டிக்கக்கூட அவர்கள் தயாராக இல்லை. நாளை புலிகள்தான் ராஜீவைக் கொன்றார்கள் என்று விசாரணையில் தெரிய வருமானால் அவர்கள் தம்மை ஈழவிடுதலை ஆதரவாளர்களாகக் கூட காட்டிக் கொள்ள முன்வர மாட்டார்கள். பின்னர், இதுதான் தமிழினத்தின் ராஜதந்திரம் என்று அவர்கள் நியாயப்படுத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

●பாலன்



படிப்பகம்

www.padippakam.com

# மாநிலத்தை ''பிளாக்மெயில்'' செய்கிறது போலீசு

''எங்களுடைய நடவடிக்கைகள், விவகாரங்கள் எதுவானாலும் யாரும் எதற்கும் குறுக்கிடக்கூடாது. நாங்கள் சட்டப்படி, நீதி - நேர்மைப்படி நடக்கிறோமா என்று பார்க்கவும் எங்களைக் கண்டிக்கவும் தண்டிக்கவும் யாரும் முயலாதீர்கள். எங்களுக்குக் கடிவாளம் போட, மூக்கணாங்கயிறு போட யாரும் எண்ணாதீர்கள். எங்கள் செயல்கள் எதுவானாலும் எவ்விதத் தடையுமின்றி அனுமதிக்கப்பட வேண்டும். இல்லையானால் காலிகளின் வன்முறை, சூறையாடல், சமூக விரோதக் குற்றங்களைக் கண்டு கொள்ளாமல் இருந்து ஊக்குவிப்பதன் மூலம் அனைவருக்கும் பாடம் புகட்டுவோம்.''

— இப்படி இந்த மாநில மக்களையே உருட்டி மிரட்டி, 'பிளாக்மெயில்' செய்து வருகிறது தமிழ்நாடு போலீசு. தம்மீதான எந்தப் புகார் மீதும் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று நீதித்துறை உட்பட பிற அரசு நிர்வாக அமைப்புகளை நிர்பந்தித்து வருகிறது, தமிழ்நாடு போலீசு. இன்னும் சொல்வதானால் பெயரளவுக்கு வேலை செய்யும் மறைமுக வேலை நிறுத்தத்தில் போலீசு, குறிப்பாக போலீசு அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். இதனால் கிரிமினல் குற்றங்கள் வெடித்துப் பரவி வரச் செய்கிறார்கள்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பிருந்து நடந்துவரும் இந்தப் 'பிளாக்மெயில்' பற்றிய விசயம் ராஜீவ் கொலைக்குப் பிறகு அனைவரின் கவனத்துக்கு வந்திருக்கிறது. ராஜீவ் கொலையை அடுத்து சகல தரப்பினரிடமும் இருந்து 'கடுமை'யான விமர்சனங்கள் வந்ததைத் தொடர்ந்து தமிழ்நாட்டுப் போலீசு தந்துள்ள விளக்கம் அது 'பிளாக் மெயில்' செய்துவரும் செயலை ஒப்புக் கொள்வதாகத்தான் உள்ளது.

''மத்திய அரசும், உளவுப் பிரிவுகளும் எச்சரித்தும் ராஜீவுக்குத் தகுந்த பாதுகாப்புத் தர தமிழகப் போலீசு தவறிவிட்டது. குண்டு வெடித்தவுடன் 2, 3 அதிகாரிகள் தவிர அத்தனை போலீசாரும் பயந்து, பதறி ஓடிப் போய் விட்டார்கள். விடுதலைப் புலிகளின் சம்பளப் பட்டியலில் உள்ள சில போலீசு அதிகாரிகள் அவர்களுக்கு உடந்தையாக உள்ளனர். ராஜீவ் கொலைக்குப் பிறகு காங்கிரசு - அ.தி.மு.க குண்டர்கள் தொடுத்த வன்முறை சூறையாடல்களைக் கண்டு கொள்ளாமல், சட்டம் ஒழுங்கை நிலை நாட்டாமல் இருந்து விட்டனர்.'' என்று அரசியல் கட்சிகளும், பத்திரிகைகளும், பொதுமக்களும் போலீசைக் குறை கூறுகின்றனர். ராஜீவ் கொலையை விசாரிக்கும் வர்மா கமிசன் வேறு போலீசின் குறைபாடுகளையும் விசாரிக்க உள்ளது.

ஆனால் போலீசுத் துறையே, குறிப்பாகத் தமிழ்நாட்டுப் போலீசுத் துறையே கில்லாடித்தனமானது. எவ்வளவு கிரிமினல் குற்றங்களைப் பார்த்தவர்கள், செய்தவர்கள்! ஆகவே மேற்படிப் புகார்களை வெகு சுலபமாக சமாளிப்பதோடு இவற்றையே தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு விட ஆரம்பித்து விட்டார்கள்!

திருப்பெரும்புதூர் ராஜீவ் கூட்ட ஏற்பாடுகள், பாதுகாப்பு பற்றிய போலீசின் எச்சரிக்கையை கட்சிக்காரர்கள் மதிக்கவில்லை. ராஜீவே பாதுகாப்பு ஏற்பாடுகளை மீறினார்; போலீசின் எச்சரிக்கை நடவடிக்கைகளை எதிர்த்தார், என்கிறது போலீசு. இதற்கும், காங்கிரசு கோஷ்டிச் சண்டையை சாக்காகப் போலீசு பயன்படுத்துவதற்கும் பதில் கூறமுடியாமல் திணறுகிறது, காங்கிரசு.

குண்டு வெடித்ததும் பயந்துபதறி ஓடிப் போனார்கள் போலீசார் என்பதற்கு பலர் சாட்சியம் கூறுகின்றனர். முதலில் இந்தப் புகாருக்குப் பதில் கூற முடியாது பொறுப்பின்றி ஓடிப்போன அதிகாரிகள் மீது இலாகா பூர்வ விசாரணையும் நடவடிக்கையும் எடுப்பதாக உறுதி கூறினர். ஆனால் உடனேயே வேறு மாதிரி வழக்கமான பாணியில் புளுகத் தொடங்கி விட்டனர்.

திருப்பெரும்புதூர் போன 250 போலீசாரில் யாரும் ஓடிவிடவில்லை. தடயங்களைப் பாதுகாப்பதற்காக சற்றுத் தள்ளி முற்றுகை அரணாக நின்றிருந்தனர் என்று பத்திரிகைகள் மூலம் பொய்த் தகவல்களைப் பரப்புகின்றனர். குண்டு வெடிப்பில் சில அதிகாரிகள் - போலீசார் மாண்டு போனது, குண்டு வெடிப்புக்குப் பிறகு இரு அதிகாரிகள் விரைந்து செயல்பட்டது ஆகியவற்றைக் காட்டுகின்றனர். ஆனால் அவர்கள் தனிப்பட்ட முறையில் காங்கிரசு ஆதரவாளர்கள் என்பதுதான் உண்மை.

---

***எந்தவொரு குற்றத்துக்கும் போலீசு மீது நடவடிக்கை எடுத்தால் போலீசின் தார்மீக உணர்வை அது குற்றச் செய்து விடும் என்று கூறி தப்பிவிடுவதே வழக்கமாகி விட்டது. கடிவாளமற்ற அதிகாரம் கொடுத்தால்தான் வேலைகளைச் செய்வோம் என்று போலீசு கும்பல் மிரட்டுகிறது.***

எந்தவொரு குற்றத்துக்கும் போலீசு மீது நடவடிக்கை எடுத்தால் போலீசின் தார்மீக உணர்வை அது குன்றச் செய்து விடும் என்று கூறித் தப்பிவிடுவதே வழக்கமாகி விட்டது. இதிலே போலீசுக்கு உடந்தையாக இருந்த ஆட்சியாளர்களுக்கு எதிராகவே இந்த ஆயுதத்தை இப்போது போலீசு பயன்படுத்துகிறது.

இது மட்டுமல்ல. ஏற்கனவே கடந்த சில மாதங்களாக தமிழ்நாட்டுப் போலீசு செய்து வரும் மறைமுக வேலை நிறுத்தம், 'பிளாக்மெயில்' நடவடிக்கைக்கும் கூட ராஜீவ் கொலையைத் தொடர்ந்து வரும் புகார்களைப் பயன்படுத்திக் கொள்கிறது போலீசு. கடிவாளமற்ற அதிகாரம் கொடுத்தால்தான் வேலைகளைச் செய்வோம் என்று மிரட்டுகிறது.

''ராஜீவ் கொலையைத் தொடர்ந்து ஒரு வாரம் நடந்த வன்முறை - அராஜகம் பற்றி பல புகார்கள் வந்தும் போலீசார் வேண்டுமென்றே தான் நடவடிக்கை எடுக்கவில்லை. அந்த வெறியாட்டங்கள் குறித்து உண்மையில் போலீசார் சந்தோசப்படுகிறார்கள். தினசரி வாழ்க்கையில் போலீசின் அவசியம் பணிகள் பற்றி அப்போது தான் மக்களுக்குப் புரியும் என இருந்து விட்டார்கள்'' என்று பகிரங்கமாகவே கூறுகிறது போலீசு.

''கடந்த சில மாதங்களாகவே திடீரென்று கிரிமினல் குற்றங்கள் பெருகிவிட்டன. ஏனென்றால் வக்கீல்கள், மருத்துவர்கள் மற்றும் சில நடுத்தரப் பிரிவினர் மீது நடவடிக்கை எடுத்ததற்காகப் பலரும் போலீசைச் சாடுகின்றனர். சில கிரிமினல்களின் உறவினர் தொடுத்த வழக்குகளில் போலீசுக்கு எதிராக கோர்ட்டுகளில் கண்டனம் தெரிவித்து நட்டஈடு தரும்படியும் தீர்ப்பாகியுள்ளது. சில காலிகளைப் பிடித்து உதைத்திருந்தால் இப்போது நடந்த வன்முறை, சூறையாடல்களைத் தடுத்திருக்கலாம். ஆனால் அரசியல்வாதிகள் புகார் கூறுவார்கள். சட்டத்தை மீறுவதாகக் கோர்ட்டுகள் சாடும். அதைவிடக் கண்டு கொள்ளாமல் இருப்பதே மேல் என்று இருந்துவிட்டோம்'' என்கிறது போலீசு.

இதற்கு முன்பு பெருகிவரும் குற்றங்கள், பட்டப் பகலில் போலீசு கண்முன்னே நடக்கும் குற்றங்களைக் கூட ஏன் கட்டுப்படுத்துவது இல்லை என்று பத்திரிகையாளர் கேட்டால் கூட இதையேதான் பதிலாகச் சொல்வது அவர்களின் வழக்கமாகி விட்டது.

''கிரிமினல் குற்றங்களைக் கண்டு பிடிக்க வேண்டுமானால் ஒவ்வொரு போலீசு நடவடிக்கையிலும் கொஞ்சம் 'அதிக்கிரமம்' தவிர்க்க முடியாது. சில கேடிகளைப் பிடித்துத் தகுந்தபடி விசாரிப்பதும் அடைத்து வைப்பதும் அவசியமானது. ஆனால் சட்டப்படி கைது செய்தவர்களை அடித்து வாக்குமூலம் வாங்கக்கூடாது; 24 மணி நேரத்தில் கோர்ட்டு முன்பு நிறுத்த வேண்டும். இப்படிச் செய்தால் எந்த வழக்கையும் விசாரிக்க முடியாது. இதைப் புரிந்து கொள்ளாமல் கோர்ட்டும், மக்களும் எங்களைச் சாடுகின்றனர். விசாரணைக் கமிசன் வேறு போட்டுள்ளனர். எதற்கு வம்பு என்று தான் போலீசு நடவடிக்கைகள் எதிலும் மா



படிப்பகம்

www.padippakam.com



# 'ஆட்டோ' சங்கருக்கு தூக்கு அதிகாரிகளுக்கு பதவி உயர்வு

பிரபல சமூக விரோத கிரிமினல் ''ஆட்டோ'' சங்கர் கும்பல் மீதான வழக்குகளில் தீர்ப்பு, வந்துள்ளது. மூன்று பேருக்குத் தூக்கு, 5 பேருக்கு ஆயுள் தண்டனை. இரண்டு பேர் தலைமறைவாக உள்ளனர். 'அப்ரூவராக' மாறியவர் விடுதலை என்பது மூன்றாண்டுகளாக நடந்த வழக்கின் முடிவில் தீர்ப்பு. தீர்ப்புக் கேட்ட பிறகும் வழக்கமான சந்தோசத்துடன் சிறிதும் கவலையின்றிச் சிறைக்குத் திரும்பினான், ''ஆட்டோ'' சங்கர்.

ஆறு பேரைக் கொன்றது, கள்ளச் சாராயம் - விபச்சாரத் தொழில் நடத்தியது போன்ற குற்றங்களுக்கான 1988 ஜூனில் ''ஆட்டோ'' சங்கர் கும்பல் பிடிபட்டபோது நாடே அதிர்ச்சிக்குள்ளானது. காரணம், குற்றங்களின் கொடூரம் மட்டுமல்ல. உயர் போலீசு அதிகாரிகளும், அரசியல் தலைவர்களும், பிரபல சினிமா நடிகைகளும் ''ஆட்டோ'' சங்கர் கும்பலின் கூட்டாளிகளாகவும், வாடிக்கையாளர்களாகவும் இருந்தனர் என்பது அம்பலமானது தான்! இதற்கான ''வீடியோ'', புகைப்படங்கள், ''டயரி'' மற்றும் பிற சாட்சியங்கள் - ஆதாரங்கள் இருப்பதாகப் பத்திரிகைகள் எழுதின.

அப்போது தமிழ்நாட்டை ஆண்ட ஆளுநர் பி.சி.அலெக்ஸாண்டர் குற்றவாளிகள் யாரானாலும் நிச்சயம் தண்டிப்போம் என்று கூறினார். சில போலீசுக்காரர்கள் தற்காலிக வேலை நீக்கமும், ஓரிரு அதிகாரிகள் இடமாற்றமும் செய்யப்பட்டனர். அதன் பிறகு ''ஆட்டோ'' சங்கர், சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அரசியல் வாதிகளை மிரட்டினான் என்றும் தடயங்கள் - சாட்சியங்களை அழிப்பதற்காக அவர்கள் அவனுடன் பேரம் பேசினார்கள் என்றும் செய்திகள் வந்தன. சிறையில் இருந்தபோது 'ராஜமரியாதை'யுடன் ''ஆட்டோ'' சங்கர் கும்பல் நடத்தப்பட்டது என்றும் அதைப் பயன்படுத்திக் கொண்டு, அதிகாரிகள் துணையுடன் தப்பியோடி மீண்டும் பிடிபட்டான் என்றும் செய்திகள் வந்தன. இதற்காக விசாரணை கமிஷன் போட்டுத் தீர்ப்பும் சமர்ப்பிக்கப் பட்டது. ஆனால் நடவடிக்கை யார் மீதும் எடுக்கப்படவில்லை. இதற்கிடையே ''ஆட்டோ'' சங்கருக்கு உடந்தையாக இருந்த அதிகாரிகளுக்கு பதவி உயர்வுகள் தரப்பட்டன. ஒரு அதிகாரி, போலீசுக்கு ஒழுக்கத்தைப் போதிக்கும் துறைக்கு தலைவராக்கப்பட்டார். போலீசின் ஒழுக்கம் எப்படிப்பட்டதாக இருக்கும் பாருங்கள்.

''விபச்சாரம், சாராயம் போன்ற புனிதமற்ற மோசமான தொழில்களை இவர்கள் செய்து வந்துள்ளனர். பழிவாங்கும் எண்ணத்தோடு கொலைகளைச் செய்துள்ளனர். இவர்களை இப்படியே விட்டால் நாடு காடாகிவிடும். 'சட்டம் என் கையில்' என்று எடுத்துக் கொண்ட இவர்களை விடக்கூடாது'' என்ற கூறி ''ஆட்டோ'' சங்கர் கும்பலுக்கு ''நீதிபதி'' தீர்ப்புக் கூறியுள்ளார்.

ஆனால் ''ஆட்டோ'' சங்கர் கும்பலுக்கு உடந்தையாக இருந்த போலீசு அதிகாரிகள், அரசியல் வாதிகள் போன்ற பெரும்புள்ளிகள் விசாரணைக்குக் கொண்டு வரப்படவில்லை. ஏற்கனவே சட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டு பல ''ஆட்டோ'' சங்கர்கள் உருவாவதற்கு ஊற்றுமூலமாக உள்ள இப்படிப்பட்டவர்கள் சுதந்திரமாக உலாவும் இந்த நாடு, நாடாகவா இருக்கிறது?

டிக் கொள்வதைத் தவிர்க்கிறோம்'' என்று தமது எல்லா அக்கிரமங்களையும் நியாயப்படுத்துகின்றனர்.

உண்மையென்ன? சிவில் வழக்குகளிலும், சிறு குற்றங்களிலும் சந்தேகிக்கும் அப்பாவிகளைப் பிடித்துப் போய் சித்திரவதை செய்வதிலும், கொட்டடிக் கொலையிலும் போலீசு நிலையக் கற்பழிப்பிலும் இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கிறது தமிழ்நாடு போலீசு. அப்படிப்பட்ட விவகாரங்கள் மீதான சில தீர்ப்புகளில் கண்டனமும், அபராதமும் தான் விதிக்கப்பட்டுள்ளன. தூக்குத் தண்டனை தரவேண்டிய கொலை வழக்குகளில் சிறைத்தண்டனை கூட கிடையாது.

அதையும் கூட தாங்கிக் கொள்ள மறுக்கும் தமிழ்நாடு போலீசு, மக்கள் வரிப்பணத்திலும், லஞ்ச ஊழலிலும் அரசியல் - பதவிப் போட்டியிலும் ஊறித் திளைக்கும் தமிழ்நாடு போலீசு, தமிழ்நாட்டு மக்களையே இப்போது மிரட்டி 'பிளாக்மெயில்' செய்கிறது.

இதைவிட மிகவும் மோசமானது, தமிழ்நாடு போலீசு முன்வைத்துள்ள ஒரு புதிய யோசனைதான்! ''இந்திரா, எம்.ஜி. ஆர்-சாவைப் போலவே வன்முறை - சூறையாடல் ராஜீவ் கொலையைத் தொடர்ந்து வழக்கமாகிவிட்டது. இப்படிப்பட்ட கலவரங்களைத் தடுக்க வேண்டுமானால் வியாபாரிகள் தனியார் படைகளைக் கட்டிக் கொள்ள வேண்டும்; சூறையாடுபவர்கள் வீடுகளில் புகுந்து தாக்கி, பொருட்களை எல்லாம் மீட்பதோடு, அவர்களது கை, கால்களை முறித்துப் போட வேண்டும். போலீசும் இதற்கு உடந்தையாக இருக்கும். புகார்கள் வந்தாலும், தாக்கியவர்களின் அடையாளம் தெரியவில்லை என்று வழக்கை முடித்து விடுவார்கள்.'' போலீசு நடவடிக்கை எடுத்து ''வம்பில்'' மாட்டிக் கொள்வதை விட இப்படிச் செய்யலாம் என்று நேரடியாகவே கூறுகின்றனர்.

ஏற்கனவே பேட்டைக்குப் பேட்டை போலீசின் கூட்டோடு சமூக விரோத கிரிமினல் குண்டர் படை (மஃபியா) உருவாகி வருகிறது. இப்போது வியாபாரிகளின் குண்டர் படையைக் கட்டிக் கொள்ளும்படி போலீசே விபரீத யோசனை கூறுகிறது. இப்படிப்பட்ட குண்டர் படைகளின் அட்டூழியங்கள் சாதாரண மக்களுக்கு எதிராகத்தான் திரும்பும். கள்ளச்சந்தை, பதுக்கல் - கலப்படம் போன்ற சமூக விரோத - கிரிமினல் குற்றங்களுக்கும் பயன்படுத்தப்படும் என்பதை போலீசார் அறியாததல்ல. கிரிமினல் குற்றங்களைத் தடுப்பதாகச் சொல்லி அப்பாவிகளின் கண்களைத் தோண்டித் திராவகம் ஊற்றியது பீகார் - பாகல்பூர் போலீசு; கால்களை முறித்து ''காயடித்து'' ஆண்மையைப் பறித்தது உத்திரப் பிரதேசம் - காசி போலீசு. அப்படியே இங்கும் செய்யும்படி உபதேசிக்கிறது தமிழக போலீசு.

மிகப் பெரிய சமூக விரோத - கிரிமினல் குற்றவாளிகள் காக்கி சட்டையில் இருக்கிறார்கள் என்பதைத்தான் இவை காட்டுகின்றன.

● மணி



படிப்பகம்

www.padippakam.com

## எத்தியோப்பியா:

# சர்வாதிகார எதிர்ப்புப் போரில் சதிகார அமெரிக்காவின் கைவரிசை

**பஞ்சமும் பட்டினிச் சாவுகளும் கோரத் தாண்டவமாடும் எத்தியோப்பியாவில் 16 ஆண்டுகால போலி சோசலிச ராணுவ சர்வாதிகார ஆட்சி தூக்கியெறியப் பட்டுள்ளது. ஆனால் இப் போராட்டத்தின் வெற்றியை எத்தியோப்பிய மக்கள் அனுபவிப்பதற்குள், போராட்ட அமைப்புகளின் தலைமையைக் கைப்பற்றி சீரழிப்பதில் அமெரிக்கா வெற்றி பெற்றுள்ளது.**

கிழக்கு ஐரோப்பிய மாற்றங்களைத் தொடர்ந்து ஆப்பிரிக்காவின் வட கிழக்கேயுள்ள சிறிய நாடான எத்தியோப்பியாவில் போலி சோசலிச ராணுவ சர்வாதிகார ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது. 16 ஆண்டுகளாக நீடித்த சர்வாதிகார எதிர்ப்புப் போரில், பல்வேறு போராட்ட அமைப்புகள் ஒன்றிணைந்து இறுதி வெற்றியைச் சாதித்துள்ளன.

ஆப்பிரிக்க கண்டத்தின் வடகிழக்கு பகுதியில் செங்கடலை ஒட்டி அமைந்துள்ள எத்தியோப்பியா, பஞ்சமும் பட்டினிச் சாவுகளும் வறுமையும் கோரத் தாண்டவமாடும் ஏழை நாடு. நூறாண்டு காலமாக மன்னராட்சிக் கொடுங்கோன்மையாலும், ஏகாதிபத்தியங்களின் ஆதிக்கத்தாலும், ராணுவ சர்வாதிகாரத்தாலும் சூறையாடப்பட்ட நாடு.

வரலாற்றில் அபிசீனியா என குறிப்பிடப்படும், ஐந்து கோடி மக்கட்தொகையைக் கொண்ட எத்தியோப்பியாவில் பாதிக்கும் மேற்பட்டோர் பழமைவாத கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்கள். 70 க்கும் மேற்பட்ட இனங்களையும் 100 மொழிகளையும் கொண்ட இந்நாட்டில் அம்காரா என்ற பெருந்தேசிய இனமே தொடர்ந்து நாட்டை அடக்கி ஆண்டு வந்தது. அம்காரா தேசிய இனத்தின் மொழியே நாட்டின் ஆட்சி மொழியாக அறிவிக்கப்பட்டு இதர தேசிய இனங்கள் அடக்கி ஒடுக்கப்பட்டன.

கிறிஸ்துவ மதத்தில் தேவதூதனாக கருதப்படும் மன்னன் சாலமனின் தெய்வீக வாரிசாக தன்னை அறிவித்துக் கொண்டு, ஹெய்லி சலாசி என்ற மன்னன் எத்தியோப்பியாவை இந்நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து நீண்ட காலமாக அடக்கி ஆண்டான். பின்னர் 1935-ல் இத்தாலிய பாசிஸ்டுகள் எத்தியோப்பியாவைக் கைப்பற்றி அண்டை நாடான சோமாலியாவுடன் இணைத்து ஒரே நாடாக்கி ஆதிக்கம் செலுத்தினர். அதன் பிறகு 1941-ல் பிரிட்டிஷ் படைகள் இத்தாலிய ஆக்கிரமிப்பாளர்களை விரட்டியடித்து மீண்டும் ஹெய்லி சலாசியை எத்தியோப்பிய மன்னராக்கின. பின்னர் 1974-ல் நடந்த ராணுவ ஆட்சிக் கவிழ்ப்பில் 57 ஆண்டு காலம் நாட்டை ஆண்ட மன்னன் ஹெய்லி சலாசியின் கொடுங்கோலாட்சி தூக்கியெறியப்பட்டது. அதைத் தொடர்ந்து ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிய ராணுவத் தளபதி மெங்கிஸ்து மரியம் ரஷிய ஆதரவுடன் ராணுவ சர்வாதிகார ஆட்சியை நிறுவினார்.

ஆட்சிக்கு வந்த மெங்கிஸ்து மரியம் அரசியல் கட்சிகளைத் தடை செய்து, சர்வாதிகாரத்துக்கு எதிரான எந்தவொரு போராட்டத்தையும் மிருகத்தனமாக ஒடுக்கினார். எத்தியோப்பியாவின் வடகிழக்கே செங்கடலை ஒட்டியுள்ள எரிட்டிரிய மக்கள் தேசிய சுயநிர்ணய உரிமைக்காக ஆயுதப் போராட்டத்தைத் தொடுத்தனர். மத்திய பகுதியிலுள்ள டைகீரிய மக்கள் மெங்கிஸ்துவின் சர்வாதிகாரத்துக்கு எதிராக ஆயுதமேந்திய கலகங்களை நடத்தினர். ரஷியாவிடமிருந்து பெருமளவில் நவீன ஆயுதங்களையும், ராணுவ ஆலோசகர்களையும் குவித்துக் கொண்ட சர்வாதிகாரி மெங்கிஸ்துவின் ஆட்சி இவையனைத்தையும், ரத்த வெள்ளத்தில் மூழ்கடித்தது. சர்வதேச பொது மன்னிப்புக் கழகத்தின் கூற்றுப்படி, மெங்கிஸ்துவின் 17 ஆண்டு கால ராணுவ சர்வாதிகார ஆட்சியில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட எத்தியோப்பிய மக்கள் கொல்லப்பட்டனர்.

ஏற்கனவே வறட்சியிலும் பஞ்சத்திலும் சிக்கியிருந்த எத்தியோப்பியா மெங்கிஸ்துவின் ஆட்சியில் முழுக்கவும் ரஷிய அடிவருடி நாடாகச் சீரழிந்து, பட்டினிச் சாவுக்குத் தள்ளப்பட்டது. ஏழாண்டுகளுக்கு முன்பு எத்தியோப்பியாவைக் கவ்விய பட்டினிச் சாவினால் 50,000 பேர் மாண்டனர். ஆனாலும் அதைப்பற்றி கிஞ்சித்தும் அக்கறைப் படாமல் மேலும் அதிநவீன ஆயுதங்களை வாங்கிக் குவித்து ஏறத்தாழ 4 லட்சம் பேரைக் கொண்ட, ஆப்பிரிக்காவிலேயே மிகப்பெரிய ராணுவத்தைக் கட்டியமைத்தார் சர்வாதிகாரி மெங்கிஸ்து. லட்சக்கணக்கான மக்கள் பஞ்சத்தில் பரிதவித்த போது, நாட்டின் மொத்த வருவாயில் மூன்றில் இரு பங்கை ராணுவத்துக்குச் செலவிட்டு செங்கடல் பிராந்தியத்தில் ரஷியாவின் வலிமைமிக்க அடிவருடி நாடாக எத்தியோப்பியாவை மாற்றியமைத்தார். ருமேனிய போலி சோசலிச ராணுவ சர்வாதிகாரி சௌசெஸ்கூவைப் போல, நாட்டின் செல்வத்தைச் சூறையாடி எத்தியோப்பியாவிலும் வெளிநாடுகளிலும் ஏராளமான பண்ணைகளை ரகசியமாக விலைக்கு வாங்கி உல்லாச - களிவெறியாட்டத்தில் மூழ்கித் திளைத்தார். போதாக்குறைக்கு 1984-ல் எத்தியோப்பியாவை சோசலிச நாடு என்று அதிகாரபூர்வமாக அறிவித்தார். இதர தேசிய இனங்களை துப்பாக்கி முனையில் ஒடுக்கிய இக்கேடு கெட்ட ராணுவ சர்வாதிகார ஆட்சியை சோசலிசம் என்று இங்குள்ள போலிக் கம்யூனிஸ்டுகளும் அவர்களின் குருபீடமான ரஷிய ஏகாதிபத்தியவாதிகளும் வெட்கமின்றி ஆதரித்தனர்.

ஆனால் கோர்பச்சேவ் அதிகாரத்துக்கு வந்த பிறகு தீவிர உள்நாட்டு நெருக்கடியில் சிக்கிக் கொண்ட ரஷியா, தனது அடிவருடி

மக்கள் மத்தியில் சரணடையும் சர்வாதிகாரி மெங்கிஸ்துவின் படைகள்





படிப்பகம்

www.padippakam.com

## அல்ஜீரியா:

# போலி சோசலிசத்துக்கு மரண அடி

மன்னராட்சிக் கொடுங்கோன்மை நிலவும் குவைத்தின் ஷேக்குகள் கூட நாடாளுமன்ற ஜனநாயகத்தை நிறுவப் போவதாக கூறிவரும் வேளையில், ஆப்பிரிக்காவின் வடமுனையிலுள்ள அல்ஜீரியாவில் கற்காலத்தை நோக்கிய போராட்டம் தீவிரமடைந்துள்ளது. இஸ்லாமிய புனரமைப்பு முன்னணி (FIS) என்ற முஸ்லீம் அடிப்படைவாத எதிர்க்கட்சி அல்ஜீரியாவை முஸ்லீம் நாடாக அதிகார பூர்வமாக அறிவிக்கக் கோரி ஆயுதமேந்திய கலகங்களை நடத்தி வருகிறது. பாப் எல் குயாட் மாவட்டம் முஸ்லீம் பழமை வாதிகளின் பிடியில் உள்ளது. இங்கு பல முக்கிய நகரங்களை அவர்கள் கைப்பற்றிக் கொண்டு அச்சுறுத்துகின்றனர். தொடர்ச்சியாக ஊரடங்கு உத்திரவு போட்டும் கூட அதையும் மீறி ஆர்ப்பாட்டங்கள், கலகங்கள், ராணுவத்தை திருப்பித் தாக்குவது என்பதாக பழமைவாதிகள் போராட்டத்தைத் தீவிரப்படுத்தி வருகின்றனர்.

120 ஆண்டு காலம் பிரெஞ்சுக் காலனியாக இருந்த அல்ஜீரியா ஆயுதப் போராட்டத்தின் மூலம் 1962-ல் விடுதலையைச் சாதித்தது. இப்போராட்டத்துக்கு தலைமை தாங்கிய தேசிய விடுதலை முன்னணி (FLN) என்ற கட்சியே கடந்த 28 ஆண்டுகளாக ஆட்சியதிகாரத்தைச் சுவைத்து வருகிறது. ஏகாதிபத்திய எதிர்ப்பில் உறுதியாக நின்ற இம்முன்னணியில் அங்கம் வகித்த தேசிய முதலாளிகளில் ஒரு பிரிவினர், பின்னர் நாட்டுக்கும் மக்களுக்கும் துரோகமிழைத்து ஏகாதிபத்தியங்களுடன் கூடிக்குலாவி தரகு முதலாளிகளாகச் சீரழிந்தனர்.

ஆளும் தேசிய விடுதலை முன்னணி ரஷிய அடிவருடிக் கட்சியாக சீரழிந்து போலி சோசலிசப் பொருளாதாரக் கொள்கையை முன்வைத்து நாட்டை எதிர் திசையில் வழி நடத்திச் சென்றது. எத்தியோப்பிய சர்வாதிகாரி மெங்கிஸ்துவைப் போல, ''இது சோசலிசத்துக்கான அல்ஜீரியப்பாதை'' என்று அதன் அதிபர் சாட்லி பசப்பினார். இத்தகைய நேரு பாணி போலி சோசலிசத்தின் விளைவாக நாட்டின் பொருளாதாரமே நிலை குலைந்து அந்நாட்டு மக்கள் பலமுறை உணவுக் கலகங்களை நடத்தியுள்ளனர்.

ஆளும் போலி சோசலிசக் கட்சியின் ஊழல் மோசடிகளாலும், வறுமை, வேலையின்மையாலும் வெறுப்புற்ற மக்கள் முஸ்லீம் அடிப்படைவாத கானல் நீரை நம்பி ஓடுகிறார்கள். நடைபெறவுள்ள தேர்தலில் முஸ்லீம் பழமைவாதிகள் வெற்றி பெறும் வாய்ப்பு இருப்பதால், ஆளுங்கட்சியினர் தேர்தல் சட்டத்தைத் திருத்தி வகுப்புவாதிகள் தேர்தலில் நிற்கத் தடைவிதித்து தங்களை மதச்சார்பற்ற சோசலிசவாதிகளாக காட்டிக் கொண்டனர். ஆளும் கட்சியின் இந்த நடவடிக்கை அல்ஜீரிய மக்களை மேலும் ஆத்திரமடையச் செய்துள்ளது. பீதியடைந்த அதிபர் சாட்லி பென்ஜடிட், பழியை பிரதமர் மற்றும் அதிகாரிகள் மீது போட்டு அவர்களை பதவி நீக்கம் செய்ததோடு புதிய பிரதமரை நியமித்து சமரச பேச்சு வார்த்தைக்கு கலகக்காரர்களை அழைக்கிறார். முஸ்லீம் அடிப்படைவாதிகள் இதனை ஏற்க மறுத்ததன் விளைவாக அல்ஜீரியா கொந்தளித்துக் கொண்டிருக்கிறது.

மக்கள் விரோத ஆட்சியாளர்கள் மீது மக்களுக்கு வெறுப்பும் ஆத்திரமும் பெருகும்போது அதை அணி திரட்ட புரட்சிகர சக்திகள் முன்கை எடுக்காத நிலையில், பிற்போக்கு பழமைவாத சக்திகளே அதை சாதகமாக்கிக் கொண்டு ஆட்சிக்கு வருகின்றன. நேற்று ஜெர்மனியில் அது பாசிசமாக உருவெடுத்தது. இன்று இந்தியாவில் அது பாரதீய ஜனதாவின் இந்து வெறி பாசிசமாகவும், அல்ஜீரியாவின் முஸ்லீம் பழமைவாதமாகவும் வளர்ந்து அச்சுறுத்தி வருகிறது. அதைவிட, நேரு பாணி போலி சோசலிசக் கொள்கைக்கு இந்தியாவைப் போலவே, எத்தியோப்பியாவைத் தொடர்ந்து அல்ஜீரியாவிலும் மரண அடி விழுந்துள்ளது.

நாடுகளை முன்னைப் போல பராமரிக்க முடியவில்லை. மேலும், அப்பட்டமாக முதலாளித்துவத்தை சிவப்புக்கம்பளம் விரித்து வரவேற்கும் கோர்பசேவ், பழைய வகையிலான போலி சோசலிச - அதிகார வர்க்க முதலாளித்துவ ஆட்சியை வெளிப்படையாக எதிர்த்து கிழக்கு ஐரோப்பிய மாற்றங்களை வரவேற்கிறார். உலக மேலாதிக்கத்திற்காக அமெரிக்காவுடன் நாய்ச் சண்டையில் ஈடுபட்டிருந்த ரஷியா இப்போது தனது கொள்கையிலிருந்து பின்வாங்கிக் கொண்டு அமெரிக்காவுடன் கூடிக் குலாவுகிறது. அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு - ஆதிக்க வெறியாட்டங்களை மௌனமாக அங்கீகரிக்கிறது. இதைச் சாதகமாக்கிக் கொண்டு தனது ஒற்றைத் துருவ - புதிய உலக ஒழுங்கமைப்புக்கு ஏற்ப முன்னாள் போலி சோசலிச நாடுகளில் அமெரிக்கா அடுத்தடுத்து ஆட்சிக் கவிழ்ப்புகளை நடத்தி வருகிறது. கிழக்கு ஐரோப்பாவைத் தொடர்ந்து அல்பேனியாவிலும் இப்போது எத்தியோப்பியாவிலும் அமெரிக்கா இதைச் சாதித்துள்ளது.

கடந்த 30 ஆண்டு காலமாக தேசிய சுயநிர்ணய உரிமைக்காக ஆயுதமேந்தியப் போராடி வரும் எரிட்டீரிய மக்கள் விடுதலை முன்னணியும் (EPLF) எத்தியோப்பியாவின் டைகீரிய இனத்தைச் சேர்ந்த எத்தியோப்பிய மக்களின் புரட்சிகர ஜனநாயக முன்னணியும் (EPRDF) மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த ஒரோமோ விடுதலை முன்னணியும் (OLF) தமது பொது எதிரியான மெங்கிஸ்துவின் ராணுவ சர்வாதிகாரத்துக்கு எதிராக ஐக்கிய முன்னணியை நிறுவி ஆயுதப் போராட்டத்தை இவ்வாண்டின் துவக்கத்திலிருந்து தீவிரப்படுத்தின. படிப்படியாக பல்வேறு சிறு நகரங்களைக் கைப்பற்றிய இவ்வமைப்புகள் கடந்த மே மாதத்தில் தலைநகர் அடிஸ் அபாபாவை நோக்கி முன்னேறின. அதே நேரத்தில் வடபகுதியிலுள்ள எரிட்டீரிய மக்கள் விடுதலை முன்னணி தலைநகர் அஸ்மாராவையும் முக்கிய துறைமுகநகரான அசாபையும் கைப்பற்றியதும் அப்பகுதியின் கவர்னரும் ராணுவ அதிகாரிகளும் நாட்டை விட்டே தப்பியோடினர். சர்வாதிகார எதிர்ப்புப்போர் தீவிரமடையத் தொடங்கியதும், எத்தியோப்பிய விவகாரத்தில் அமெரிக்கா தலையிடத் தொடங்கியது. இரு தரப்பினரது தகராறைத் தீர்க்கும் பஞ்சாயத்துக்காரனாக நாடகமாடிய அமெரிக்கா, லண்டனில் அமைதிக்கான பேச்சுவார்த்தையை நடத்தியது. துவக்கத்தில் இப்பேச்சுவார்த்தையில் பங்கேற்ற போதிலும் அமெரிக்க தலையீட்டினால் தனது சர்வாதிகார ஆட்சிக்கு சாவு மணி அடிக்கப்படுவதைக் கண்டு அரண்டு போன மெங்கிஸ்து, தனது வாரிசாக ஜெப்ரே கிடான் என்பவரை புதிய அதிபராக நியமித்துவிட்டு, ஜிம்பாப்வே நாட்டுக்கு விமானத்தில் தப்பியோடி அடைக்கலம் புகுந்தார்.

***4 லட்சம் பேரைக் கொண்ட, ஆப்பிரிக்காவிலேயே மிகப் பெரிய ராணுவத்தைக் கட்டியமைத்தார் சர்வாதிகாரி மெங்கிஸ்து. அவரது 16 ஆண்டு கால கொடுங்கோலாட்சியில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர். மெங்கிஸ்துவின் கேடு கெட்ட ஆட்சியை சோசலிசம் என்று இங்குள்ள போலிக் கம்யூனிஸ்டுகள் ஆதரித்தனர்.***

தமது ஆட்சியதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ள எத்தியோப்பியாவின் புதிய அதிபர் அரசியல் கைதிகளை விடுதலை செய்து, இரு தரப்பினரும் சேர்ந்து கூட்டணி ஆட்சி அமைக்கலாம் என்று கெஞ்சினார். தலைநகரில் நிறுவப்பட்டிருந்த தோழர் லெனினது மாபெரும் வெண்கலச் சிலையை அகற்ற உத்திர்விட்டு ரஷிய சார்புத் தன்மையிலிருந்து விலகி விட்டதாக காட்டிக் கொண்டார். ஆனால் போராட்ட அமைப்புகள் இந்தப் பசப்பல்களை ஏற்க மறுத்து, தலைநகரைக் கைப்பற்றியதும் சரணடைந்தார். ஆப்பிரிக்க கண்டத்திலேயே பெரிய வலுவான படை என்று மார் தட்டிக்கொண்ட மெங்கிஸ்துவின் அரச படைகள் உயிருக்கு அஞ்சி அண்டை நாடுகளுக்குத் தப்பியோடின. போரில் சிக்கிய ராணுவ வீரர்களில் பலர் சரணடைந்தனர். மற்றவர்கள் தமது துப்பாக்கிகளை அற்ப விலைக்கு விற்றுவிட்டு தலைமறைவாகினர்.

போராட்ட அமைப்புகளின் படைகள் தலைநகரை நோக்கி முன்னேறத் தொடங்கியதும், எத்தியோப்பியாவில் நிலைமை சீரடைய வேண்டுமானால் இப்படைகளை அங்கீகரித்து அரச படைகள் சரணடைய



படிப்பகம்

www.padippakam.com

# ஆர்.எஸ்.எஸ். வெறியாட்டம் அதிகார வர்க்கம் உடந்தை

அதிராம்பட்டினம் போலீசு நிலையத்திற்கு எதிர்ப்புறத்தில் உள்ள துர்க்கை செல்லியம்மன் கோயில் குளக்கரையில் உள்ள இடம் ரெவின்யூ புறம்போக்கு நிலம் என நிர்வாக அதிகாரி சான்று அளித்துள்ளார். இந்த இடத்தில் என்.டி.மோட்டார் ஒர்க்ஸ், தி.மு.க அலுவலகம், ஹோட்டல், தையற்கடை, பெட்டி கடைகள் முதலியவை 25 வருடங்களுக்கு மேலாக உள்ளன. இந்த நிலங்கள் கோயிலுக்குச் சொந்தமானது எனக்கூறி இந்து மதவெறி - இந்து முன்னணி - கும்பல் உரிமை பாராட்டி அனைத்து கடைகளையும் காலி செய்யச் சொல்லி பல வழிகளிலும் முயன்று வருகிறது. இதன் விளைவாக கடந்த மாதம், கடைகளை காலி செய்யும்படி ஆர்.டி.ஓவிடம் இருந்து நோட்டீசு வந்தது. இப்பகுதியில் கடை வைத்திருக்கும் விவசாயிகள் விடுதலை முன்னணி தோழர் ஒருவரின் முயற்சியால் பாதிக்கப்பட்டவர்கள் சட்டபூர்வ நடவடிக்கையின் ஈடுபட்டு கடைகளை பாதுகாக்க முனைந்தனர்.

இந்நிலையில் ராஜீவ் கொலையை சாதகமாக்கிக் கொண்டு இந்து முன்னணியினர் வெட்டரிவாள், பெட்ரோலுடன் வந்து இப்பகுதியிலுள்ள கடைகளை தாக்கி தீ வைத்தனர். பொருட்களையெல்லாம் சூறையாடினர். ரூ.2 லட்சம் பெறுமான சொத்துக்கள் சாம்பலாகின; களவாடப்பட்டன. பேருந்து நிலையத்திற்கு அருகில் இருந்த வி.வி.மு. கொடிக் கம்பத்தையும் பிடுங்கிச் சென்றனர். இக்கும்பலில் சிலரை போலீசு கைது செய்து 15 நாள் காவலில் வைத்துள்ளது.

பின்னர் திடீர் கரிசனத்துடன் ஆர்.டி.ஓ, தாசில்தார் வந்த பாதிக்கப் பட்டவர்களுக்கு நஷ்டஈடு கிடைக்கச் செய்வதாகவும், அதே இடத்தில் கடைகள் கட்டி தொழில் நடத்துவதற்கு வசதி செய்து தருவதாகவும் கூறிவிட்டுச் சென்றனர். ஆனால் கடைகளுக்காக கொட்டகை போட்டுக் கொண்டிருந்த பொழுது இந்து முன்னணியினர் வந்து தடுக்கவே போலீசு தலையிட்டு "நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்; நீங்கள் போங்கள்" என சமாதானப்படுத்தி அவர்களை அனுப்பி வைத்தது. பாதிக்கப்பட்ட தரப்பினர் மீண்டும் ஆர்.டி.ஓவைச் சந்திக்க செல்லுமுன், இடத்தை காலி செய்ய வேண்டும்; இல்லையெனில் அரசு தரப்பில் அகற்றுவோம் என அடாவடித்தனமாக அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

அரசு எந்திரமும், அதிகார வர்க்கமும் இந்து மதவெறியர்களுக்கு எடுபிடியாக செயல்பட்டு வருவதை இச்சம்பவம் மேலும் எடுத்துக் காட்டுகிறது.

— **தகவல்: வி.வி.மு., பட்டுக்கோட்டை.**

வேண்டும் என்று அமெரிக்கா சிபாரிசு செய்தது. இதனால் ஆத்திரமடைந்த அம்காரா தேசிய இன மக்கள், எத்தியோப்பியாவை துண்டாட அமெரிக்கா சதி செய்வதாக குற்றம் சாட்டி தலைநகர் அடிஸ் அபாபாவிலுள்ள அமெரிக்க தூதரகத்தின் முன் ஆர்ப்பாட்டங்களை நடத்தி அதன் கொடியை எரித்தனர். எத்தியோப்பியாவின் அமெரிக்கத் தூதர் உயிருக்கு அஞ்சி இத்தாலிய தூதரகத்தில் அடைக்கலம் புகுந்தார்.

மெங்கிஸ்துவின் சர்வாதிகாரத்தை முறியடித்து, ஆட்சியதிகாரத்தை போராட்ட அமைப்புகள் கைப்பற்றிய பிறகு எழுந்துள்ள முக்கிய கேள்வி, எத்தியோப்பியா முன்பு போல ஒரே நாடாக இருக்குமா? அல்லது பல தேசிய இன அரசுகளாகப் பிளவுபடுமா என்பதுதான்.

30 ஆண்டு காலமாக தேசிய சுயநிர்ணய உரிமைக்காகப் போராடி வெற்றி பெற்றுள்ள எரிட்டீரிய தேசிய இன மக்கள், எத்தியோப்பியா முழுவதையும் ஒரு குடையின் கீழ் ஆள்வதை எதிர்க்கின்றனர். தனி நாடாகப் பிரிந்து செல்வதையே விரும்புகின்றனர். ஆனால் பிற தேசிய இனங்களின் போராட்ட அமைப்புகள் எரிட்டீரியாவின் உரிமையை அங்கீகரித்த போதிலும், ஒன்றுபட்ட நாடாக எத்தியோப்பியா நீடிப்பதையே விரும்புகின்றன. அமெரிக்காவும் அதைத்தான் வலியுறுத்துகிறது.

ஏனெனில் செங்கடலை ஒட்டியுள்ள எரிட்டீரியா தனிநாடாகி விட்டால் எத்தியோப்பியாவுக்கு கடல் வழியே இல்லாமல் போய்விடும். இதனால் அந்நாட்டின் ஏற்றுமதி - இறக்குமதி வர்த்தகம் பெரிதும் பாதிக்கப்படும். மேலும் எரிட்டீரியா தனிநாடாகி விட்டால், அதன் விளைவாக அண்டை நாடுகளான சோமாலியா, சூடான் ஆகியவற்றிலும் தேசிய இனப் போராட்டங்கள் தீவிரமாகி நாடு பிளவுபடும். இது ஏகாதிபத்தியங்களின் ஆதிக்கத்துக்கு இடையூறாகி விடும். எனவே எரிட்டீரியாவின் சுய நிர்ணய உரிமை நியாயமானது போல காட்டிக் கொண்டு, போராட்ட அமைப்புகளிடையே பிளவையும் மோதலையும் அமெரிக்கா மூட்டி விட்டுள்ளது. 16 ஆண்டு காலம் ஐக்கியப்பட்டுப் போராடி வந்த எரிட்டீரிய விடுதலை முன்னணியும், எத்தியோப்பிய மக்கள் ஜனநாயக முன்னணியும் இப்போது எதிரும் புதிருமாக முரண்பட்டு நிற்கின்றன. அதே போல தென்பகுதியிலுள்ள ஒரோமாக்கள், கூடுதல் உரிமைக்காக கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு நடத்தக்கோரி மக்கள் ஜனநாயக முன்னணியுடன் முரண்படுகின்றனர்.

போராட்ட அமைப்புகளில் சற்று பெரிதான எத்தியோப்பிய மக்கள் புரட்சிகர ஜனநாயக முன்னணி எரிட்டீரியாவுக்கு சுயாட்சி உரிமை அளித்து, ஒன்றுபட்ட எத்தியோப்பியா நீடிப்பதையே விரும்புகிறது. இந்த முன்னணியில் டைகீரிய தேசிய இனத்தவரே அங்கம் வகிக்கின்றனர். இந்த அமைப்பு மார்க்சிய லெனினியத்தை தனது சித்தாந்த வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டுள்ளதாக கூறுகிறது. முன்பு அமெரிக்கா மற்றும் ரஷியாவின் மேலாதிக்கத்தை கடுமையாக எதிர்த்து வந்தது. ஆனால் இப்போது அன்னிய முதலீடுகளை வரவேற்று நாட்டை பொருளாதார ரீதியில் முன்னேற்றி சோசலிசத்தை நிறுவப் போவதாக கூறுகிறது. இந்த அமைப்பின் தலைவரான மெலாஸ் ஜெனாவி அமெரிக்க ஆதரவுடன் புதிய பிரதமராக நியமிக்கப்படுவார் என்று நம்பப்படுகிறது.

கடந்த 16 ஆண்டுகளாக ஜனநாயகத்துக்காகவும், தேசிய சுயநிர்ணய உரிமைக்காகவும் நடந்த போராட்டத்தின் வெற்றியை எத்தியோப்பிய மக்கள் அனுபவிப்பதற்குள், போராட்ட அமைப்புகளின் தலைமையைக் கைப்பற்றி சீரழிப்பதில் அமெரிக்கா வெற்றி பெற்றுள்ளதையே இது காட்டுகிறது. இதுநாள் வரை இப்போராட்டத்தை கண்டு கொள்ளாமலிருந்த அமெரிக்கா, வெற்றி பெறும் தருவாயில் ஓடிவந்து ஆதரித்து தனது ஆதிக்கத்தை நிலைநாட்டத் துடிக்கிறது. பஞ்சம் பாரித்த எத்தியோப்பியாவுக்கு நிவாரண உதவி, பொருளுதவி செய்வது, ஏகாதிபத்திய தன்னார்வக் குழுக்களின் மூலம் சமூக சேவை செய்வது முதலானவற்றின் மூலம் படிப்படியாக போராட்ட அமைப்புகளின் தலைமையைக் கைப்பற்றி அதை சீரழித்து விட்டது. உலகின் எந்த ஒரு மூலையிலும் எது நடந்தாலும் அதன் தலைவிதியை தான் மட்டுமே தீர்க்க வேண்டும் என்ற உலக மேலாதிக்க வெறியுடன் அது அலைகிறது. அமெரிக்காவின் இந்த வஞ்சக சதிக்கு எத்தியோப்பியாவின் சில போராட்ட அமைப்புகளின் தலைமைகள் இன்று பலியாகிவிட்டன. தலைமையின் குட்டி முதலாளித்துவ வர்க்கத் தன்மையே இத்தகைய ஊசலாட்டத்திற்கும் சமரசத்திற்கும் பிரதான காரணமாக உள்ளது.

கடைசியில், 30 ஆண்டுகாலம் தேசிய சுயநிர்ணய உரிமைக்காகப் போராடி வந்த எரிட்டீரிய மக்களின் ஆயுதப் போராட்டமும், 16 ஆண்டு காலம் ராணுவ சர்வாதிகாரத்துக்கு எதிராகப் போராடி வந்த எத்தியோப்பிய மக்களின் போராட்டமும் விழலுக்கு இறைத்த நீராகிவிட்டது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளைப் போல எத்தியோப்பியாவிலும் சர்வாதிகார அடிமை விலங்கு நொறுக்கப்பட்டு அமெரிக்காவின் பொன் விலங்கு பூட்டப்பட்டுள்ளது. நேற்று ரஷியாவிடம் தனது தலைவிதியை ஒப்படைத்ததைப் போல இன்று அமெரிக்காவிடம் தனது எதிர்காலத்தை இழந்துவிட்டு மீண்டும் பட்டினிப் பாதையில் எத்தியோப்பியா பயணத்தைத் தொடர்கிறது.

● **மனோகரன்**

## அறிவிப்பு

**அன்பார்ந்த வாசகத் தோழர்களே,**

தேர்தல் முடிவுகளை ஒட்டி 16-30 ஜூன் இதழ் வெளிவருவது தாமதப்பட்டதால் 1-15 ஜூலை இதழையும் சேர்த்து ஒரே இதழாக வெளியிட்டுள்ளோம். இதனால் தங்களுக்கு ஏற்பட்ட சிரமங்களுக்கு மிகவும் வருந்துகிறோம்.

— **ஆசிரியர் குழு.**



படிப்பகம்

www.padippakam.com

# காக்கிச் சட்டை கைதிகள்

## சிறை அதிகாரிகளுக்கு கைதிகள் மட்டுமல்ல ஜெயிலர்களும் அடிமைகள்தான்

தேர்தல் புறக்கணிப்பு பிரச்சாரம் செய்து கொண்டிருந்த கோவை மக்கள் கலை இலக்கிய கழகத் தோழர்களை போலீசு கைது செய்து மத்திய சிறையில் அடைத்தது. அங்கு தோழர்கள் சேகரித்த இச்செய்திகள் சிறை மற்றும் சிறைக் கைதிகளின் அவல நிலையை மட்டுமல்ல சிறைக் காவலர்களின் (ஜெயிலர்களின்) அடிமை வாழ்வையும் எடுத்தியம்பும் வண்ணம் உள்ளது. சிறைச்சாலை சித்திரவதைக் கொட்டடிதான் என்பதை இது மேலும் படம் பிடித்துக் காட்டுகிறது.

கோவை மத்திய சிறையில் நூற்பாலை, சோப்புத் தொழிற்சாலை, மரம் அறுக்கும் மில், காகித ஆலை போன்ற பல தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இங்கே சிறைக் கைதிகள் மாடாக உழைக்கின்றார்கள். இவர்களுக்கு சட்டப்படி குறைந்த பட்ச ஊதியம் உண்டு. இதை கைதிகளுக்கு கொடுக்காமல் பீடி கொடுப்பதை கணக்கு காட்டியே அதிகாரிகள் சுருட்டிக் கொள்கிறார்கள்.

இதுமட்டுமல்ல; தாலுகா கிளைச் சிறைக் கைதிகளுக்கு உணவிற்கென ஒரு நாளைக்கு தலா ரூ.6.90-ம் மத்திய சிறையிலுள்ள சாதாரண கைதிகளுக்கு ரூ.12.90-ம் மிசா மற்றும் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் உள்ள கைதிகளுக்கு ரூ.18.90-ம் அரசால் ஒதுக்கப்படுகிறது. இதில் கணிசமான தொகையை அதிகாரிகள் சுருட்டிக் கொண்டு கைதிகளுக்கு புழு வைத்த சோறும், அழுகிய காயும் தான் போடுகிறார்கள். இத்தொகையிலிருந்து தினம் ஒரு கைதிக்கு ரூ.2 வீதம் மாவட்ட சிறைச்சாலை கண்காணிப்பாளருக்கு மாதாமாதம் அனைத்து கிளைச் சிறைச்சாலைகளிலிருந்தும் தந்துவிட வேண்டும் என்பது எழுதப்படாத சட்டமாக இருக்கிறது.


கோவை மத்திய சிறையில் இராமலிங்கம், மகாமுனி என்ற இரு மருத்துவ அதிகாரிகள், கைதிகளுக்கு வழங்கும் பால். முட்டை, இறைச்சிகளை தினம் கடத்திச் செல்கிறார்கள். கைதிகள் மருந்துவ உதவிக்காக வெளியே செல்ல ரூ.50,சிறையிலேயே தங்க ரூ.25, நோயாளிக்கான உணவிற்கு பரிந்துரைக்க ரூ.10 என பிடுங்கிக் கொள்கிறார்கள். இவர்களுக்கென அரசு ஒதுக்கிய குடியிருப்பை வாடகைக்கு விட்டு சட்ட விரோதமாக வெளியே குடியிருக்கிறார்கள்.

சிறையில் கைதிகளின் 'அவசரத் தேவைகளை' பூர்த்தி செய்து கொள்ள இன்னும் ஆங்கிலேயன் காலத்து மலச்சட்டி முறைதான் உள்ளது. ஒரு கைதி ஜன்னல் கம்பியில் தூக்குப் போட்டுக் கொண்டார் என்பதால் ஜன்னல்களையெல்லாம் சுவர் வைத்து அடைத்துவிட்டனர். காற்றோட்டமே இல்லாமல் கைதிகள் தினம் செத்துப் பிழைக்கிறார்கள்! எந்தக் கைதியும் கால் செருப்புடன் அதிகாரிகளைப் பார்க்க அனுமதிக்காத முறை இன்னும் தொடர்கிறது.

கைதிகள் யாராவது விவரம் தெரிந்து தட்டிக் கேட்டால் அடி, உதை, சித்திரவதை, அடக்குமுறைதான் கிடைக்கும். இப்படி சடையன் என்ற கைதி தட்டிக் கேட்டார் என்பதால் பாளையங்கோட்டை சிறைக்கு மாற்றியதோடு அவரது மனைவி, குழந்தை கூட சந்திக்கும் உரிமையை அடாவடித்தனமாக மறுத்து வருகிறார்கள். ஈரோட்டைச் சேர்ந்த மயில்சாமி என்பவர் தான் வேலை செய்த தற்குரிய ஊதியத்தைக் கேட்டு போராடிக் கொண்டுள்ளார். இவர் விடுதலையாகி இரண்டாண்டு ஆகியும் இதுவரை இவரது ஊதியத்தை சிறை நிர்வாகம் தரவில்லை.

மேலும் கைதிகள் உழைத்து உற்பத்தி செய்யும் பொருட்களையும் சட்டவிரோதமாக திருடி விற்கிறார்கள் அதிகாரிகள். இங்கு உற்பத்தியாகும் பொருட்கள் அனைத்தும் அரசு துறைகளுக்கே விற்பனை செய்ய வேண்டும். இங்கு உற்பத்தியாகும் 'பாண்டேஜ்' துணிகள் தனியார் மருத்துவமனை ஒன்றுக்கு விற்கப்படுகிறது. அதே போல் சோப்பின் பெரும்பகுதி திருச்சி மத்திய சிறையின் 'பேக்கிங் கிளார்க்' குஞ்சாம்பு மூலம் வெளிச்சந்தைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

சிறை அதிகாரிகளின் கொள்ளைக்கு சில சிறைக் காவலர்களும் (ஜெயிலர்களும்) உடந்தையாக இருக்கிறார்கள். பலர் தாங்கள் அதிகாரிகளுக்கு அடிமைகளாக இருப்பதை உணர மறுத்து கைதிகளை அடிமை போல் நடத்துகிறார்கள். கைதிகளிடம் காசு பறிக்கிறார்கள். கைதிகளை பார்க்க வருபவர்களையும் கூட இவர்கள் விட்டு வைப்பதில்லை.



சிறை அதிகாரிகளைப் பொருத்தவரை ஜெயிலரும் கைதிகளைப் போலவே ஒரு வித அடிமை தான். கைதிகள் மட்டுமல்ல, சிறை ஊழியர்களும் அதிகாரிகளின் சொந்த - வீட்டு வேலைகளுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். சிறை ஊழியர்கள் வரையறுக்கப்பட்ட வேலை நேரம் மறுக்கப்பட்டு அதிகாரிகள் கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரவேண்டும். மாத ஊதியம் ஒன்றைத் தவிர ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சட்டபூர்வமான சலுகைகள் அனைத்தும் - மருத்துவம், குடியிருப்பு, போக்குவரத்துப்படி, இரவு நேரப்பணிக்கான படி முதலியவை - சிறை அதிகாரிகளின் விருப்பத்திற்கு உட்பட்டே கிடைக்கிறது.

சிறை அதிகாரிகளுக்கோ அரண்மனை போன்ற குடியிருப்பு வசதிகள்! எதிரிலேயே முடைநாற்றம் வீசும் புறாக்கூடுகளாக் அடிப்படை வசதியற்ற குடியிருப்புகள், சிறை ஊழியர்களுக்கு! குடியிருப்புகளை ஆண்டு தோறும் பராமரிப்பதாக அரசுக்கு கணக்கு காட்டி அதிகாரிகள் சுருட்டிக் கொள்கிறார்கள்.

சிறைத் துறையில் எந்தப் பிரிவு ஊழியர்களும் தொழிற்சங்கம் அமைக்க முடியாது! 1989-ல் கிருஷ்ணமூர்த்தி, இஸ்மாயில் என்ற இரு காவலர்கள் சங்கம் அமைக்க முற்பட்டனர். அதற்காக கடைநிலை ஊழியர்களை மாவட்டம் விட்டு மாவட்டம் மாற்றக்கூடாது என்ற விதிமுறையை தூக்கியெறிந்து இவர்களை இடமாற்றி பழிவாங்கினார்கள் அதிகாரிகள். கடலூர் சிறைக்கு கிருஷ்ணமூர்த்தியையும், நீலகிரி - கூடலூர் சிறைக்கு இஸ்மாயிலையும் மாற்றினார்கள். கோவையில் இருக்கும் தனது குடும்பத்தை கவனிக்க இயலாமல் மூத்த மகளை பறிகொடுத்து கிட்டதட்ட மனநோயாளி நிலைக்கு கிருஷ்ணமூர்த்தி வந்த பின்னர்தான் அவரை கோவை சிறைக்கு மீண்டும் கொண்டு வந்தார்கள். தற்போது மருத்துவ விடுப்பில் சென்றார் என்ற காரணத்தை வைத்து தற்காலிக வேலை நீக்கம் செய்துள்ளனர்.

கடந்த 29.5.91 அன்று 130-க்கும் மேற்பட்ட சிறைக் காவலர்கள், குறித்த காலத்தில் போக்குவரத்துப்படி தரப்படவேண்டும், வெளியூரிலிருந்து வரும் காவலர்களுக்கு உணவு - தங்குமிட வசதி தேவை முதலிய சிறு கோரிக்கைகளுக்காக உள்ளிருப்பு போராட்டம் நடத்தினர். சிறைக் கண்காணிப்பாளர் சந்திரசேகரின் மிரட்டலால் எவ்வித முடிவுமில்லாமல் இப்போராட்டம் திரும்பப் பெறப்பட்டது. போராடியவர்கள் தங்கள் கோரிக்கையை - குறைகளை பத்திரிகையாளர்களிடம் சொல்லக்கூட பயப்படுகிறார்கள். கடந்த 33 நாட்களாக காவலில் வைக்கப்பட்ட ம.க.இ.க. தோழர்கள் நெருங்கிப் பழகியதால் காவலர்கள் தமது குறைகளை சொல்ல முன்வந்தனர். ஆனால், சிறை அதிகாரிகள் ஐ.ஏ.எஸ்; ஐ.பி.எஸ். 'கேடாகளாக' இல்லை என்பதாலேயே இத்தகைய கொடுமைகள் நிலவுவதாகவும் உயர்மட்ட அதிகாரிகளிடம் முறையிட்டு சரிபடுத்தி விடலாம் அல்லது குறிப்பிட்ட சில அதிகாரிகளை மாற்றிவிட்டால் சரியாகி விடும் என நம்பி கனவில் வாழ்ந்து வருகிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# காஷ்மீர்:
# பனிமலையில் இரத்த ஆறு

**ப**னிமலை சூழ்ந்த காஷ்மீரின் குப்வாரா மாவட்டம். கடந்த மே மாதம் 5-ந் தேதியன்று பாகிஸ்தான் எல்லையை ஒட்டிய பகுதியில் மேய்ச்சலுக்காக ஆடுகளுடன் சென்ற கிராமவாசிகள் அன்று வீடு திரும்பவில்லை. நள்ளிரவில் துப்பாக்கி வெடிக்கும் சத்தம் கேட்டது. அடுத்தநாள், பாகிஸ்தானில் பயிற்சி பெற்ற 93 தீவிரவாதிகள் போலீசுடன் நடந்த மோதலில் கொல்லப்பட்டனர் என்ற செய்தி வந்தது. உண்மையில், மேய்ச்சலுக்குச் சென்ற அப்பாவி மக்களை சுட்டுக் கொன்றுவிட்டு இந்திய ராணுவம் இவ்வாறு கதை கட்டியது. அதிர்ச்சியடைந்த கிராம மக்கள் தமது உறவினர்களின் உடல்களை ஒப்படைக்கக் கோரி போலீசு நிலையத்தை முற்றுகையிட்டனர்.

இச்செய்தி பரவியதும் தலைநகர் ஸ்ரீநகரில் 8000-க்கும் மேற்பட்ட பெண்கள் போலீசு தலைமை இயக்குனர் அலுவலகத்தின் முன் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். அடுத்த நாள் மனிதாபிமான உணர்வு கொண்ட காஷ்மீர் வக்கீல்கள் சங்கம் உயர் நீதி மன்றத்தில் ரிட் மனு ஒன்றைத் தாக்கல் செய்து கொல்லப்பட்டவர்களின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கக் கோரியது. மக்களது எதிர்ப்பும், போராட்டமும் வலுவாக உள்ளதை உணர்ந்த நீதிமன்றம், கொல்லப் பட்டவர்களின் உடல்களைப் பாதுகாப்பாக தலைநகருக்கு கொண்டு வந்து, நீதித்துறையினரின் முன்னிலையில் உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று ஆணையிட்டுள்ளது.

ஆனால் போலீசும், ராணுவமும் இன்னமும் இறந்தவர்களின் உடல்களை ஒப்படைக்கவில்லை. கொல்லப்பட்டவர்கள் பனியில் புதைந்து போயிருப்பார்கள்; அச்சடலங்களைத் தேடிக் கண்டுபிடிப்பது சிரமமானது என்று கையை விரித்துவிட்டது. இதை எதிர்த்து காஷ்மீர் மாநிலம் முழுவதும் கடந்த மே 8 முதல் 10 வரை தொடர்ந்து 3 நாட்களுக்கு கடையடைப்பு போராட்டத்தை போராளிகளும் பொது மக்களும் வெற்றிகரமாக நடத்தினர்.

கடந்த ஜனவரியில் இந்திய ராணுவமும், மத்திய ரிசர்வ் போலீஸ் படையும் நடத்திய தாக்குதலில் 13 போராளிகளும், 76 அப்பாவி பொது மக்களும் கொல்லப்பட்டனர். இதைக் கண்டித்து அனைத்து போராளி அமைப்புகளும் பொது மக்களும் இரு நாட்கள் கடையடைப்பு போராட்டம் நடத்தினர். ''ஜான்பாஸ்'' என்கிற ஒரு தீவிரவாதக் குழு, காஷ்மீரிலிருந்த ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த இரண்டு பொறியியலாளர்களை கடந்த ஏப்ரல் மாதத்தில் கடத்திச் சென்றது. கைது செய்யப்பட்ட போராளிகளை விடுவிக்கக் கோரியும், காஷ்மீர் விவகாரத்தில் ஐ.நா. சபை தலையாட வேண்டுமெனக் கோரியும், அதுவரை கடத்திச் சென்றவர்களை விடுவிக்க முடியாது என்றும் அக்குழு பிரகடனப்படுத்தியது.

இரு மாதங்களுக்கு மேலாகியும் கடத்தப்பட்டவர்களை இந்திய அரசால் விடுவிக்க முடியவில்லை. தனது கையாலாகாத்தனத்தை மறைக்க, இந்திய ராணுவம் தனது ஆத்திரத்தை அப்பாவி மக்களிடம் காட்டி, பழிவாங்கத் துடிக்கிறது. அதன் விளைவாக அண்மைக் காலமாக காஷ்மீரில் இந்திய ராணுவம் வரைமுறையின்றி தனது நர வேட்டையைத் தீவிரமாக்கியுள்ளது.

★ கடந்த மே 8-ம் தேதியன்று ராணுவத்துடன் நடந்த ''மோதலில்'' கொல்லப்பட்ட 3 போராளிகளின் இறுதி ஊர்வலம் நடந்தது. இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் இந்த ஊர்வலத்தில் பங்கேற்றனர். கான்யார் பகுதியின் அருகே ஊர்வலம் அமைதியாக வந்து கொண்டிருந்த போது, திடீரென மத்திய ரிசர்வ் போலீசுப் படை கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தியது. எந்தவித காரணமுமின்றி நடந்த இத்துப்பாக்கிச் சூட்டில் 23 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்தனர்.

''எனது நான்கு வயது மகன் என்ன குற்றம் செய்தான்? நாயைப் போல அவனைச் சுட்டுக் கொல்ல அவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது?'' என்று குமுறினாள் ஒருதாய். ''நாற்புறமும் சூழ்ந்து கொண்டு தப்பியோட முடியாமல் எங்களை நோக்கி சரமாரியாக சுட்டார்கள். இது ஜாலியன் வாலாபாக் படுகொலையை விட மோசமானது'' என்று பீதியுடன் கூறுகிறார், தனது சகோதரனைப் பறிகொடுத்த நூரா. ''அவர்கள் எங்களைக் கொல்லாம்; ஆனால் இறுதி மூச்சு உள்ளவரை நாங்கள் போராடிக் கொண்டே இருப்போம்'' என்கிறார் இத்துப்பாக்கிச் சூட்டில் தனது கால்களை இழந்த சோபர் ஹம் தானியின் தாய். காஷ்மீரில் இந்திய ராணுவம் நடத்திவரும் அட்டூழியங்களைப் பற்றி இந்திய பத்திரிகைகளில் மெதுவாக செய்திகள் கசியத் தொடங்கிய பின்னரே, கவர்னர் சாக்சேனா இந்த அக்கிரமத்தை ஒப்புக் கொண்டார். போலீசின் காட்டுமிராண்டித்தனமான துப்பாக்கிச் சூட்டுக்கு அங்கு இறைந்து கிடக்கும் செருப்புகளே சாட்சியமாக உள்ளது. அவ்விடத்தை சுற்றி செங்கற்களால் வேலி போல் அமைத்து, இறந்தவர்களின் ரத்தம் தோய்ந்த ஆடைகளை அருகிலுள்ள மரத்தில் தொங்கவிட்டு துப்பாக்கிச் சூடு நடந்த இடத்தை நினைவுச் சின்னமாக இப்பகுதி வாழ் மக்கள் போற்றி வருகிறார்கள்.

★ மே 15-ம் நாளன்று அனந்த்நாக் மாவட்டத்தில் குல்காம் நகரில் தீவிரவாதிகள் ஒளிந்திருப்பதாக்கூறி 150 வீடுகளை இந்திய ராணுவம் தீயிட்டுக் கொளுத்தியது. இதில் முஸ்லீம்கள் மட்டுமின்றி காஷ்மீரி பண்டிதர் (பார்ப்பனர்)களின் வீடுகளும் உடமைகளும் நாசமாயின. இதை எதிர்த்து ஆயிரக்கணக்கான மக்கள் கவர்னர் மாளிகை முன் ஆர்ப்பாட்டம் நடத்திய பிறகு, நீதி விசாரணைக்கு உத்திரவிடப்பட்டது.

★ மே மாதம் முழுவதும் பாரமுல்லா மாவட்டத்தில் தொடர்ந்து ஊரடங்கு உத்திரவு போடப்பட்டதால் அப்பகுதிவாழ் மக்கள் பெரிதும் அல்லற்பட்டனர். தமது அன்றாட பிழைப்பு பாதிக்கப்படுவதால் ஊரடங்கு உத்திரவை ரத்து செய்யக்கோரி மே 22 அன்று அமைதியாக ஊர்வலம் சென்ற போது, துணை ராணுவப் படைகள் கண்மூடித்தனமாக தடியடி நடத்தி பலரது மண்டையைப் பிளந்தன. இளஞ்சிறுவர்கள் பலரை போராளிகள் என்று முத்திரை குத்தி சிறையிலடைத்தன.

**கான்யார் - சவ ஊர்வலத்தின் மீது ராணுவத்தின் துப்பாக்கிச்சூடு; சிதறிக் கிடக்கும் செருப்புகள் - அடக்குமுறையின் நினைவுச் சின்னம்.**





படிப்பகம்

www.padippakam.com

★ கடந்த ஜூன் 12-ம் தேதியன்று ஸ்ரீநக ரில் கடைவீதியில் துணை ராணுவப் படை கள் திடீரென நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 46 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். ஆனால் இவர்கள் அனைவரும் போராளி கள் என்று ராணுவக் கும்பல் முத்திரை குத்தி யது. காட்டுமிராண்டித்தனமான துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்தும், இறந்தவர் உடல்க ளைத் திருப்பித் தரக் கோரியும் ஆயிரக்க ணக்கான மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். அம்பலப்பட்ட அரசு பயங்கரவாதிகள் மேலும் ராணுவத்தைக் குவித்து ஊரடங்கு உத்திரவு போட்டு அடக்கப் பார்த்தனர். ஆனால் அடுத்த நாளே காஷ்மீர் வழக்கறி ஞர்கள் சங்கம், போராளிகள் மற்றும் பொது மக்களுடன் சேர்ந்து கடையடைப்பு போராட்டத்தை தலைமையேற்று நடத்தி ஆட்சியாளர்களின் முகத்தில் கரி பூசியுள் ளது.

காஷ்மீர் மக்கள் போராட்டம் பிரி வினை வாதம், பிளவு வாதமானது; நாட் டைத் துண்டாட பாகிஸ்தான் செய்யும் சதி; அவர்களது போராட்டத்தை ஆதரிப்பது தேச விரோதமானது என்று கூறி இந்து வெறி - தேசிய வெறியூட்டி இந்திய ஆட்சியாளர் கள் தொடர்ந்து தமது அரசு பயங்கரவாத அடக்கு முறையை ஏவி வருகின்றனர். ஆனால் நான்கு தலைமுறைக்கும் மேலாகத் தொடரும் காஷ்மீர் மக்களின் நியாயமான சுயநிர்ணய உரிமைப் போரை அரசு பயங்க ரவாதத்தால் ஒருக்காலும் அடக்கி விட முடி யாது என்பதையே அண்மைக்கால சம்ப வங்கள் நிரூபித்துக் காட்டுகின்றன. ஆளும் வர்க்க அறிவு ஜீவிகளைக் கொண்டும் பத்தி ரிகைகள் மூலமாகவும் இந்திய ஆட்சியாளர் கள் காஷ்மீரில் ராணுவம் நடத்தி வரும் அட் டூழியங்களை நியாயப்படுத்தி வரும் வேளையில், அவர்களில் ஒரு பிரிவினரே, இப்போது காஷ்மீர் மக்களின் நியாயமான போராட்டத்தை ஆதரிக்கத் தொடங்கியுள்ள னர். இந்திய ராணுவத்தின் காட்டு மிராண் டித்தனமான அடக்கு முறையை வன்மை யாக கண்டிக்கும் அவர்கள் காஷ்மீரிலிருந்து உடனடியாக ராணுவத்தை விலக்கிக் கொள் ளுமாறும் கோரியுள்ளனர்.

மனித உரிமை மற்றும் சீர்த்திருத்தவாத இயக்கங்களைச் சேர்ந்த இந்தீர் மோகன், முன்னாள் நீதிபதி தார்குண்டே, மினூ மசானி, கௌரி பஜாஜ் மாலிக், பாஞ்சோலி முதலானோரும், ஜெயப்பிரகாஷ் நாராயண னால் துவக்கப்பட்ட ''ஜனநாயகத்துக் கான குடிமக்கள் இயக்க''த்தை சேர்ந்தவர்க ளும், மற்றும் பிரபல பேராசிரியர்களும் கடந்த மார்ச் மாதத்தில் காஷ்மீர் பற்றிய ஓர் ஆய்வரங்கம் நடத்தி, காஷ்மீர் மக்களின் நியாயமான போராட்டத்தை ஆதரித்துள்ள னர்.

காஷ்மீரில் அரச பயங்கரவாத அடக்கு முறையை ஆதரிக்கும் போலிக் கம்யூனிஸ் டுகளால் பெரிதும் மதிக்கப்படும் முன்னாள் நீதிபதி தார்குண்டே, காஷ்மீரில் நடக்கும் இந்திய ராணுவத்தின் கொலை வெறியாட் டத்தை வெளிப்படையாக எதிர்க்கிறார். காஷ்மீருக்கான ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராகவும் அவர் செயல்படுகிறார். ''முற்போக்கு மனிதாபிமானி'' என்ற பத்திரி கையின் ஆசிரியராக உள்ள அவர், அந்த ஏட்டில் காஷ்மீருக்கு சுய நிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டிய அவசியம் பற்றி யும், ராணுவ அடக்கு முறையின் மூலம் பிரச் சினையைத் தீர்க்க முடியாது என்றும் தொடர்ந்து எழுதி வருகிறார். மனித உரிமை இயக்கத்தைச் சேர்ந்தவரும் ''சுதந்திரம் முத லில்'' என்ற ஏட்டின் ஆசிரியருமான மினூ மசானி, காஷ்மீர் இந்தியாவின் பகுதியாக ஒரு போதும் இருந்ததில்லை என்பதை வர லாற்று ஆதாரங்களுடன் தனது ஏட்டில் நிரூ பித்துக் காட்டியுள்ளார்.

காஷ்மீரிலுள்ள முஸ்லீம்கள் இந்துக்க ளைத் தாக்கி மாநிலத்தை விட்டே துரத்துகி றார்கள்; இந்துக்களுக்கு அங்கே பாதுகாப் பில்லை என்று பாரதீய ஜனதா இந்து வெறி யூட்டி அடக்கு முறையை நியாயப்படுத்தி வரும் வேளையில், காஷ்மீர் பண்டிதர்கள் (பார்ப்பனர்கள்) பங்கேற்பு - ஆதரவுடன் காஷ்மீர் பற்றிய இந்தக் கருத்தரங்கம் நடந் துள்ளது.

காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து அளிக் கும் 370-வது சட்டத்தை நீக்கக்கூடாது. ராணுவம் அங்கிருந்து உடனடியாக வெளி யேற்றப்பட வேண்டும். அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்து, காஷ்மீ ருக்கு சுயநிர்ணய உரிமையை வழங்க வேண்டும். இந்தியாவுடன் காஷ்மீரை இணைத்த பிறகு, இந்தியாவுடன் சேர்ந்தி ருப்பதா, சுய நிர்ணய உரிமை பெற்ற தனி மாநிலமாக நீடிப்பதா அல்லது பாகிஸ்தானு டன் இணைவதா என்பதற்கான கருத்து கணிப்பு வாக்கெடுப்பு நடத்த ஒப்புக் கொண்ட நேரு, அதை திட்டமிட்டே புறக்க ணித்தார். மோசடி தேர்தல்கள் நடத்தப் பட்டு, காங்கிரசின் பொம்மையாட்சியே அங்கு திணிக்கப்பட்டது. இதை எதிர்த்தவர் கள் பாக். கைக்கூலிகள், தேச விரோதிகள் என்று முத்திரை குத்தப்பட்டு அடக்கப்பட்ட னர். வேறுபட்ட மொழி, கலாச்சாரம், பிராந் தியத்தைக் கொண்ட காஷ்மீரை அம்மக்க ளின் விருப்பத்துக்கு எதிராக இந்தியாவுடன் சேர்த்து விலங்கு பூட்டுவது அப்பட்டமான அடக்கு முறையாகும். மனித உரிமைக்கே எதிரான செயலாகும். இந்திய அரசு அடக்கு முறையின் மூலம் தீர்வு காண நினைப்பது முட்டாள் தனமானது. காஷ்மீருக்கு சுய நிர் ணய உரிமையை அளிப்பது ஒன்று தான் தீர்வாக முடியும் என்று அவர்கள் இக்கருத்த ரங்கில் வலியுறுத்தியுள்ளனர்.

ஆட்சியாளர்களும் பத்திரிகைகளும் அனைத்து ஓட்டுக் கட்சிகளும் வதந்திக ளைப் பரப்பியும் தேசிய வெறியூட்டியும் காஷ்மீரில் அரச பயங்கரவாத அடக்கு முறையை நியாயப்படுத்தி வரும் வேளை யில், ஒரு பிரிவு அறிவு ஜீவிகள், பேராசிரி யர்கள், மனித உரிமை இயக்கத்தவரின் எதிர்ப்பு நடவடிக்கைகள் நம்பிக்கையூட்டு தாக உள்ளன. காஷ்மீரை இந்தியாவின் கால னியாக மாற்றி அத்தேசிய இன மக்களை துடிக்கத் துடிக்க கொன்றொழிப்பதை மனித நேயமுள்ள எவரும் சகித்துக் கொண்டிருக்க முடியாது. அரசு பயங்கரவாத அட்டூழியங் களை அம்பலப்படுத்தி, காஷ்மீர் மக்களின் நியாயமான சுயநிர்ணய உரிமைப் போரை ஆதரித்து உரத்தக் குரலெழுப்ப வேண்டும்.

● குமார்

# கோவை ம.க.இ.க. தோழர்கள் மீது காங். காலிகள் தாக்குதல்

பாசிச ராஜீவ் கொலைக்கு போலி கம்யூனிஸ்டுகள் உட்பட அனைத்துக் கட்சிக ளும் 'கண்ணீர் அஞ்சலி' செலுத்தின. இந்நி லையில் ''புதிய ஜனநாயகம்'' ''புதிய கலாச் சாரம்'' ஆகிய பத்திரிக்கைகளும் அவை சார்ந்த தோழமை அமைப்புகளும் பாசிச ராஜீவ் கொலைக்கு கண்ணீர் சிந்தத் தேவை யில்லை என துணிவுடன் எழுதி பிரச்சாரம் மேற்கொண்டன.

கோவை பீளமேடு பகுதியில் மக்கள் கலை இலக்கிய கழகத் தோழர்கள் ''புதிய கலாச்சாரம்'' சுவரொட்டி ஒட்டிக்கொண்டி ருந்த பொழுது காங்கிரசு, அ.தி.மு.க.வைச் சேர்ந்த கும்பல் ஒன்று வந்து தாக்கியது. தோழர்கள் கூறும் பதிலையோ, விளக்கங்க ளையோ எதையும் பொருட்படுத்தாமல் அவர்கள் தாக்கினார்கள். தோழர்களிடம் இருந்த புத்தகங்களையும் சுவரொட்டிகளை யும் பிடுங்கி தீயிட்டு கொளுத்தினர். தோழர் ஒருவரின் சைக்கிளைப் பிடுங்கி பூட்டி சாவியை எடுத்துச் சென்றனர்.


செய்தியறிந்து கூடிய பிற தோழர்கள், பிரச்சினையை போலீசு நிலையத்திற்கு கொண்டு செல்லாமல் மக்கள் மத்தியிலேயே வைத்து தீர்த்துக் கொள்ளலாம் என முடிவெ டுத்து, பகுதியில் தெரிந்த ஒரு கட்சியின் தேர்தல் அலுவலக பொறுப்பாளர் மூலம் தாக்கியவர்களை அணுகினர். அதற்குள் தக வல் கிடைத்து வந்த போலீசு பூட்டியிருந்த சைக்கிளை போலீசு நிலையத்திற்கு எடுத்துச் சென்றுவிட்டதால் பிரச்சினையை போலீசி டம் எடுத்துச் செல்ல வேண்டியதாயிற்று. போலீசு இருதரப்பினரையும் பல மணிநேர மாக காக்க வைத்து பின்னர் 'பலத்த' அறிவு ரைகளோடு சைக்கிளை கொடுத்தது. இனி சுவரொட்டிகளை எங்கும் ஒட்டக் கூடாது என்றும் இனி இந்த போலீசு நிலைய வளா கத்திற்குள் எது செய்தாலும் தகவல் கொடுத்து விட்டுத்தான் செய்ய வேண்டும் என்றும் 'சட்டம்' போட்டு அனுப்பியது.

உண்மையை, மக்களுக்கான கருத் தைச் சொல்லும்போது இத்தகையவர்களி டம் இருந்து எதிர்ப்புகள், மிரட்டல்கள் தாக் குதல்கள் வரும் என்பது எதிர்பார்த்த ஒன்றுதான். கோவையி லும், ம.க.இ.க. தோழர்கள் முடங்கிவிட வில்லை; அடங்கி விடவில்லை; முன்னிலும் வீச்சோடு பிரச்சாரத்தை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com



# அடக்குமுறைகளை மீறி தேர்தல் புறக்கணிப்பு இயக்கம்

ஒரு சில இடங்களைத் தவிர அநேக இடங்களில் புரட்சிகர அமைப்புக ளின் தேர்தல் புறக்கணிப்பு பிரச்சாரத்திற்கு போலீசால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

போலீசின அராஜகம், புரட்சிகர அமைப்புகள் மீதான அடக்குமுறை நாளுக்கு நாள் அப்பட்டமாக அரங்கேறி வருகிறது. எனினும் புரட்சிகர அமைப்புகள் இவற்றை முறியடித்து பிரச்சாரத்தை மேலும் வீச்சோடு எடுத்துச் சென்றன.

**திருச்சி:** புத்தூர் நாலு ரோட்டில் 7.6.91 அன்று தேர்தல் புறக்கணிப்பு, பொதுக்கூட்டம் ம.க.இ.க. சார்பாக நடத்தப் பட்டது. தோழர் முத்துவின் தலைமையில் தோழர்கள் காளியப்பன், மருதையன் ஆகி யோர் சிறப்புரை ஆற்றினர். ராஜீவ் கொலைக்குப் பின் அ.தி.மு.க. காங்கிரசு கட் சிக்காரர்கள் நடத்திய வன்முறைச் சம்பவங் களைப் பற்றியும் அதை எதிர்த்து நிற்க திரா ணியற்ற தி.மு.க. தலைமையின் கோழைத்த னத்தை அம்பலப்படுத்தியும் பேசப்பட்டது. மேலும் ராஜீவ் காந்தியின் பாசிச நடவடிக் கைகளை எடுத்துக்கூறி அவர் மரணத்திற் காக அனுதாபப்படத் தேவையில்லை என வும் தோழர்கள் விளக்கிப் பேசினர்.

**பாடாலூரில்** விவசாயிகள் விடுதலை முன்னணி சார்பாக 18.5.91 அன்று தேர்தல் புறக்கணிப்பு கூட்டம் நடத்தப்பட்டது. தோழர் தமிழ்மணி (ம.க.இ.க., திருச்சி) சிறப்புரையாற்றினார். பொதுக்கூட்டத்திற்கு சுமார் 750 பேர் கலந்து கொண்டு ஆதரவ ளித்தனர்.

**ஊரணி புரத்தில்** 13.5.91அன்று திரு வோணம் வட்டார வி.வி.மு., பொதுக்கூட் டம் நடத்தியது. தோழர் செல்வம் தலைமை யில் தோழர் தமிழ்மணி சிறப்புரையாற்றி னார். மேலும் எருமை மாட்டை முழுக்க அட்டைகளால் அலங்கரித்து மக்கள் மத்தி யில் அழைத்துச் செல்லப்பட்டு வேட்பாள ராக அறிமுகம் செய்யப்பட்ட புதிய வகைப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. பல்வேறு வட்டங்கள் சார்பாக "மகிஷவாணி"க்கு பூமாலைகள் போடப்பட்டது.

பெருவாரியான மக்கள் கூடி உற்சாக மாக ஆதரவளித்தனர்.

**கந்தர்வக் கோட்டையில்** 19.5.91 அன்று வி.வி.மு. சார்பாக பொதுக்கூட்டம் நடந்தது. தோழர் முத்தையன் தலைமையில் தோழர்கள் துரைமாணிக்கம் தோழர் ராம லிங்கம் (வழக்குரைஞர்) ஆகியோர் சிறப்பு ரையாற்றினர். சுமார் 200 பேர் கூடியிருந்து ஆதரவு தந்தனர். மேலும் சுவரெழுத்து பிரச் சாரமும் மேற்கொள்ளப்பட்டது.

**கடலூர்** மஞ்சை நகர் தண்ணீர் தொட்டி அருகில் 17.5.91 அன்று ம.க.இ.க. சார்பாக நடந்த பொதுக்கூட்டத்திற்கு தோழர் அருள் மணி தலைமை தாங்கினார். பகுதிப் பிரச் சினையைப் பற்றி தோழர் அருள்மணி பேசி யபின் தோழர் காளியப்பன் தேர்தலை புறக் கணிக்க வேண்டியதன் அவசியத்தை எளி மையாக விளக்கிப் பேசினார். கூட்டத்தின் இறுதியாக திருவெண்ணை நல்லூர் வி.வி.மு. தோழர்கள் கலை நிகழ்ச்சி நடத்தி னர்.

மேலும் பகுதியில் பரவலாக சுவரெ ழுத்து பிரச்சாரம் செய்யப்பட்டதை நிதி வசூ லின்போது மக்களே எடுத்துக்கூறி ஆதரவா கப் பேசியது குறிப்பிடத்தக்கது. மஞ்சை நகர் மைதானத்தின் மத்தியிலுள்ள சுவரில் வி.வி.மு. எழுதிய தேர்தல் புறக்கணிப்பு பிரச்சாரத்தின் மீது தி.மு.க. இளைஞர்கள் உதயசூரியன் சின்னத்தை வரைந்துவிட்டுச் சென்றனர். இது தொடர்பாக பகுதி தோழர் கள் தி.மு.க. வேட்பாளர் புகழேந்தியிடம் சென்று பேசி அவர்களையே சின்னத்தை மறைத்து வெள்ளையடித்து கொடுக்கும்படி செய்தனர்.

**போடியில்** வி.வி.மு. சார்பாக 3.5.91 அன்று பொதுக்கூட்டம் நடத்த தீர்மானித்து போலீசு நிலையத்தில் அனுமதிக்கு எழுதிக் கொடுக்கப்பட்டது. இரண்டு நாள் கழித்து போலீசு, தோழர்களை அழைத்து அனுமதி மறுத்து சட்ட - ஒழுங்கு பிரச்சினையை கார ணம் காட்டியது. தோழர்கள் எழுதி கொடுக் கும்படி கேட்டதற்கு முதலில் மறுத்து பின் எழுதிக் கொடுத்தது போலீசு.

எனவே தெருமுனைப் பிரச்சாரம், சுவ ரெழுத்து மூலமாக பிரச்சாரம் எடுத்துச் செல் லப்பட்டது.

**உத்தமபாளையத்தில்** 5.5.91 அன்று கூட்டம் நடத்த முறையாக போலீசு நிலையத்தில் மனு கொடுக்கப்பட்டது. மனுவை வாங்கிக் கொண்ட சப் இன்ஸ்பெக் டர் நாளை வந்து இன்ஸ்பெக்டரை பார்க்கும் படி கூறினார். மறுநாள் தோழர்கள் போலீசு நிலையத்திற்கு சென்ற பொழுது "வி.வி.மு - வினருக்கு கூட்டம் நடத்த அனுமதி அளித் தால் பயங்கர கலவரம் மூளும் என்று வலியு றுத்துகிறேன். எனவே அனுமதி மறுக்குமாறு கோருகிறேன்" என்று இன்ஸ்பெக்டர் எழுதி வைத்து விட்டுப் போனதைக் காட்டினார் கள். அதைப் படித்துப் பார்த்தேன் என்பதற் கான கையெழுத்து வாங்கிக் கொண்டனர் "பேச்சுரிமை, எழுத்துரிமை, சங்கம் கட்டும் உரிமை, கூட்டம் நடத்தும் உரிமை அனைவ ருக்கும் சமம் என்றும் இது ஜனநாயக நாடு என்றும் கூறுகிறீர்கள். ஆனால், இப்படி அனுமதி மறுக்கிறீர்களே?" என தோழர் கேட்டனர். அதற்கு ஏட்டு, "அதெல்லாம் சும்மாங்க... அதிகாரிங்க என்ன நினைக்கி றாங்களோ அதுதாங்க சட்டம்" என்றார். "நீங்கள் என்ன செய்தாலும் சரி, நாங்கள் கூட்டம் நடத்தத்தான் போகிறோம்" என்று கூறிய தோழர்களிடம், "நீங்க நல்லவர்கள் தான். எங்களுக்குத் தெரியும்... ஆனா, அதி காரி பயலுக திமிறு அடங்காது. எதையும் செய்வாங்க. மேலதிகாரி அதிகாரம் உங்க ளுக்குத் தெரியாதா என்ன?" என்றார் ஏட்டு. பின்னர் உத்தமபாளையத்தில் 2 இடத்தில் பகுதி மக்கள் ஆதரவுடன் பொதுக் கூட்டம் அனுமதி இல்லாமலேயே நடத்தப் பட்டது.

**கம்பம்** போலீசு நிலையத்தில் வி.வி.மு. சார்பாக 10.5.91 அன்று பகுதியில் பொதுக் கூட்டம் நடத்த அனுமதி கேட்கப்பட்டது. "இரண்டு ஒலிபெருக்கி மட்டும் பயன்படுத் திக் கொள்ளுங்கள். 10.30 மணிக்குள் கூட் டத்தை முடித்துக் கொள்ளுங்கள்" எனக் கூறி அனுமதி கொடுத்தார் சப் இன்ஸ்பெக் டர். 6.5.91 அன்று தோழர் வசந்தனை இன்ஸ்பெக்டர் அழைத்து "கம்பத்தில் எத் தனை பேர் இருப்பீர்கள்? தேவாரம், லோயர் கேம்ப் பகுதிகளில் எத்தனை பேர் இருப்பீர்கள்?" என கேட்டு விசாரணை நடத்தினார். தோழர்களின் சாதியைக் கேட்ட பொழுது தோழர் கூற மறுத்து உறுதியுடன் இருக்கவே பின்னர் அனுப்பிவிட்டார். 9.5.91 அன்று சப் இன்ஸ்பெக்டர் தோழரை கூப்பிட்டு "உங்கள் கூட்டத்தை கேன்சல் பண்ணிவிட்டோம்" என்றார். "நீங்கள்தான் அனுமதி கொடுத்தீங்க... என்ன காரணம்?" எனக் கேட்டதற்கு "நான் என்ன பண்ணு வது? உங்களுக்கு அனுமதி கொடுக்கக் கூடாது என்பது மேலிடத்து உத்தரவு" என் றார். பின்னர், "சட்டம் - ஒழுங்கு பிரச்சினை யால் அனுமதி மறுக்கப்படுகிறது" என எழு திக் கொடுத்தார்.

மறுநாள் கூட்டத்திற்கு அனுமதி மறுத்த போலீசாரின் அடாவடித்தனத்தை அம்பலப் படுத்தி பகுதியில் தட்டி வைக்கப்பட்டது. அன்று இரவு தட்டியை போலீசு திருடிச் சென்றுவிட்டது. கட்டப்பட்ட தட்டிக்கு எதிர் புறத்தில் ஒரு ஆங்கிலப்படத்தின் ஆபாச மான விளம்பரத்தட்டி இருந்தது. அதை அகற்ற வக்கற்ற போலீசு, உரிமை மறுப்பை தட்டிக்கேட்டு எழுதப்பட்ட தட்டியை திரு டிப்போனதை அம்பலப்படுத்தி சுவரொட்டி கள் எழுதி பகுதியெங்கும் ஒட்டப்பட்டது. இந்த சுவரொட்டிகளையும் கிழிக்க களத்தில் இறங்கிய இன்ஸ்பெக்டர் கனகராஜ் அனைத் தையும் கிழிக்க முடியாமல் சோர்வுற்று திட் டிக் கொண்டே போய்விட்டார்.

- **ராஜீவ் மரணத்துக்கு அனுதாபம் தேவையில்லை — பொதுக்கூட்டம்.**
- **வேட்பாளராக கழுதைகள்**
- **ஓட்டு வேட்டையாடிய எருமைகள்**



படிப்பகம்

www.padippakam.com

**தஞ்சை**யில் ஓட்டுக்கட்சிகளின் சுவர் விளம்பரங்களுடன் ம.க.இ.க.வின் புறக்கணிப்பு விளம்பரங்கள் போட்டியிட்டன. வடக்குவாசல் பகுதியில் நடைபெற்ற பொதுக்கூட்டம் இளைஞர்களின் பேராதரவைப் பெற்றது. ராஜீவ் கொலைக்குப்பின் பொதுக்கூட்டத்திற்கு அனுமதி மறுத்த தஞ்சை டி.எஸ்.பி, ஜனநாயகத்தை ம.க.இ.க. சீர்குலைப்பதாக ஆத்திரப்பட்டார். ஓட்டுக்கட்சிகளின் பீதிதான் போலீசின் ஆத்திரத்திற்குக் காரணம்.

**திருவையாறு** வட்ட வி.வி.மு. சார்பாக கண்டமங்கலம், வரகூர், திருக்காட்டுப்பள்ளி ஆகிய இடங்களில் முறையே 14, 15, 19.5.91 ஆகிய தேதிகளில் தேர்தல் புறக்கணிப்பு பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது.

மேலும் இப்பகுதியில் பரவலாக சுவரெழுத்து பிரச்சாரமும் செய்யப்பட்டது. வி.வி.மு. இடம் பிடித்து வைத்திருந்த சுவர்களில் எல்லாம் தி.மு.க. அ.தி.மு.க.வினர் தமது சின்னத்தை வரைந்து வைத்திருந்தார்கள். அதை வெள்ளையடித்து வி.வி.மு.வினர் எழுதிய பொழுது வம்புக்கு வந்தார்கள். தி.மு.க. கும்பல் ஒன்று தோழர் ஒருவரை தாக்கவும் முற்பட்டது. தோழர்கள் போலீசில் புகார் கொடுத்ததோடு, அதைக் கண்டித்தும் சுவரெழுத்து எழுதினார்கள். போலீசு சாமாதானம் செய்து வைப்பதாக கூறி நாடகமாடியது. பின்னர் தி.மு.க. வினரே பின்வாங்கிவிட்டனர். அ.தி.மு.க. வினரும் வம்புக்கு வந்து இவ்வாறே பின்வாங்கினர்.

**உசிலம்பட்டியில்** 14.5.91 அன்று வி.வி.மு. சார்பாக பொதுக் கூட்டம் நடைபெற்றது. சுற்றுப்புற கிராமங்களான முண்டுவேலம்பட்டி, ஆரியப்பட்டி; மேட்டுப்பட்டி, வலங்காகுளம், வாகைக்குளம் ஆகிய பகுதிகளிலும் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. அனைத்து கூட்டங்களுக்கும் மக்கள் திரளாக வந்து ஆதரவளித்தனர். ஆரியப்பட்டி பொதுக்கூட்டத்தில் ஒரு அ.தி.மு.க. ரௌடி கூட்டம் போடக்கூடாது என தகராறு செய்தான். அவனை மக்களே அப்புறப்படுத்தினர்.

மேலும், எழுமலை, பேரையூர், செக்கானூரணி ஆகிய பகுதிகளிலும் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. ஆண்டிபட்டியில் சுவரெழுத்து எழுதியபோது வி.வி.மு. தோழர்களுக்கும் அ.தி.மு.க. ரௌடிகளுக்கும் மோதல் ஏற்பட்டது. தோழர்களை போலீசு அடாவடித்தனமாக கைது செய்து கொண்டு போனதாலும் அவர்களை ஜாமீனில் எடுப்பதற்கான வேலைகளினாலும் இங்கு பொதுக்கூட்டம் நடத்த முடியாமல் போனது. திருமங்கலத்திலோ போலீசு காரணமேயில்லாமல் பொதுக் கூட்டத்திற்கு அனுமதிதர மறுத்துவிட்டது.

**தேவாரம்,** கோம்பை, பண்ணைபுரம் ஆகிய போலீசு நிலையத்தில் அவ்வப்பகுதியில் பொதுக்கூட்டம் நடத்த அனுமதி கேட்டு மறுக்கப்பட்டது.

பொதுக்கூட்டத்திற்கு போலீசு அனுமதி மறுத்ததால் தேவாரத்தில் 10.6.91 அன்றும், 11.6.91 பண்ணைபுரத்திலும் 'கழுதை ஊர்வலத்துடன்' தெருமுனைப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. கழுதையை முழக்க அட்டைகளாலும் மாலைகளாலும், அலங்கரித்து வேட்பாளராக அறிமுகப்படுத்தி தெரு தெருவாக இழுத்துச் செல்லப்பட்டு கழுதைக்கு ஓட்டுக் கேட்டார்கள் தோழர்கள்.

''இவரை நீங்கள் தேர்ந்தெடுத்தால்... சட்டசபையில் சேலையை கிழிக்க மாட்டார். எம்.எல்.ஏக்களை கடத்த மாட்டார். லஞ்சம் வாங்க மாட்டார். மற்ற வேட்பாளர்களை தேர்தல் நேரத்தில் மட்டும்தான் நீங்கள் பார்க்க முடியும்; ஆனால் இவரை நீங்கள் எப்பொழுதும் தெருவில் பார்க்கலாம்; ஆபாச சுவரொட்டிகள் எல்லாம் தின்று சேவை செய்வார்; கருப்புப் பணத்தை கண்டுபிடித்து சாப்பிடுவார். எனவே, இவருக்கு ஓட்டுப் போடுங்கள்'' என பிரச்சாரம் செய்து மாலையணிவித்தார்கள். தேவாரத்தில் சுமார் 400 பேரும் பண்ணைபுரத்தில் சுமார் 300 பேரும் பிரச்சாரத்தைக் கண்டு ஆதரித்தனர். பலர், ''இவர்கள் செய்வது சரிதான், கழுதையைக் காட்டிலும் மோசமானவர்கள்தான் எம்.எல்.ஏ.க்களும், எம்.பிக்களும்'' என்றனர்.



தேவாரம் பேருந்து நிலையத்தில் ஓட்டு வேட்டையாடும் வேட்பாளர் கழுதை.

**கள்ளக்குறிச்சி** வட்டத்தில் வி.வி.மு. கிளைகள் தோறும் சுவரெழுத்து, தட்டி, பதாகைகள் மூலம் தேர்தல் புறக்கணிப்பு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. சங்கராபுரத்தில் 30.4.91 அன்று தோழர் பழனி தலைமையில் தோழர்கள் சீனிவாசன், கதிர்வேலன், கண்ணன், மாணிக்கம் ஆகியோர் உரை நிகழ்த்தினர். கூட்ட இறுதியில் எழுச்சிமிகு கலை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. அடுத்து ரங்கப்பனூர் கிளையில் 20.5.91 அன்று பொதுக்கூட்டம் நடந்தது

8.6.91 அன்று ஊராங்கணி கிளையில் பொதுக்கூட்டம் தோழர் சங்கர் தலைமையில் நடந்தது.

**கோவை**யில் ம.க.இ.க. சார்பாக தேர்தல் புறக்கணிப்பு பொதுக் கூட்டம் நடத்த இரண்டு முறை விண்ணப்பிக்கப்பட்டும் போலீசு அனுமதி மறுத்தது, எனவே தோழர்கள் மற்ற வடிவங்களில் பிரச்சாரத்தை மேற்கொண்டனர். 13.6.91 அன்று தோழர்கள் முழக்க அட்டைகளை கழுத்தில் தொங்கவிட்டுக் கொண்டு வீடு வீடாகச் சென்று தேர்தல் புறக்கணிப்பு பிரச்சாரம் செய்தனர். மறுநாளும் செய்தபொழுது ஓட்டுக் கட்சிகளின் தூண்டுதலால் தோழர்கள் நசீம், கதிரவன், மணிவண்ணன், ஆனந்தன் ஆகியோர் போலீசாரால் கைது செய்யப்பட்டனர். போலீஸ் வேனில் தோழர்கள் முழக்கமிட்ட பொழுது போலீசு தடுத்து அடிப்போம் என மிரட்டிய போதிலும் தொடர்ந்து துணிவுடன் முழக்கமிட்டே சென்றனர். போலீசாரின் அடக்குமுறையை அம்பலப்படுத்தி பிற தோழர்கள் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

- **தட்டி திருடிய போலீசு**
- **போஸ்டர் கிழித்த இன்ஸ்பெக்டர்**
- **'ஓட்டுப் போடாதீர்கள்' என வீடுவீடாகப் பிரச்சாரம் -கோவைத் தோழர்கள் கைது!**



படிப்பகம்

www.padippakam.com




★ *தாங்கள் தொடர்ந்து தேர்தலைப் புறக்கணித்து வருகிறீர்கள். வன்னியர் என்ற சாதியையே அடிப்படையாக வைத்து உருவாகியுள்ள பாட்டாளி மக்கள் கட்சி (பா.ம.க.) தற்போதைய தேர்தல்களில் போட்டியிடுகிறது. பா.ம.க.வை எதிர்த்தால் உங்கள் அமைப்பு அழிந்துவிடும் என்பதால்தான் தங்கள் தேர்தல் முழக்கங்களில் பா.ம.க.வைப் பற்றி முழக்கங்கள் ஏதும் வெளியிடவில்லை என்று பிற கட்சிக்காரர்கள் கேலி பேசுகிறார்கள். இதுபற்றி பு.ஜ.வின் பதில் என்ன?*

— டி.பாலு, கடலூர்

☆ தேர்தல் புறக்கணிப்பு மைய முழக்கங்களில் பா.ம.க.வைப் பற்றியது எனக் குறிப்பாக இல்லைதான். பா.ம.க.வின் 'செல்வாக்கு' மாநிலம் தழுவியதாக இல்லை; வன்னியர் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் மட்டுமே உள்ளது. அடுத்து வேட்புமனுத் தாக்கலுக்கு ஓரிரு நாட்கள் முன்பு வரை 'மூன்றாவது அணி' என்கிற முறையில் தேர்தல் களத்தில் குதிக்கும் நம்பிக்கை எல்லாம் இழந்து தனிமைப்பட்ட நிலையிலேயே இருந்தது. கடைசி நேரத்தில் 'தீண்டத்தகாதவர்கள்' என விலக்கப்பட்ட அப்துல் சமது, பண்ருட்டி போன்றவர்களைச் சேர்த்துக் கொண்டு 'மூன்றாவது அணி' உருவாக்கப்பட்டது. எனவே பா.ம.க.வுக்கு எதிராக மைய முழக்கம் முன்வைக்கப்படவில்லை. ஆனால் தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சாரங்களில் பா.ம.க.வை எதிர்த்துப் பேசித்தான் வருகிறோம். இதனால் அழிந்து விடுவோம் என்கிற அச்சம் கிடையாது. ஆதரவுதான் கூடுகிறது. பா.ம.க.வைத் தொடர்ந்து புதிய ஜனநாயகம் அம்பலப்படுத்தி வருவதும், அதுகண்டு அதன் தலைமை ஆத்திரம் - பீதியுற்றிருப்பதுமே இதைக் காட்டுகிறது.

★ *இந்தத் தேர்தல் புறக்கணிப்பைத் தமிழ்நாடு முழுவதுமுள்ள புரட்சிகர அமைப்புகள், குறிப்பாக மு.இ.அ., மு.மா.ச, ம.ஜ.இ.க., செங்கொடி, ம.க.இ.க. போன்றவை இணைந்து செய்தால் என்ன?*

— டி.பாலு, கடலூர்.

☆ 'தேர்தல் புறக்கணிப்பு' என்கிற அம்சத்தில் உடன்பாடு இருந்தால் மட்டும் இணைந்து அதற்காக செயல்பட்டுவிட முடியாது. அதையே எந்த முழக்கங்கள், எந்த அரசியல் அடிப்படையில் எந்த முறையில் செய்வது என்பதிலும் உடன்பாடு தேவை. இப்போதுள்ள அரசியல், அமைப்புச் செயல்பாடுகளை வைத்துப் பார்க்கும்போது மேற்படி அமைப்புகள் இணைந்து தேர்தல் புறக்கணிப்பு இயக்கம் நடத்துவதற்கு அப்படிப்பட்ட பொது உடன்பாடு காண முடியாது என்று கருதுகிறோம். மேலும் மேற்படி அமைப்புகள் செயல்படும் பொதுவான பகுதிகள் மிக மிகக் குறைவாக உள்ளன. எனவே இணைந்து செயல்படுவது என்பது பெரும்பாலும் பெயரளவுக்கானதாகவே இருக்க முடியும்.

★ *தேர்தல் புறக்கணிப்பிற்கு காரணம், 'இந்தியப் பாராளுமன்ற, சட்டமன்றங்கள் புரட்சியில் ஏற்படவில்லை; காலனியாட்சியாளர்களின் வசதிக்காக உருவாக்கிக் கொண்டதே; எனவே நாம் பங்கேற்பதில்லை; புரட்சியில் ஏற்பட்டிருக்குமாயின் பங்கேற்போம்' என்று முற்போக்கு இளைஞர் அணி கூறுகிறது. நீங்களும் அப்படித்தான் கருதுகிறீர்களா?*

— விஷ்ணுப்பிரியன், மதுரை-12.

★ *"இந்தியப் பாராளுமன்றம் அதன் தன்மையில் முதலாளித்துவப் பாராளுமன்றமே அல்ல - அதனால் அதில் பங்கேற்பது கூடாது" என ம.ஜ.இ.க.வினர் சொல்லுகின்றனரே உங்களின் (மே 16-31) கேள்வி - பதில் பகுதியிலும் இதே தொனி உள்ளதே. இது குறித்து (முதலாளித்துவ பாராளுமன்றமா, இல்லையா?) உங்களின் நிலைப்பாடுதான் என்ன? முதலாளித்துவ பாராளுமன்றம் இல்லையென்றால் அதற்கான விளக்கம் தரவும்.*

— விசுவாமித்திரன், சென்னை-33.

☆ மு.இ.அ. மற்றும் ம.ஜ.இ.க. ஆகிய இரு அமைப்புகளும் தேர்தல் புறக்கணிப்புக்கு முன்வைக்கும் மேற்கண்ட காரணங்கள் ஒரே அடிப்படையிலானவை தாம். அவ்விரு அமைப்பினரும் ஒன்றாக இருந்த போது வெளிவந்த சமரன் (1978 டிசம்பர்) இதழில் அவர்களின் தலைமை எழுதியிருந்தது. அந்தக் கருத்துக்கு திரிபுவாதியாகச் சீரழிந்து போலிக் கம்யூனிஸ்டு கட்சியில் இணைந்திருந்த தியாகராஜன் 'நக்சலைட்டுகளுக்கு ஒரு சிறைப் பறவையின் வேண்டுகோள்' என்ற சிறுவெளியீடு மூலம் மறுப்புரைத்தார். சமரன் மற்றும் தியாகராஜன் ஆகிய இருசாராருமே முன்வைத்த வாதப்பிரதிவாதங்கள் எவ்வாறு தவறானவை என 1983 ஏப்ரலில் நாம் எழுதினோம். ஆனால் இன்னமும் மு.இ.அ. மற்றும் ம.ஜ.இ.க.வினர் அதே தவறான கருத்தில் இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் அவர்களது கருத்தின் அடிப்படையில் இப்போதும் நாம் தேர்தல் புறக்கணிப்பு நிலைப்பாடு எடுக்கவில்லை. நாம் வகுத்துக் கொண்டுள்ள அரசியல், இராணுவ யுத்த தந்திரங்களுக்குத் தேர்தல் பங்கேற்பு என்பது பொருத்தமானதாக இல்லை என்பதாலேயே புறக்கணிக்கிறோம்.

'இந்தியாவில் தற்போது நிலவுவது முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சிமுறை; ஆனால் அது இந்தியாவின் அரைக் காலனிய - அரைநிலப் பிரபுத்துவத் தன்மைக்கேற்ப நிறுவப்பட்டுள்ளது' என்று நாம் முடிவு செய்து முன்வைத்துப் பத்தாண்டுகளுக்கு மேலாகிறது. நம்முடைய இந்த நிலைப்பாடே கூட தேர்தலில் பங்கேற்கும் உள்நோக்கத்துடன் வைக்கப்பட்டதென மு.இ.அ. மற்றும் ம.ஜ.இ.க.வினர் அவதூறும் ஆரூடமும் சொன்னார்கள். புதிய ஜனநாயகம் ('91 மே 16-31) இதழின் கேள்வி - பதில் பகுதியில் இந்திய நாடாளுமன்றத்தின் தன்மை பற்றி நாம் எதுவும் எழுதவில்லை. தேர்தலில் பங்கேற்பதற்கும் புறக்கணிப்பதற்கும் லெனின் முன்வைத்த நிபந்தனைகள், தயாரிப்புகள், தருணங்கள் எல்லாம் ஒரே சமயத்தில் நாடு முழுவதும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான ஆயுதந்தாங்கிய பேரெழுச்சிக்கானவை என்பதுதான் நமது வாதம். ஆனால் "விசுவாமித்திரன்", "புதிய சாணக்கியன்" என்று வெவ்வேறு பெயர்களில் புகுந்து தொண்டு கேள்விகள் கேட்கும் வாசகர் தான் சூட்டிக் கொண்ட பெயர்களுக்கேற்ப பு.ஜ.வின் வரிகளுக்கிடையே வாசித்து ஏனோ பொருள் கற்பிக்கிறார்.

★ *பாராளுமன்றத்தில் பங்கேற்பதா? புறக்கணிப்பதா? என்ற விசயத்தைத் தீர்மானிப்பதில் குறிப்பிட்ட நாட்டின் பாராளுமன்றம் அரசியல் ரீதியில் காலாவதியாகி விட்டதா என்பது கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமான பிரச்சினையா? இல்லையா? அவசியம் எனில் இந்தியப் பாராளுமன்றம் அரசியல் ரீதியில் காலாவதி ஆகிவிட்டதா?*

— "மார்க்சீயப் படிப்பு வட்டம்", சென்னை.

☆ பாராளுமன்றத்தில் பங்கேற்பதா? புறக்கணிப்பதா? என்ற விசயத்தைத் தீர்மானிப்பதில் குறிப்பிட்ட நாட்டின் பாராளுமன்றம் அரசியல் ரீதியில் காலாவதியாகிவிட்டதா என்பது கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியமான பிரச்சினைதான். இந்தியப் பாராளுமன்றம் அரசியல் ரீதியில் காலாவதி ஆகிவிட்டதென்றும் நாம் கருதவில்லை. அரசியல் ரீதியில் காலாவதியாகவில்லை என்றாலே பாராளுமன்றத்தில் பங்கேற்றுத்தான் அதை சாதிக்க வேண்டும் என்பது தவறானதாகும்.

பாராளுமன்ற முறை அரசியல் ரீதியில் காலாவதியாகி விட்டதாக முடிவுக்கு வர பின்வரும் நான்கு தேவைகள் முன்வைக்கப்படுகின்றன. 1. பாராளுமன்றங்களை அகற்றிடும் பலத்தைப் பாட்டாளி வர்க்கக் கட்சி பெற்றிருக்க வேண்டும். 2. பாராளுமன்றங்களுக்கு வெளியே சோவியத் அமைப்புகள் இருக்க வேண்டும். 3. பெருந்திரளான உழைப்பாளி மக்கள் பாராளுமன்றத்தைக் கலைக்கவும், அரசியல், சித்தாந்த ரீதியிலும் நடைமுறையிலும் சோவியத் அமைப்பை ஏற்றுக் கொள்ளவும் தயாராய் இருக்க வேண்டும். 4. கம்யூனிஸ்ட்டுகளாகிய நாம் அரசு அதிகாரத்தைக் கைப்பற்றி சோவியத்துக்களுக்



படிப்பகம்

www.padippakam.com

**நாடு தழுவிய புரட்சிப் பேரலையை உருவாக்கி, பாராளுமன்ற முறையை அரசியல் ரீதியில் காலாவதியாகச் செய்வதற்கான இரத்தம் சிந்தும் அரசியலை - அரசியல் போராட்டத்தை முக்கிய அம்சமாகக் கொண்டிருக்கிறது நீண்டகால மக்கள் யுத்தப் பாதை. அதன் அரசியல் முக்கியத்துவத்தைக் காண மறுக்கும் சித்தாந்தக் குருடர்கள், அதை இராணுவ யுத்த தந்திரம் பற்றிய விசயம்தான் என்று குறுக்கிக் கொச்சைப் படுத்துகிறார்கள்.**

காக உழைப்பாளி மக்கள் மட்டுமே பங்கு கொள்ளும் தேர்தல்களை நடத்த முடிகின்ற நிலைமை இருக்கவேண்டும். இந்நிலைமைகள் இல்லாவிட்டால், கிராமப்புறத்திலும் நகரப்புறத்திலும் ஓரளவுக்குப் பெரிய அளவிலான சிறுபான்மை உழைக்கும் மக்கள் பாராளுமன்ற முறை மீது நம்பிக்கை கொண்டிருந்தால் கூட அந்த நாட்டில் பாராளுமன்ற முறை அரசியல் ரீதியில் காலாவதியாகவில்லை என நிச்சயமாகத் தீர்மானிக்க முடியும் ('91 கேடயம், மே 1-15)

லெனினது மேற்கோள்களில் இருந்து தொகுத்துள்ள இந்த நிபந்தனைகள், வரையறுப்புகள் கிட்டத்தட்ட நாடு முழுவதும் ஒரே சமயத்தில் பூர்த்தியாகி புரட்சிகரச் சூழ்நிலையை உருவாக்குபவை என்பது அவற்றிலேயே தெளிவாக உள்ளது. அதாவது பாராளுமன்ற முறை அரசியல் ரீதியில் காலாவதியாகச் செய்வதற்கு நாடு தழுவிய புரட்சிப் பேரலையை உருவாக்க வேண்டும். இதைச் சாதிப்பதற்கான வழிமுறையாக சட்டபூர்வமாகவும் சட்டவிரோதமாகவும், பாராளுமன்றத்துக்குள்ளேயும் வெளியேயும் நீண்டகாலத்துக்கு அரசியல் போராட்டங்கள் நடத்த வேண்டும் என்கிறார் லெனின். ஆனால் சமச்சீரற்ற - ஏற்றதாழ்வான சமுதாயத் தன்மையும் வளர்ச்சிப் போக்கும் உடைய அரைக்காலனிய - அரை நிலப்பிரபுத்துவ நாடான இந்தியாவில் இந்த வழிமுறைகளைப் பின்பற்றி நாடு தழுவியதொரு புரட்சிப் பேரலையை உருவாக்க முடியாது; பாராளுமன்ற முறையை இவ்வாறான முறைகளினால் அரசியல் ரீதியில் காலாவதியாகச் செய்யவும் முடியாது. அலைந்து திரியும் கொரில்லா நடவடிக்கைகள், தனிநபர் பயங்கரவாதச் செயல்கள், போர்க்குணமிக்க பொருளாதாரவாதத் தாக்குதல்களாலும் நாடு தழுவிய புரட்சிப் பேரலையை உருவாக்கவோ, பாராளுமன்ற முறையை அரசியல் ரீதியில் காலாவதியாகச் செய்யவோ முடியாது.

இதற்குமாறாக, புரட்சிகர நிலைமைகளின் ஏற்றதாழ்வான வளர்ச்சிக்கேற்ப சாத்தியமான கிராமப்புறங்களில் உள்ளூர் ஆயுதந்தாங்கிய எழுச்சிகள் நடத்தி செஞ்சேனையையும் மக்கள் அதிகார அமைப்புகளையும் கொரில்லா தளப் பிரதேசங்களையும் நிறுவிப் படிப்படியாக விரிவடையச் செய்து முன்னேறி, நகர்ப்புறங்களைச் சுற்றிவளைத்து நாடு தழுவிய புரட்சிப் பேரலையை உருவாக்குவதுதான் நமது நாட்டுக்குப் பொருத்தமான - சரியான வழிமுறையாக இருக்க முடியும். இந்த முறையில் தான் பாராளுமன்ற முறையை அரசியல் ரீதியில் காலாவதியாகச் செய்ய முடியும். ஏனெனில் ஏற்றதாழ்வான சமுதாயத் தன்மையும் வளர்ச்சிப்போக்கும் உடைய நமது நாட்டில் இவ்வாறு செய்வதன் மூலம்தான் நாடு முழுவதுமுள்ள புரட்சிகர மக்களின் நம்பிக்கையைக் கட்டி வளர்க்க முடியும்; (அக்டோபர் புரட்சியின் வெற்றியும் சோவியத் ஒன்றியம் அமைந்ததும் உலகம் முழுவதும் ஏற்படுத்திய புரட்சிகர எழுச்சி, நம்பிக்கையோடு இதை மாவோ ஒப்பீடு செய்கிறார்) இவ்வாறுதான் ஆளும் வர்க்கங்களுக்குக் கடும் நெருக்கடிகள் கொடுத்து, அவர்களது அடித்தளத்தை ஆட்டங்காணச் செய்து, அவர்களது வீழ்ச்சியைத் துரிதப்படுத்த முடியும். இது நீண்டகால மக்கள் யுத்தப்பாதை என்கிற யுத்த தந்திரத்தை அடிப்படையாகக் கொண்டது.

லெனின் முன்வைத்த வழிமுறை ஆயுதந்தாங்கிய பேரெழுச்சிப் பாதை என்கிற யுத்த தந்திரத்தை அடிப்படையாகக் கொண்டது. இரண்டுமே நாடு தழுவிய புரட்சிப் பேரலையை உருவாக்கும் நோக்கமுடையவைதாம்; எனினும் இரண்டினது வழிமுறைகளும் பாதையும் வேறுவேறானவை என்பதை ஒப்பிட்டுப் பார்க்கும் எவரும் அறியமுடியும். லெனின் முன்வைத்த பாதையின்படி நாடுதழுவிய அளவுக்குப் புரட்சிப்பேரலை உருவாகி, பாராளுமன்ற முறை அரசியல் ரீதியில் காலாவதியாகாதவரை நாட்டின் எந்தவொரு பகுதியிலும் - சாதகமான நிலைமைகள் இருப்பினும் - அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான தாக்குதல் தன்மையுடைய செயல் தந்திரமோ, நடவடிக்கைகளோ கிடையாது, கூடாது; ஒரு நீண்டகாலத்துக்குப் புரட்சிப் பேரலையை உருவாக்கி பாராளுமன்ற முறை அரசியல் ரீதியில் காலாவதியாகச் செய்வதற்கான தயாரிப்பும் அதற்கான 'இரத்தம் சிந்தாத' அரசியல் போராட்டமும் தான் இருக்கும். அதற்குப் பொருத்தமானது என்கிற முறையில் பாராளுமன்றப் போராட்ட முறைகள் பின்பற்றப்படுகின்றன.

ஆனால் மாவோ முன்வைத்த நீண்ட கால மக்கள் யுத்தப் பாதையின்படி நாடுதழுவிய புரட்சிப் பேரலை உருவாக்காத போதே, பாராளுமன்றமுறை காலாவதியாவதற்கான நிலைமைகள் இல்லாத போதே சாத்தியமான ஒரு சில பகுதிகளிலாவது அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான தாக்குதல் தன்மையுடைய செயல் தந்திரமும் நடவடிக்கைகளும் அவசியமானவை; சரியானவை. அதாவது ஒரு நாடு தழுவிய புரட்சிப் பேரலையை உருவாக்குவதற்கே, பாராளுமன்ற முறையைக் காலாவதியாகச் செய்வதற்கே முன்தேவையாக உள்ளவை இத்தகைய செயல் தந்திரமும் நடவடிக்கைகளும். இதற்குப் பொருத்தமற்றது என்கிற முறையில் தான் பாராளுமன்றப் புறக்கணிப்பை நாம் மேற்கொள்கிறோம்.

நாடு தழுவிய புரட்சிப் பேரலையை உருவாக்கி, பாராளுமன்ற முறையை அரசியல் ரீதியில் காலாவதியாகச் செய்வதற்கான இரத்தம் சிந்தும் அரசியலை - அரசியல் போராட்டத்தை முக்கிய அம்சமாகக் கொண்டிருக்கிறது நீண்ட கால மக்கள் யுத்தப்பாதை. இந்த வகையில் அரசியல் யுத்த தந்திரம் மற்றும் செயல் தந்திரங்களை நிறைவேற்றுவதற்கான அடிப்படை வழிமுறையாகவும் அவற்றோடு நெருக்கமாக இணைந்தும் இருக்கிறது நீண்டகால மக்கள் யுத்தப்பாதை. இந்த இணைப்பையும் அரசியல் முக்கியத்துவத்தையும் காண மறுக்கும் சித்தாந்தக் குருடர்கள் நீண்ட கால மக்கள் யுத்தப்பாதை இராணுவ யுத்த தந்திரம் பற்றிய விசயம்தான் என்று அதைக் குறுக்கிக் கொச்சைப் படுத்துகிறார்கள். இராணுவ யுத்த தந்திரத்திலிருந்து அரசியல் யுத்த தந்திரம் பற்றிய விசயத்தைத் தீர்மானிக்க முடியாது; இரண்டையும் தொடர்பு படுத்துவது லெனினியத்துக்கு எதிரானது என்கிறார்கள். உண்மையில் அவர்கள் ஒரு நாட்டின் பருண்மையான நிலைமைகளுக்கும், அந்நாட்டின் புரட்சிக்கான அரசியல், இராணுவ யுத்த தந்திரங்கள் - செயல் தந்திரங்களுக்கும் தொடர்பற்ற முறையில் லெனினது மேற்கோள்களைக் கேடாகப் பயன்படுத்துவதுதான் லெனினியத்துக்கு எதிரானது. ●

## பாட்டாளி மக்கள் கட்சியின் பகல் வேடம் வன்னியர்சங்க தலைவர் வாக்கு மூலம்

பாட்டாளி மக்கள் கட்சியை வன்னியர் கட்சி என்று கூறுவதற்காக புதிய ஜனநாயகம் உட்பட மற்றவர் மீது ஆவேசமாகப் பாய்ந்து அவதூறு செய்கிறார்கள் அக்கட்சியினர். ஆதிதிராவிடரை ரட்சிக்க வந்த மீட்பராகப் பீற்றிக் கொள்கிறார்கள். உண்மை என்ன? இதோ நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் பற்றிய வன்னிய சங்கத் தலைவர் சா.சுப்பிரமணியத்தின் வாக்குமூலம்:

''ஆதிதிராவிடருக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக கட்சி மேற்கொண்ட இயக்கம் மற்றும் ஆட்சிக்கு வந்தால் ஆதிதிராவிடரை முதல்வராக்குவோம் என்கிற வாக்குறுதி கொடுத்தது ஆகியவை காரணமாக வன்னியர்கள் பாட்டாளி மக்கள் கட்சியை ஒதுக்கித் தள்ளிவிட்டார்கள். இதனால் அக்கட்சி படுதோல்வி அடைந்தது. மற்றொருபுறம் பா.ம.க.வின் இம்மாதிரியான செயல்களில் ஆதிதிராவிடர்களுக்கும் நம்பிக்கை ஏற்படவில்லை. எனவே இரண்டு சமூகமுமே பா.ம.க.வுக்கு வோட்டுப் போடவில்லை.''

ஒட்டுக்காக பா.ம.க. ஆதிதிராவிடரை ஏய்க்க முனையும் அதே சமயம் வன்னியர்கள் என்ன செய்கிறார்கள் தெரியுமா? தர்மபுரி மாவட்டம், மொரப்பூர் தொகுதி வேப்பிலைப்பட்டி கிராமத்தில், ''ஆதிதிராவிடருடன் ஒரே வரிசையில் நின்று ஓட்டுப் போட மாட்டோம்; தனிவாக்குச் சாவடி வேண்டும்'' என்று கோரி தேர்தலைப் புறக்கணிப்பதாக வன்னிய சாதியினர் அறிவித்தனர். கடந்த ஆண்டு அங்கு குண்டு வெடித்ததைக் காட்டி மிரட்டி ஓட்டுப் போடும்படி செய்தார் கலெக்டர்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா.சண்முகராசு, 21, பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
அச்சிடுபவர் : நீட் பிரிண்டர்ஸ், 2 ஔலியா சாகிப் முதல் சந்து, எல்லிஸ் சாலை, சென்னை - 600 002.

படிப்பகம்

www.padippakam.com





# இதுதான் இன்றைய இந்தியா

அலறியடித்துக் கொண்டு ஓடிவரும் இவ்விளம் பிஞ்சை துரத்துவது எது? இப்பிஞ்சு மூளைக்கு எட்டாத மரணபயம்! திரிபுராவில் காங்கிரசு பாசிச குண்டர்கள் நடத்திய வன்முறை! மே 23ந் தேதி நடைபெற இருந்த தேர்தல் வன்முறைக்கென தயாராக வைக்கப்பட்டு இருந்த காங். குண்டர் படை; 21ந் தேதியே ராஜீவ் கொல்லப்பட்டதை சாக்காக வைத்து வன்முறையை கட்டவிழ்த்துவிட்டது. பிஞ்சுக் குழந்தைகள் பெண்கள், முதியவர்கள் எனப் பாராமல் வீடுகளில் புகுந்து தாக்கியது. எதிர்க்கட்சிக்காரர்களை மேலும் வெறியோடு தாக்கியது. 13 பேர் மாண்டார்கள்; 100 பேர் காயமுற்றார்கள்! 400க்கும் மேற்பட்ட கடைகள் தீயிடப்பட்டன; சூறையாடப்பட்டன.





இதோ இவர்கள் பஞ்சாபில் போட்டியிடும் சுயேச்சை வேட்பாளர்கள்! எந்நேரத்திலும் சுட்டுக் கொல்லப்படலாம் என்பதால் ஆடுகளைப்போல் அறையில் போட்டு பூட்டி ஆயுத போலீசை வைத்து பாதுகாப்பு கொடுக்கிறது அரசு. வேட்புமனு தாக்கலான நாளிலிருந்து இன்றுவரை 20 வேட்பாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். ஆயுதமேந்திய பாதுகாவலர்கள் புடை சூழத்தான் இங்கு தேர்தல் பிரச்சாரமே செய்ய முடிகிறது. இதற்கு அரசு அனுமதித்திருந்தும் கூட மரணபயம் கவ்விய முகத்தோடு தான் உலா வருகிறார்கள்.

திரிபுராவில் வன்முறையை கட்டவிழ்த்துவிடும் காங்கிரசு, சீக்கிய வன்முறையைச் சுட்டிக்காட்டி பஞ்சாப் தேர்தலை புறக்கணிக்கிறது. திரிபுராவில் காங்கிரசு குண்டர்களின் வன்முறையைக் காட்டி தேர்தலைபுறக்கணிக்கும் போலிக் கம்யூனிஸ்டுகள், காங்கிரசோடு சேர்ந்து பஞ்சாபில் வன்முறை என கூச்சலிட்டு தேர்தலைப் புறக்கணிக்கிறார்கள். கிரிமினல்களையும், மஃபியா கும்பல் தலைவனையும் இத்தேர்தலில் அதிகம் நிறுத்தியுள்ள பாரதீய ஜனதா கட்சி, காங்கிரசு கிரிமினல்களைக் காட்டி திரிபுரா தேர்தலைப் புறக்கணிக்கிறது.

என்ன ஆனாலும் இருமாநிலங்களிலும் தேர்தலை நடத்தியே தீருவோம் என ஒற்றைக் காலில் நிற்கிறது சேஷன் - சந்திரசேகா கும்பல். மேலும் மேலும் கூடுதலான ராணுவத்தை அனுப்பி அரசு பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விடுகிறது. வாக்காளர்கள் பயமின்றி ஓட்டுப்போடுவதற்கென கூறி பஞ்சாபை கலவரப்பகுதியாக வேறு அறிவித்துள்ளது.

வன்முறையாளர்களால் வன்முறையை ஒழிக்க முடியுமா என்ன? அரசு பயங்கரவாதமோ, ஓட்டுக்கட்சிகளின் வெற்றுக் கூச்சலோ வன்முறைக்கு தீர்வானதாக வரலாறு இல்லை. அதை வளர்க்கவே செய்யும். இந்நிலை தொடரத்தான் வேண்டுமா?

படிப்பகம்